KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
AAXEL

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

மலர்:- 33, 20 February 2026 இதழ்:- 07

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# தங்களைத் தாங்களே திரட்ட முடியாத கட்சிகள் எப்படி தமிழ் மக்களைத் திரட்ட முடியும்?

ஐயா சிறீதரன் அவர்களைப் பற்றி நாலு வசனம் நல்லதாக எழுதினால் கட்சித் தீர்மான த்தை மீறியதாக எடுத்து கொள்வீர்களா? உங்களால் ஏன் மக்களின் மனதை வெல்ல முடியவில்லை என்பதை அமைதியாக இருக்க கூடிய நேரங்களில் யோசித்து பார்த்தது ண்டா? உண்மையில் நீங்களும் சிறீதரனும் தலைமை பதவிக்கு சண்டை பிடிக்க வில்லை என்றால் இன்று கட்சியின் நிலை எப்படி இருக்கும் என்று நினைத்து பாருங் கள்? ஒரு இனத்தின் விடுதலைக்காகவும் இருப்பிற்காகவும் பாடுபட வேண்டிய கட்சி ஒன்று தலைமைப் பதவிக்காக நீதிமன்றத்தில் நின்றால் (19ம் பக்கம் பார்க்க)



# சமஷ்டி அரசியல் அடுப்புக்குள் சட்டி!



# காங்கிரஸ் கட்சி கூட்டணியை உடைத்தால் தி.மு.க.என்ன செய்யும்?

விரைவில் நடைபெற உள்ள 2026ஆம் ஆண்டு தமிழக சட்டசபை தேர்தலுக்குப் பிறகு 'ஆட்சியில் பங்கு அதிகாரத்தில் பங்கு என்ற முழக்கத்தை காங்கிரஸின் ஒரு பகுதியினர் தீவிரமாக முன் வைத்துள்ளனர். தி.மு.க - காங்கிரஸ் கூட்டணி எதை நோக்கிச் செல்கிறது? என்ற கேள்வி உள்ள நிலையில் அந்த உறவு மிகக் குழப்பமான சூழலை நோக்கிச் செல்வதாகச் சொல்கிறார் மூத்த பத்திரிகையாளர் குபேந்திரன்.

மதுரை மாவட்டம் திருப்பரங் குன்றத்தில் ஞாயிற்றுக்கிழமையன்று (பிப்ரவரி 15) நடந்த காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் கூட்டம் ஒன்றில் 'கூட்டணியில் கூடுதல் இடங்கள், அதிகாரத்தில் பங்கு' என பல கோஷங்களை முன் வைத்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. (20ம்பக்கம் பார்க்க)

# அரசாங்கத்தின் மீதான நேர்மறை எண்ணம் அதிகரிப்பு! வெரிட்டே ரிசர்ச் அமைப்பின் சமீபத்திய ஆய்வில் தகவல்!

பொருளாதார நம்பிக்கைச் சுட்டெண் +36 ஆக உயர்ந்துள்ளது இது கடந்த நான்கு வருட கால கருத்துக் கணிப்புகளில் பதிவான மிக உயர்ந்த மட்டமாகும் வெரிட்டே ரிசர்ச் (Verité Research) அமைப்பின் சமீபத்திய கலப் (Gallup) முறையிலான 'தேசத்தின் மன நிலை' (Mood of the Nation) கருத்துக் கணிப்பில் 2026 பிப்ரவரி தொடக்கத்தில் அரசாங்கத்தின் (12ம் பக்கம் பார்க்க)

# தமிழ் அரசியல் பிரச்சனைக்குத் தீர்வு இன்றி நாட்டின் முன்னேற்றம் சாத்தியமில்லையென பீரிஸ் கண்டு பிடிப்பு!

தமிழ் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தி விட்டு அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்ற ஆரம்பக் கால நிலைப்பாடு பிற்பட்ட காலத்தில் தவறாக அமைந்தது. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் நாடு என்ற ரீதியில் ஒரு போதும் முன்னேற்றமடைய முடியாதென முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கை மன்றக்கல்லூரியில் வன்டெக்ஸ்ட் இன்னிஸியேட்வின் ஏற்பாட்டில் 12 பெப் 206 வியாழக்கிழமை நடைபெற்ற அவரது 'இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுப்பு: ஒரு உள்ளக பார்வை' எனும் நூல் பற்றி நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், புதிய அரசியலமைப்பை உருவாக்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால் இன்றளவில் புதிய அரசியல் உருவாக்கத்துக்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை கூட முன்னெடுக்கவில்லை. குறைந்தபட்சம் ஒரு கருத்தாடல் கூட இடம்பெறவில்லை.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. அரசியலமைப்பு தொடர்பில் மக்களின் சிந்தனையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மக்கள் முற்போக்கான நிலைப்பாட்டில் உள்ளார்கள். ஆகவே புதிய யாப்புருவாக்கத்துக்கான நடவடிக்கைகளை அரசாங்கம் சிறந்த முறையில் வெளிப்படையாக முன்னெடுக்கலாம்.

இந்தியாவின் தலையீட்டுடன் தான் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் அதிகார பகிர்வு தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளில் இந்தியா விடுதலை புலிகள் அமைப்பை ஒரு பங்காளியாக கொள்ளவில்லை. யுத்தம் முடிவடைந்தவுடன்



அந்த மக்களின் அடிப்படை வாழ்வாதார பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.அதன் பின்னர் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்று ஆரம்பத்தில் கருதப்பட்டது. ஆனால் அது தவறென்று பிற்பட்ட காலத்தில் உணரப்பட்டது.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் நாடு என்று ரீதியில் முன்னேற்றமடைய முடியாது. இந்த பிரச்சினைக்கு அரசாங்கம் அரசியலமைப்பின் ஊடாக முரண்பாடற்ற வகையில் தீர்வு காண வேண்டும் என்றார்.

மாறி மாறி பதவிக்கு வந்த அனைத்து அரசாங்கத்திலும் முக்கிய அமைச்சராக இருந்து விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தை முதல் சம்பந்தருடனான பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு பேரினவாதச் சிந்தனையை விட்டுக் கொடுக்காத இவர் இன்று வேதம் ஓதுகின்றார்.

## ஈரானில் ஆட்சி மாற்றம் தேவை - டிரம்ப்



ஈரானின் தற்போதைய ஆட்சி முறையில் மாற்றம் ஏற்படுவது நடக்கக்கூடிய மிகச்சிறந்த விடயம்' என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரானின் தற்போதைய அரசியல் சூழல் குறித்து கருத்து வெளியிடும் போதே டிரம்ப் இதனைத் குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கபப்டுகின்றது.

எனினும் ஈரானை வழிநடத்துவதற்கு தான் விரும்பும் நபர் யார் என்பதை பகிரங்கமாக வெளிப்படுத்த அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார். அதேசமயம் ,ஈரானில் ஆட்சியைப் பொறுப்பேற்கக் கூடிய தகுதியான 'ஒரு குழுவினர் இருக்கின்றார்கள் என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# ஓய்வு காலத்தைக் கழிக்க உலகில் சிறந்த நாடு இலங்கை! சர்வதேச பயண சஞ்சிகையான Traval+Leisure தகவல்!

2026 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற பின்னர் வாழ்வதற்கு உலகின் மிகவும் மலிவான மற்றும் வசதியான நாடாக இலங்கை பெயரிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. புகழ் பெற்ற சர்வதேச பயண சஞ்சிகையான Travel + Leisure இந்தத் தரவரிசையை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு காரணமாக பல முதியவர்கள் தமது ஓய்வுக் காலத் தைத் தள்ளிப்போட்டு வரும் நிலையில், இலங்கையின் இந்த அங்கீகாரம் சர்வதேச ரீதியில் கவனத்தை ஈர்த்துள்ளது.

அந்தவகையில் ஒரு தம்பதி மாதம் சுமார் 2,200 அமெரிக்க டொலர் செலவில் தங்குமிடம், உணவு, போக்குவரத்து, மருத்துவம் மற்றும் பொழுதுபோக்கு என அனைத்து வசதி களுடன் சௌகரியமாக வாழ முடியும் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



கடற்கரையோர வில்லாக்கள் மாதம் 400 டொலருக்கும் குறைவான வாடகையில் கிடைக்கின்றன. மின்சாரம் உள்ளிட்ட ஏனைய கட்டணங்களும் மிகக் குறைவு. உள்ளூர் சந்தைகளில் புதிய மீன் மற்றும் காய்கறிகள் மிகக் குறைந்த விலையில் கிடைக்கின்றன. இருவருக்கான உயர்தர மூன்று நேர உணவு சுமார் 50 டொலர் செலவில் அமையும்.

நீண்ட தூர தொடருந்து பயணம் உள்ளிட்ட பொதுப் போக்குவரத்து வசதிகள் ஒரு சில டொலர்களிலேயே சாத்திய மாகின்றன. கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனைகள் நவீன வசதிகள் மற்றும் நம்பகமான மருத்துவ சேவைகளை வழங்குகின்றன. அத்துடன், ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் ஓய்வுக்கால விசா பெறுவது மிகவும் எளிதானது மற்றும் மலிவானது எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கையைத் தொடர்ந்து வியட்நாம், தாய்லாந்து, பாலி (இந்தோனேசியா) மற்றும் மலேசியா ஆகிய நாடுகள் 2026 ஆம் ஆண்டிற்கான மலிவான ஓய்வுக்கால இடங்களின் பட்டியலில் இடம்பிடித்துள்ளன. வாழ்க்கைச் செலவு அதிகரிப் பால் கவலையடைந்துள்ள சர்வதேச முதியவர்களுக்கு, தரம் குறைந்த வாழ்க்கை முறையைத் தெரிவு செய்யாமல், குறைந்த செலவில் நிறைவான வாழ்க்கையை வாழ இலங்கை சிறந்த இடமாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# தமிழ்அரசியல் கட்சித் தலைவர்களுடன் பிரிட்டன் துணைப் பிரதமர் சந்திப்பு!



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐக்கிய இராச்சியத் தின் துணைப் பிரதமர் டேவிட் லாமி, தமிழ்த் அரசியல் கட்சித் தலைவர்களுடன் 17 பெப் 2026 சந்தித்து முக்கிய கலந்துரையாடலில் ஈடுபட்டார். இந்த சந்திப்பில் இலங்கைக் கான பிரிட்டனின் உயர்ஸ்தானிகர் ஆண்ட்றூ பற்றிக் உடனி ருந்தார்.

கலந்துரையாடலின் போது நல்லிணக்கம், சர்வதேச நீதியியல் (Transnational Justice), மற்றும் தமிழர் சமூகங்கள் எதிர் கொள்ளும் தொடர்ச்சியான பிரச்சினைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் பிரதிநிதிகளின் குரல்கள் தொடர்ந்து கேட்கப்படுவதை உறுதிப்படுத்துவதிலும், நீதி மற்றும் சமத்துவத்தை முன்னிறு த்துவதிலும், அர்த்தமுள்ள முன்னேற்றத்துக்கு ஆதரவு வழங்குவதிலும் ஐக்கிய இராச்சியம் உறுதியாக இருப்பதாக பிரிட்டன் தரப்பு வலியுறுத்தியுள்ளது. இலங்கையில் நிலையான நல்லிணக்கமும், சமூக நீதி நடைமுறைகளும் உறுதிப்படு த்தப்பட வேண்டிய அவசியம் குறித்து இரு தரப்பினரும் கருத்து பரிமாறிக் கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# இலங்கையின் செயலாற்றம் ஒரு வெற்றிக்கதை:- சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் புகழாரம்

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற் திட்டத்தின் கீழ் இலங்கை வெளிப்படுத்திய செயலாற்றம் ஒரு வெற்றிக் கதையாகும் எனத் தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கிஸ்டலினா ஜோர்ஜியேவா, அவசியமான கட்டமைப்பு மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு, அவை தொடர்ந்து பேணப்படும் பட்சத்தில், இலங்கை மிக உயர்வான வளர்ச்சியை அடையும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

2022ஆம் ஆண்டு தீவிரமடைந்த பொருளாதார நெருக்கடியின் பின்னரான மீட்சி மற்றும் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட 'தித்வா' சூ றாவளியை அடுத்து உருவாகியிருக்கும் சவால்கள் என இலங்கை மாறுபட்ட சூழ்நிலைகளுக்கு முகங் கொடுத்திருக்கும் பின்னணியில் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா 3 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த 16 பெப் 2026 திங்கட்கிழமை இலங்கை சென்றடைந்தார்.

அவ்விஜயத்தின் போது நடாத்திய சந்திப்புக்களின் ஓரங்கமாக செவ்வாய்க்கிழமை (17) மத்திய வங்கிக்கு விஜயம் செய்த அவர், அங்கு ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் சந்திப்பையும் நிகழ்த்தினார்.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்புரிமையைப் பெற்று 75 வருடங்கள் பூர்த்தியடைவதுடன், இலங்கை மத்திய வங்கியும் அதன் 75 வருடப் பூர்த்தியை நினைவுகூரும் இவ்வேளையில் இடம் பெற்ற நாணய நிதியப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவாவின் விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கிறது.



அதேவேளை இங்கு ஆளுநர் நந்தலால் வீரசிங்கவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்டத்தின் கீழ் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவாவும் அவரது குழுவினரும் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கும், கடன்மறுசீரமைப்பு செயன்முறையை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு அளித்த வலுவான ஒத்துழைப்புக்கும், மிகமோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீள்வதற்கு உதவியமைக்கும் ஆளுநர் மனமார்ந்த நன்றியை வெளிப்படுத்தினார்.

அதற்குப் பதிலளித்த கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா, சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்டத்தின் கீழ் இலங்கை வெளிப்படுத்திய செயலாற்றம் ஒரு வெற்றிக் கதையாகும் எனக் குறிப்பிட்டார். அத்தோடு பொருளாதார நெருக்கடியை அடுத்து பெரும்பாகப் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீளுறுதிப்படுத்துவதில் மத்திய வங்கி கொண்டிருந்த வகிபாகத்தையும் அவர் அங்கீகரித்தார்.

மேலும் அண்மைய சில வருடங்களில் இலங்கை மீண்டும் மீண்டும் பல்வேறு பின்னடைவுகளுக்கு முகங்கொடுத்திருப்பினும், அவசியமான கட்டமைப்பு மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு, அவை தொடர்ந்து பேணப்படும் பட்சத்தில் நாடு மிக உயர்வான வளர்ச்சியை அடையும் என நம்பிக்கை வெளியிட்டார்.

## ஈரான் மீது தாக்குதல் நடத்த தயாராகி விட்ட அமெரிக்கா?

அமெரிக்கா கடந்த 24 மணிநேரத்தில் 50க்கு மேற்பட்ட நவீன போர் விமானங்களை மேற்காசியா நோக்கி அனுப்பியுள்ளதாகவும் இந்த வார இறுதியில் ஈரானை நோக்கி தாக்குதல் நடத்த அமெரிக்க இராணுவம் தயாராக இருப்பதாகவும் வெள்ளை மாளிகை தகவல் வெளியிட்டுள்ளது.

இத்தகவல் சர்வதேச மட்டத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிற நிலையில் ஈரானுக்கு எதிரான ஆயுதத் தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அனுமதி அளிப்பது தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை என்றும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்கா ஈரான் இடையே அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக மோதல் போக்கு நீடித்து வருகிறது. அணுசக்தி ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திடவேண்டும் என ட்ரம்ப் வலியுறுத்தி வருகிறார். எனினும், ட்ரம்ப்பின் அறிவுறுத்தலுக்கு ஈரான் மறுப்பு தெரிவித்தே வருகிறது.

இதன் காரணமாக ஈரானுக்கு எச்சரிக்கை விடுக்கும் விதமாக அமெரிக்காவின் போர்க்கப்பல்கள் ஈரான் நாட்டுக்கு அருகில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

எனினும் இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு தாம் அடிபணியப் போவதில்லை என்றும் அமெரிக்க இராணுவத்தை அழிப்போம் என்றும் ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி கமெனி பதிலளித்திருந்தார்.

இந்நிலையிலேயே ஈரானை நோக்கி அமெரிக்க இராணுவம் தாக்குதல் நடத்தத் தயாராக இருப்பதைப் போன்று அமெரிக்கா அடுத்தடுத்த அதிரடி நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதாக சர்வதேச மட்டத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. இது தொடர்பாக வெள்ளை மாளிகை தெரிவிக்கையில், இந்த வார இறுதியில் இராணுவம் ஈரானுக்கு எதிராக தாக்குதல் நடத்த தயாராக உள்ளது. ஆனால், அது தான் சிறந்த முடிவு என ட்ரம்ப் (23ம் பக்கம் பார்க்க)



# நலிவுற்றோர் நலம் பேண கை கொடுப்போம் வாரீர்!







# 89000 இலங்கைத்தமிழர்களின் குடியுரிமைப் பிரச்சனைகளைத் தீர்க்க பிரதமருக்கு ஸ்டாலின் கடிதம்



தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு மாதங்களே உள்ள நிலையில், நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக மாநிலத்தில் வாழும் இலங்கைத் தமிழர்களின் நீண்டகால குடியுரிமைப் பிரச்சினை மற்றும் சட்டப் பூர்வ அந்தஸ்து குறித்து மனிதாபிமான மற்றும் நடைமுறைக்கு ஏற்ற தீர்வைக் கோரி முதல்வர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார். இது குறித்து நேற்று இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் ஸ்டாலின்.

இந்த பிரச்சினை ஆழ்ந்த மனிதாபிமான, அரசியலமைப்பு மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் விவரித்தார். அத்துடன், சுமார் 89.000 இலங்கைத் தமிழர்கள் அகதிகள் முகாம்களுக்குள்ளும் வெளியேயும் தமிழ்நாட்டில் தொடர்ந்து வசிக்கின்றனர். அவர்களில் கிட்டத்தட்ட 40 சதவீதம் பேர் இந்தியாவில் பிறந்தவர்கள், மேலும் பலர் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இங்கு வசித்து வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும், 1983 ஆம் ஆண்டு முதல், அடுத்தடுத்த தமிழக அரசாங்கங்கள், மத்திய அரசின் ஒப்புதலுடன், இலங்கையில் இன மோதலில் இருந்து தப்பி ஓடியவர்களுக்கு தங்குமிடம், கல்வி மற்றும் சுகாதாரப் பராமரிப்பு ஆகியவற்றை வழங்கியுள்ளன. இருப்பினும், பலர் குடியுரிமை அல்லது நீண்ட கால விசா அந்தஸ்தைப் பெற முடியாமல் தவிக்கின்றனர் என்றும் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

அத்துடன், மாநில ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளைக் குறிப்பிட்டு, குடியுரிமை விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதைத் தடை செய்யும் முந்தைய நிர்வாக வழி முறைகளை இரத்து செய்யுமாறும், பொருத்தமான இடங்களில் கடவுச்சீட்டு மற்றும் விசா தேவைகளைத் தள்ளுபடி செய்யுமாறும், விரைவான செயலாக்கத்திற்காக மாவட்ட அளவிலான அதிகாரிகளுக்கு அதிகாரங்களை வழங்குமாறும், 2025 ஜனவரி 9 ஆம் திகதி வரை தங்கியிருந்த பதிவு செய்யப்பட்ட இலங்கைத் தமிழ் நாட்டினரை சட்ட விரோத குடியேறிகளாக கருதக்கூடாது என்பதை முறையாக தெளிவுபடுத்துமாறும் ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தினார்.

இந்தியாவில் தஞ்சம் புகுந்தவர்கள் நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக °கண்ணியத்துடனும், ஒழுக்கத்துடனும், ஆழமான கலாச்சார உறவுடனும் வாழ்ந்ததாக ஸ்டாலின் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும், மனிதாபிமான அடிப்படையில் சாதகமான முடிவை எடுக்குமாறும் பிரதமரை வலியுறுத்தியுள்ளார். கடந்த ஆண்டு குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் சட்டமூலம், 2025 மீதான விவாதங்களின் போது, அகதிகள் பிரச்சினையை திமுக ஒருபோதும் தன்னிடம் எடுத்துச் செல்லவில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குற்றம் சாட்டியபோது, இந்தப் பிரச்சினை நாடாளுமன்றத்திலும் எழுப்பப்பட்டது.

இந்தக் கூற்றை திமுக எம்பி கனிமொழி கருணாநிதி மறுத்தார், அவர் இந்த விவகாரம் தொடர்பாக தமிழக அரசு அனுப்பிய கடிதங்களின் விவரங்களை மேற்கோள் காட்டினார்.

இந் நிலையில் அரசியல் ரீதியாக, பாஜக தலைமையிலான மத்திய அரசுக்கு எதிரான பிரச்சாரக் கருப்பொருள்களாக ஆளும் திமுக தமிழ் மொழி, அடையாளம் மற்றும் பாரம்பரியத்தை முன்னிலைப்படுத்தி வரும் நேரத்தில் தமிழக முதலமைச்சரின் இந்தக் கடிதம் வந்துள்ளது. இந்தக் கடிதம் மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை மற்றும் சட்ட தெளிவுக்காக அழுத்தம் கொடுப்பதன் மூலம், திமுக தமிழ் ஆதரவு வாக்காளர்களையும் இலங்கை அகதிகளின் அனுதாபிகளையும் ஒருங்கிணைக்க முயல்கிறது.

நீண்ட காலம் தங்கியிருந்த போதிலும், இதுவரை 11 இலங்கை அகதிகளுக்கு மட்டுமே இந்திய குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் மட்டுமே வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுள்ளார், மீதமுள்ள பத்து பேர் வாக்காளர் பட்டியலில் சேர்க்க விண்ணப்பித்துள்ளனர். இது அவர்களின் நிலையை முறைப்படுத்துவதில் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுகிறது.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பதிலீடு செய்யும் அரசாங்கம் குறித்து ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளிடம் எடுத்துரைத்த அம்பிகா சற்குணநாதன்



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவதாகக் கூறி ஆட்சி பீடமேறிய தேசியமக்கள் சக்தி அரசாங்கம், தற்போது அதனைப் பதிலீடு செய்யும் நோக்கில் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்பதற்கான சட்ட வரைவை முன்மொழிந்திருப்பதாக ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளிடம் தீவிர கரிசனையை வெளிப்படுத்தியுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரும் சிவில் சமூக செயற்பாட்டாளருமான அம்பிகா சற்குணநாதன், அச்சட்ட வரைவின் மிகமோசமான உள்ளடக்கம் குறித்து அவ்வதிகாரிகளுக்கு விரிவாகத் தெளிவுபடுத்தியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் 27 ஆவது கூட்டத்தில் பங்கேற்பதற்காக நாட்டுக்கு வருகை தந்திருந்த ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் குழுவுக்குத் தலைமை தாங்கிய அதன் வெளிவிவகார சேவைப்பிரிவின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பதில் முகாமைத்துவப்பணிப்பாளர் பாவோலா பம்பலோனிக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான அம்பிகா சற்குணநாதனுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது பயங்கரவாதத்தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவதாகக் கூறி ஆட்சி பீட மேறிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தற்போது அதனைப் பதிலீடு செய்யும் நோக்கில் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்பதற்கான சட்ட வரைவை முன் மொழிந்திருப்பதாக ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளிடம் தீவிர கரிசனையை வெளிப்படுத்திய அம்பிகா சற்குணநாதன், அச்சட்ட வரைவின் மிகமோசமான உள்ளடக்கம் குறித்து விரிவாகத் தெளிவுபடுத்தினார்.

அதே போன்று நாடளாவிய ரீதியில் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் எண்ணிக்கை அவற்றின் இயலுமையை விட பன்மடங்கு உயர்வாகக் காணப்படுவதாகவும், அதன் விளைவாக சிறைக் கைதிகள் மத்தியில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் பற்றியும் அவர் எடுத்துரைத்தார்.

அதேவேளை மரணதண்டனை வழங்கலை முடிவுக்குக் கொண்டு வருவதாக அரசாங்கங்கள் வாக்குறுதி அளித்த போதிலும், அது இன்னமும் தொடர்வதாக ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளிடம் அதிருப்தி வெளியிட்ட அம்பிகா சற்குணநாதன், போதைப்பொருள் பாவனை சார்ந்த குற்றங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள், திட்டமிடப்பட்ட குற்றச்செயல்கள் தொடர்பில் அரசாங்கத்தினால் கொண்டு வரப்படவிருக்கும் சட்டமூலம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் விளக்கமளித்தார்.

இதேவேளை எமது நாட்டுக்கு பழைய பயங்கரவாத தடைச் சட்டமும் தேவையில்லை, அதேபோல புதிதாகக் கொண்டு வரப்பட உள்ள சட்டமும் அவசியமில்லை என யாழ்ப்பாணம் மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள மற்றும் எதிர்காலத்தில் கொண்டு வர முயற்சிக்கின்ற பயங்கரவாதம் தொடர்பான சட்டமூலத்திற்கு எதிரான கையொப்ப போராட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எமது நாட்டில் நீண்ட காலமாக நடைமுறையில் இருந்த பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலமாக தமிழ் மக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவித்தார்கள். எத்தனையோ பேரின் வாழ்க்கையில் கவலைகளும், வலிகளும், இழப்புக்களும் ஏற்பட்டன. ஆகவே இவ்வாறான ஒரு சட்டமூலத்தை நீக்குமாறு நீண்ட காலமாக அரசாங்கங்களை, தமிழ் மக்களாகிய நாங்கள் தொடர்ச்சியாக கேட்டுக் கொண்டிருந்தோம். ஆனால் தற்போது அந்த பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குகின்ற பாணியில் புதிய ஒரு சட்டமூலத்தை கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார்.

# காத்திரமான கேள்விகளும் கம்பவாரிதியின் தர்க்கரீதியான பதில்களும்!

கேள்வி: சிறீதரன் ஒரு பக்கமும், சுமந்திரன் ஒரு பக்கமுமாக மாறி மாறித் தங்கள் தங்கள் நியாயத்திற்கான அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கிறார்களே. இது எங்கு போய் முடியப் போகிறது?



பதில்:- நியாயத்திற்கான அறிக்கைகள்' என்ற உங்கள் வசனத்தில் ஒரு சிறு திருத்தம் செய்ய வேண்டும். அவர்கள் வெளியிடும் அறிக்கைகளில் நியாயங்கள் எங்கே இருக்கின்றன? அவ் அறிக்கைகளில் பொது நியாயம் என்பது இருப்பதில்லை. தத்தமக்கு உரிய சுயநல நியாயங்களைத்தான் அவர்கள் சொல்லி வருகிறார்கள். அவை ஒன்றிலும் உண்மை இருப்பதாய்த் தெரியவில்லை.

சுமந்திரனுக்கும், சிறீதரனுக்குமான கயிறிழுப்பில் அகப்பட்டு, கட்சி உயிர் விடத் தயாராகிக் கொண்டிருக்கிறது. இவ்விரண்டு பேரும் தான் என்றில்லை. கட்சியின் தலைவரும் கூட குழப்பத்தில் தான் இருக்கிறார் போல. அவரது முன்னுக்குப் பின் முரணான அறிக்கைகள் இதனைக் காட்டுகின்றன.

இவ்விருவரும் இனநன்மையை விரும்புகிறவர்களாக இருந்தால், சில காலத்திற்கு, கட்சியை விட்டு ஒதுங்கியிருந்தால் என்ன என்று தோன்றுகிறது? அப்போதாவது கட்சி உருப்படுமா என்று பார்க்கலாம். இவ்விருவரது சண்டையில் சுயநலத்தைத் தவிர வேறெதுவும் இருப்பதாய்த் தோன்றவில்லை. இனத்தின் வளர்ச்சி பற்றி இவ்விருவருக்கும் எவ்வித கவலையுமில்லை என்பதைத் தவிர, வேறெதனைச் சொல்ல?

கேள்வி:-புதிய ஜனாதிபதிக்கு நீங்கள் 'வால்' பிடிக்கத் தொடங்கியிருப்பதாய், சிலர் விமர்சிக்கின்றார்களே.

பதில்:- தாராளமாக விமர்சித்து விட்டுப் போகட்டும். அது பற்றி நான் கவலைப்படப் போவதில்லை. எங்களது தமிழ்த் தலைவர்களுள் சிலரும், அவர்களுக்கு 'வால்' பிடித்து வருவோர் சிலருமே இங்ஙனம் என்னை விமர்சித்து வருகிறார்கள். அத்தகையவர்களுக்கு இனம் பற்றி எந்தக் கவலையும் இருப்பதாய்த் தெரியவில்லை.

ஜனாதிபதியால் எனக்கு ஆகப்போவது ஒன்றுமில்லை. என்னால் ஜனாதிபதிக்கு ஆகப் போவதும் ஒன்றுமில்லை. அதை முதலில் நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். நாட்டில் பகை நெருப்பு எரிந்து கொண்டேயிருந்தால் தான், தாங்கள் குளிர்காய முடியும் எனக் கருதும் இவர்கள், அணைய முயலும் நெருப்பை நெய்யூற்றி வளர்க்கப் பார்க்கிறார்கள். சுதந்திரத்திற்குப் பின்னான காலங்களில் ஆட்சிக்கு வந்த அனைத்து சிங்களக் கட்சிகளும், தமிழர்க்கு எதிரான போக்கைக் கடைப் பிடித்துக் காட்டியே, சிங்கள மக்களினதும், பௌத்த குருமாரினதும் ஆதரவைத் திரட்டின. முதல் முறையாக இந்தப் போக்கை மாற்றி, இந்த நாடு அனைத்து இனத்தார்க்கும் சொந்தமானது எனத் துணிந்து சொன்னதோடல்லாமல், இளையோரின் ஆதரவைத் தனது சொல்வன்மையாலும், சத்தியத்தாலும் திரட்டி, பெரும்பான்மை வெற்றியும் பெற்று, ஆட்சி அமைத்திருக்கிறார் அநுரகுமார திஸாநாயக்க அவர்கள்.

இதனைப் பெரும் சாதனையாகவே நான் கருதுகிறேன். அது மட்டுமல்லாமல் போர் அழிவுகளால் பாதிப்புற்றிருந்த தமிழ்மக்களும் கூட, இவரின் எளிமையையும் உறுதியையும் கண்டு வியந்தும், நமது தமிழ்த் தலைவர்களின் பொய்மையைக் கண்டு



விரக்தியுற்றும் மனந் துணிந்து கடந்த தேர்தலில் இவரது கட்சிக்கு மூன்று இடங்களை வழங்கினார்கள். இவற்றையெல்லாம் சாதனை என்று சொல்லாமல் வேறு என்ன என்று சொல்வதாம்?

இப்போது ஏற்பட்டிருக்கும் சில பிரச்சினைகளை வைத்து நம் தமிழ்த்தலைவர்கள் சிலரும், இளையோர் சிலரும், பழையபடி நம் நாட்டில் போர் மேகங்களைக் கொணர முற்படுகிறார்கள். அநுர பொறுப்பேற்ற பின்பும் சில பிரச்சினைகள் நடக்கத்தான் செய்கின்றன. அந்தப் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு காண்பது சற்றுக் கடினமான காரியம் என்பதை நாமும் உணர்ந்து கொள்வது தான் நல்லது.

இந்த விடயங்களைப் பயன்படுத்தி, போராட்டங்கள் நடத்தி, மக்களுக்குத் தம்மைக் காட்ட முயன்று, மூளாத்தீ போல் அணைந்து கிடக்கும் இனப்பிரச்சினையை ஊதிப் பெரிதாக்க இவர்கள் முயல்கிறார்கள். இது புத்திசாலித்தனமான காரியம் இல்லை.



கீழுள்ளவர்களால் ஜனாதிபதிக்கு தரப்படும் பிரச்சினைகளை அவர் எதிர் கொள்ள, நாம் தான் அவருக்குக் கைகொடுத்து உதவ வேண்டும் எனக் கருதுகிறேன். அதைவிடுத்துப் பிரச்சினைகளைக் கிளறுவதால், நம் தலைவர்களின் பதவிகள் பாதுகாக்கப்படுமேயன்றி நம் இனத்திற்கு நன்மை ஏதும் விளையாது என்பது உறுதி. இலட்சக்கணக்கான உயிர்கள் பலியிடப்பட்ட பின்பும், எம்மால் இதுவரை ஏதும் செய்ய முடியவில்லை. வெளிநாடுகள் தலையிடும் என்ற எண்ணமும் கனவாயிற்று. அயல்நாடும் நமக்கு ஆதரவு தந்ததேயன்றி, நம் விடுதலைக்காக ஏதும் பேச முன்வரவில்லை. இந்த யதார்த்தத்தைக் கண்கூடாக நாம் கண்டு விட்டோம். நிலைமை இப்படியிருக்க, யதார்த்தம் உணராமல் ஏதோ தம்மைத் தியாகிகளாய்க் காட்டிப் பகைவளர்க்க நினைப்போர்க்கு, நான் சொல்லும் யதார்த்த உண்மைகள் 'வால்' பிடித்தலாய்த் தான் தெரியும். அதற்கு நான் என்ன செய்ய?

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண காலமானார்!



இலங்கையின் இடதுசாரி அரசியல் வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பெற்றிருந்த முன்னாள் அமைச்சரும் சிரேஷ்ட அரசியல்வாதியுமான திஸ்ஸ விதாரண அவர்கள் தனது 92வது வயதில் காலமானார் என்ற செய்தி, அரசியல் வட்டாரங்களிலும் அறிவியல் சமூகத்திலும் ஆழ்ந்த வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

சிந்தனைக்கும் செயற்பாட்டுக்கும் இடையே உறுதியான பாலம் கட்டிய அரசியல்வாதி என்றால் அது திஸ்ஸ விதாரண. அரசியல் என்பது வெறும் ஆட்சிப் போட்டி அல்ல. அது ஒரு சமூக மாற்ற இயக்கம் என்ற நம்பிக்கையோடு அவர் வாழ்ந்தார். இடதுசாரி அரசியலின் உறுதியான குரலாக விளங்கியவர்.

லங்கா சமசமாஜக் கட்சி என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க கட்சியின் தலைவராக நீண்டகாலம் பணியாற்றிய அவர், இலங்கையின் இடதுசாரி சிந்தனையை உயிர்ப்புடன் தாங்கிச் சென்றவர்களில் ஒருவராக விளங்கினார். சமத்துவம், சமூக நீதி, இன நல்லிணக்கம் போன்ற கோட்பாடுகள் அவரது அரசியல் வாழ்க்கையின் அடிநாதமாக இருந்தன.

அரசியலில் எத்தனை மாற்றங்கள் நிகழ்ந்தாலும், தனது கொள்கை நிலைப்பாடுகளில் அவர் தளர்ச்சியைக் காண்பிக்கவில்லை. கொள்கை நிலைத்தன்மை என்பதற்கு உயிரூட்டிய அரசியல்வாதி என்ற புகழை அவர் பெற்றிருந்தார்.

அவர் பல முக்கிய அமைச்சர் பதவிகளில் பணியாற்றியுள்ளார். குறிப்பாக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் ஆக பணியாற்றிய காலத்தில், அறிவியல் வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் தேசிய முன்னேற்றத்தின் கருவியாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்பட்டார்.

அதேவேளை, அரசியலமைப்பு சீர்திருத்த முயற்சிகளில் அவர் வகித்த பங்கு குறிப்பிடத்தக்கது. இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தேவை என்பதில் அவர் தெளிவாக இருந்தார். தேசிய நல்லிணக்கத்திற்கான உரையாடல்களில் அவர் எப்போதும் ஒரு சமரசக் குரலாக, கருத்து வேறுபாடுகளுக்கு இடையே பாலமாகத் திகழ்ந்தார்.

அவரது ஆளுமையின் தனிச்சிறப்பு அறிவியல் சிந்தனையும் அரசியல் செயல்பாடும் இணைந்திருந்தது. உணர்ச்சி வசப்படாமல், தர்க்க ரீதியாக பிரச்சினைகளை அணுகும் தன்மை அவரிடம் இருந்தது. அதனால் தான் அவர் அரசியல்வாதி மட்டுமல்ல. சிந்தனையாளர் என்ற மரியாதையையும் பெற்றார்.

பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்களின் மறைவு, இலங்கையின் இடதுசாரி அரசியல் மரபில் ஒரு முக்கிய அத்தியாயம் முடிவுக்கு வந்ததை நினைவு ஊட்டுகிறது. கொள்கைகளில் உறுதியும், உரையாடலில் மென்மையும், அரசியலில் பொறுப்புணர்வும் கொண்ட தலைமுறை படிப்படியாக மறைந்து வரும் வேளையில், அவரது வாழ்க்கை ஒரு பாடமாகத் திகழ்கிறது. அவர் விட்டுச் சென்ற சிந்தனைகள், சமத்துவம் மற்றும் நல்லிணக்கத்திற்கான அவரது விடாமுயற்சி, எதிர்கால தலைமுறைகளுக்கு வழிகாட்டும் ஒளிக்கீற்றாகவே என்றும் இருக்கும். அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

## கரன்தெனிய சுத்த குழுவினரே கைவரிசை?



தலங்கம, அக்குரேகொட பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட சட்டத்தரணி 'கரன்தெனிய சுத்த' என்ற குற்றவாளியின் நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையானவர் என பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் தனது கட்சிக்காரரின் தகவல்களை 'லொகு பெட்டி' என்ற குற்றவாளி தலைமையிலான குழுவிற்கு வழங்கிய காரணத்தினால், கரன்தெனிய சுத்தவினால் இந்தத் துப்பாக்கிச் சூடு வழிநடத்தப்பட்டிருக்கலாம் என பாதுகாப்புப் பிரிவினர் சந்தேகிக்கின்றனர்.

அக்குரேகொட பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடிக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜீப் வண்டியில் இருந்த தம்பதியினரை இலக்கு வைத்து இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. கார் ஒன்றில் வந்த குழுவினர் டி-56 ரகத் துப்பாக்கியைப் பயன்படுத்தி சுமார் 10 தடவைகள் சுட்டு விட்டுத் தப்பியோடியுள்ளதாக பொலிஸார் கூறினர். இதில் வாகனத்தில் இருந்த தம்பதியினர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இச்சம்பவம் குறித்து தலங்கம பொலிஸாரின் 3 குழுக்கள் உள்ளிட்ட பல பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன.

# மணலாறு போர்க்களத்தில் காலை இழந்த நிலையிலும் உழைத்து வாழ விரும்பிய பெண் போராளி வாங்கிய கடனை அடைக்க சிறுநீரகத்தை விற்ற கொடுமை!

யுத்தக் களத்தில் காயப்பட்டு, ஒரு கால் முழுவதும் பாதிக்கப்பட்டு, இன்று வாழ்வாதாரத்திற்காக போராடிக் கொண்டிருக்கும் முன்னாள் பெண் போராளி ஒருவர், கந்துவட்டி கொடுமையால் தனது சிறுநீரகத்தை விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள சம்பவம் மன்னாரில் பதிவாகியுள்ளது.

மன்னார், மூர் வீதி பகுதியில் வசிக்கும் இப் பெண்மணி தனது குடும்ப வறுமையைப் போக்கவும், சிறு தொழில் செய்யவும் 'சீட்டு' முறையில் பணம் கட்டியுள்ளார். ஆனால் சீட்டு ஆரம்பத்தின் கனிவாக நடந்து கொண்ட பெண் குழுக்கள் மற்றும் வட்டி கும்பல்கள், காலம் செல்ல தங்கள் நடவடிக்கையை தொடங்கியுள்ளனர். அவர் வாங்கிய பணத்திற்கு சட்ட விரோதமான முறையில் வட்டிக்கு மேல் வட்டி (Compound Interest) போட்டு, அவரை மீள முடியாத கடன் சுமைக்குள் தள்ளியுள்ளனர்.

ஏழ்மை நிலையில் இருக்கும் இப் பெண், மற்றும் இவரது குடும்பம் வாடகை வீடு ஒன்றில் உணவகங்களுக்கு சிற்றுண்டிகளை தயாரித்து வழங்கி வரும் வருமானத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

மணலாற்றுப் போர்க்களத்தில் ஒரு கால் முற்றாக பாதிக்கப்பட்ட நிலையில், யாருடைய உதவியுமின்றி உழைக்க நினைத்த இவருக்கு கந்துவட்டி கும்பல் பெரிய முட்டுக் கட்டையாக மாறியுள்ளது.

தொடர் மிரட்டல்கள், அவமானங்கள் மற்றும் 'பணத்தை தரா விட்டால் கொலை செய்து விடுவோம்' என்ற அச்சுறுத்தல்களுக்கு பயந்து, வேறு



வழியின்றி கொழும்புக்குச் சென்று தனது ஒரு சிறுநீரகத்தை குறைந்த விலைக்கு விற்று அந்தப் பணத்தை வட்டி பணத்துக்காக வழங்கியுள்ளார்.

சிறுநீரகத்தை விற்று பண தொகையைக் கொடுத்த பின்னரும், அந்த வட்டி கும்பல் 'இன்னும் வட்டி மீதமுள்ளது' எனக் கூறி அவரைத் தொடர்ந்து துன்புறுத்தி வருகின்றது.

உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள இப்பெண்மணி, தற்போது தற்கொலை எண்ணம் தோன்றும் அளவிற்கு விரக்தியில் உள்ளதாகக் கண்ணீர் மல்க தெரிவிக்கிறார்.

மன்னார் மூர் வீதியில் இத்தகைய சட்ட விரோத வட்டித் தொழில் பல குழுக்களால் தங்கு தடையின்றி நடத்தப்பட்டு வருகிறது. இப் பெண்ணைப் போல இன்னும் பல ஏழைப் பெண்கள் அவர்களிடம் சிக்கி, வெளியில் சொல்ல முடியாமல் சித்திர வதைகளை அனுபவித்து வருகின்றனர்.

என்னைப் போல இன்னும் பல பெண்கள் இங்கே பாதிக்கப்பட்டுள்ளார்கள். எங்களைக் காப்பாற்ற யாரும் இல்லையா?' என அந்தப் பெண் கேள்வி எழுப்பியுள்ளார். பாதிக்கப்பட்ட இப் பெண்ணுக்கும், அவரைப் போன்ற மற்றவர்களுக்கும் உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும் எனவும், இந்த சட்டவிரோத வட்டி கும்பல்கள் மீது உடனடியாக பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## துப்பாக்கிச் சூடுகளால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை!

ஒன்று அல்லது இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களினால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாது என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். தற்போதைய அரசாங்கம் இது குறித்து புரிதலுடன் இருக்கும் என தாம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'தேசிய பாதுகாப்பிற்கு விசேட பாதிப்பு எதுவும் இல்லை. வெவ்வேறு குழுக்களுக்கு கடந்த காலத்திலும் கலகங்களை விளைவிப்பது, இனவாதத்தைத் தூண்டுவது போன்ற விடயங்கள் பழக்கப்பட்டிருந்தது. இப்படியானவர்கள் தமக்கென ஒரு பிம்பத்தை உருவாக்கிக் கொள்ளத் தேவைப்படும் போது பல்வேறு விடயங்களைச் செய்ய முயற்சிக்கின்றனர்.

ஆனால் முப்படையினரும் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை முறையாக முன்னெடுத்துச் செல்வதாக நான் நினைக்கிறேன். ஒரு சிறிய சம்பவத்தைச் செய்வதற்கு ஒருவரோ இருவரோ இருந்தால் போதுமானது. பதற்றமடையத் தேவையில்லை. அரசாங்கம் எப்படியும் இதனைப் புரிந்துகொண்டிருக்கும்.

இந்த நாட்டில் கடந்த காலத்தில் நடந்த விடயங்கள் குறித்து அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களுக்கு ஓரளவுக்குப் புரிதல் உள்ளது. எனவே அவர்களால் இதனை தற்போது முகாமைத்துவம் செய்ய முடிந்திருக்கும் என நான் நினைக்கிறேன்.

பாதாள உலகம் ஓரளவுக்கு இன்னும் இயங்கிக் கொண்டு தான் இருக்கிறது. இது ஒரு அரசியல் குற்றமல்ல. பாதாள உலகம் செயற்பட்ட இடமாகும்.



பாதாள உலகம் 100 வீதம் ஒடுக்கப்படவில்லை என்பது எமக்குத் தெரியும். மோட்டார் சைக்கிளில் சென்று துப்பாக்கிச் சூடு நடத்துவது என்பது முழு இராணுவத்தையும் கொழும்பிற்குள் இறக்கினாலும் தடுத்து நிறுத்தக் கூடிய ஒன்றல்ல. ஆனால் அது குறித்து நாம் மகிழ்ச்சியடைய முடியாது. அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போறற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# சமஷ்டியா? ஏக்கிய ராஜ்யாவா? சந்தித்துப் பேச விரும்பாத இரு தலைகளின் பிரச்சனை!



தமிழர் தேசிய அரசியல் என்பதும் தமிழர் பிரச்சனைக்கான தீர்வு என்பதும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறும் கதை போன்றது. தமிழ் மக்களின் அரசியல் தலைமை யார் என்பதை அறிய முடியாதிருக்கும் முட்டு மோதலே இதற்கான அடிப்படை.

அரசியல் தீர்வு குறித்து தமிழர் தரப்பின் நிலைப்பாட்டை அண்மிப்பதற்கு சுவிஸ் தூதரகம் எடுத்த முயற்சி பற்றியும், இதற்காக தமிழர் தரப்பினரை ஒருமித்த நிலைப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கெனவும் இந்த மாதம் 19ம் திகதி சுவிஸ் தூதரகம் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது.

நோர்வே எனும் சக்கடத்தார் ஏறிப் பயணம் செய்து சறுக்கி விழுந்த குதிரையில் சுவிஸ் ஏறியுள்ளது. பெருமளவான ஈழத்தமிழருக்கு பிரச்சனையின்றி அடைக்கலம் கொடுத்ததாலும், ஈழத்தமிழ் ஊடகர்கள் அதிகமானோர் அடைக்கலம் பெற்று அங்கு வாழ்வதாலும் சுவிஸின் இந்த முயற்சியை பலரும் நம்பிக்கையோடு விரும்பினர்.

சில நாட்களுக்கு முன்னர் கொழும்பிலுள்ள சுவிஸ் தூதுவர் தாயகத்தில் பல்வேறு தரப்பினருடனும் சந்திப்பை மேற்கொண்டிருந்தார். தமது முயற்சி தமிழர் தரப்பில் ஒருமித்த இணக்கப்பாட்டை கொண்டு வரும் என்பதில் பூரண நம்பிக்கையில்லாத நிலையிலும் முயற்சித்துப் பார்ப்போமென சுவிஸ் எண்ணியிருக்கலாம்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சில வாரங்களுக்கு முன்னர் வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு புலம்பெயர் தமிழர்களுடன் சந்திப்பை மேற் கொண்டிருந்தார். இதன் பின்னணியில் சுவிஸ் இருந்ததாக பரவலாகப் பேசப்பட்டது. இதே மாதிரியான பயணத்துக்கு தமிழரசுக் கட்சிக்கும் சுவிஸ் அழைப்பு விடுத்ததாகவும் அதனை அவர்கள் நிராகரித்ததாகவும் நம்பகமான தகவல் உண்டு.

அனைவரையும் ஒன்றாக சந்திப்பதற்கு சுவிஸ் எடுத்த முயற்சி தமிழர் பிரச்சனை தீர்வுக்கானது அல்ல. அதற்குரிய பொதுநிலைப்பாட்டை எட்டுவதற்கான முன்னெடுப்பு மட்டுமே. இதற்கான அடிப்படைக் காரணமாக அமைந்தது எது என்று பார்க்க வேண்டும்.

அண்மைய அனைத்துத் தேர்தல்களிலும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரான அநுர குமார ஒரு விடயத்தை மீண்டும் மீண்டும் சொல்லியிருந்தார். மைத்திரி – ரணில் நல்லாட்சிக் காலத்தில் புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கும் செயற்பாடு அந்த அரசுடன் தேநிலவைக் கழித்த தமிழரசுக் கட்சியின் முழுமையான பங்களிப்புடன் இடம்பெற்றது. தாங்கள் ஆட்சிக்கு வந்ததும் அதனைத் தொடர விரும்புவதாகக் குறிப்பிட்ட அநுர குமர, நல்லாட்சிக் காலத்தில் புதிய அரசியலமைப்பு விடயத்தில் தீவிரமாகப் பங்காற்றிய சுமந்திரனின் பங்கை தாங்கள் பயன்படுத்தப் போவதாகவும் கூறியிருந்தார். அவ்வேளையில் பல ஊடகங்கள் முன்னைய ஒளிப்படம் ஒன்றை மீள்பிரசுரம் செய்து தங்கள் வாசகர்களுக்கு ஒரு விடயத்தை ஞாபகப்படுத்தின. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஜே.வி.பி.யினரின் (அநுர குமரவின் தாய்க்கட்சி) மேதின ஊர்வலத்தில் சுமந்திரன் செஞ்சட்டை அணிந்தவாறு முன்வரிசையில் அநுர குமரவோடு சேர்ந்து சென்ற அந்தக் காட்சியே அந்த ஒளிப்படம். இதனைப் பார்த்தவர்கள் அநுர குமரவுக்கும் சுமந்திரனுக்கும் ஏற்கனவே இருந்த தொடர்பை நினைத்துக் கொண்டார்கள். தங்களின் சட்ட மாஅதிபர் சுமந்திரன் என்று ரணில் விக்கிரமசிங்க கூறியது போல, அநுர குமரவுக்கும் இவரே சட்ட ஆலோசகர் என பலரையும் எண்ண வைத்தது சம்பந்தப்பட்ட ஒளிப்படம்.

அநுர குமர தேர்தல் காலங்களில் சொன்ன புதிய அரசியலமைப்பு இன்னும் வரவில்லை. சி.வி.கே.சிவஞானம் தலைமையில் தமிழரசுக் கட்சியினர் கடந்த நவம்பர் 19ம் திகதி அநுர குமரவை சந்தித்துப் பேசிய போது அனைத்து மக்களினதும் பிரச்சனைகளுக்கு புதிய அரசியலமைப்பினூடாக தீர்வு காணப்படுமென மீண்டும் கூறப்பட்டது. மைத்திரி – ரணில் காலத்தில் தயாரிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு ஏக்கிய ராஜ்ய (ஒற்றையாட்சி) முறைமை. ஆனால் தமிழர் தொடர்ந்து கேட்பது சமஷ்டி (கூட்டாட்சி) முறைமை என்பது இப்போது முனைப்புப் பெற்றுள்ளது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையில் ஆரம்ப காலத்தில் சமஷ்டியை ஏற்கவில்லை. எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து இலங்கை தமிழரசுக் கட்சியை உருவாக்கிய எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலானவர்கள் சமஷ்டியையே தங்கள் கொள்கையாக பிரகடனம் செய்தனர். 1970களில் இரண்டு கட்சிகளின் தலைமை வேட்பாளர்களும் தோல்வி கண்டதால் தமிழர் ஐக்கிய முன்னணி தனிநாட்டுக் கோரிக்கையுடன் உருவாக்கப்பட்டது. 1977 தேர்தலில் இவர்களின் தனிநாட்டுக் கோரிக்கையில் நம்பிக்கை வைத்த இளைஞர்கள் இவர்கள் பின்னால் சென்று அதீத ஆசனங்களைப் பெற்றுக் கொடுத்தனர். ஆனால் இளைஞர்கள் ஏமாற்றப்பட்டனர்.

தலைவர்களுக்கு தங்கள் இரத்தத்தால் திலகமிட்ட இளைஞர்கள் தங்கள் இரத்தத்தை விடுதலைக்கு விதையாகக் கொடுத்து தனிநாட்டுக் கோரிக்கையை முன்னெடுத்தனர். இவர்களே தமிழரசு, தமிழ் காங்கிரஸ், முன்னாள் ஆயுதப் போராளிகள் அனைவரையும் ஒன்றிணைத்து கூட்டமைப்பை உருவாக்கினர். முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதை யடுத்து தமிழர் ஒற்றுமை என்பது தலைகீழானது.

இதுவே சிங்கள தேசத்துக்கு தமிழர் மீது அடக்குமுறையை வேகப்படுத்தவும், ஆட்சி முறையிலிருந்து அகற்றவும் வாய்ப்பானது. இதனால் ஏற்பட்ட தேக்க நிலை இன்றுவரை தொடர்கிறது. தமிழ்த் தேசிய கட்சிகள் தேர்தல்கள் வரும் போது பதவி மோகத்தில் இணக்கம் காண்பதும் பின்னர் பிணக்குப்படுவதும் வரலாறாகி விட்டது.

அநுர குமர அணியின் தமிழர் பிரதேச தேர்தல்களின் வெற்றி இதற்கு உறுதியான சாட்சி. சுமந்திரனை வட மாகாண முதலமைச்சர் ஆக்கும் இலக்குடன், கூட்டமைப்பிலிருந்து அகற்றப்பட்டு புதிதாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை உருவாக்கியவர்களை தமிழரசுக் கட்சியுடன் இணைக்க அண்மையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு முன்னர், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் உருவாகியிருந்த தமிழ் மக்கள் பேரவையில் இணைந்திருந்த ஜனநாயகக் கூட்டணியினர், மாகாண சபையில் சில ஆசனங்களைப் பெறும் ஆசையில் தமிழரசோடு இணைய முனைந்தனர். இவ்வேளையில் மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறாது என்பது தெரிய வந்ததால் அந்த இணைப்பு முறிந்து விட்டது. புளொட் தலைவர் சித்தார்த்தன் வீட்டில் இடம் பெற்ற இரு தரப்பினரதும் சந்திப்பின் பின்னரே இந்த முறிவு ஏற்பட்டதாகத் தெரிகிறது. (இன்னொரு வேளையில் இதுபற்றி விபரமாகப் பார்க்கலாம்)

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஆரம்பத்திலிருந்து எதிர்த்துப் போராடி பல இழப்புகளைச் சந்தித்ததோடு 13ம் திருத்தத்தையும் மாகாண சபை முறைமையையும் மறுத்து வந்த ஜே.வி.பி.யினர், ஜனநாயக வழியில் கிடைத்த ஆட்சியினைப் பயன்படுத்தி புதிய அரசியலமைப்பில் 13ம் திருத்தத்தையே இல்லாது ஒழிப்பர் என்பது இப்போது தெரிய ஆரம்பித்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் சீனப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா ஊடக சந்திப் பொன்றில், புதிதாக ஓர் அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகளை அது நிறைவேற்ற பத்துப் பதினைந்து வருடங்கள் தேவையென சீனத் தலைவர்கள் தம்மிடம் தெரிவித்தனர் என்பதை நினைவிற் கொண்டால், அடுத்த பொதுத்தேர்தல் எப்போது என்பதும், புதிய அரசியலமைப்பு எவ்வாறானது என்பதும் கற்பனைக்கு அப்பாற்பட்டது.

இது ஒருபுறம் போக, தமிழர் அரசியல் நிலைப்பாட்டுக்கு மீண்டும் வருவோம். சுவிஸ் தூதுவர் தமிழர் தரப்பினருடன் மேற்கொள்ள இருந்த சந்திப்பு ஒத்தி வைக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. தமிழரசுக் கட்சியின் தனிப்போக்குதான் இதற்குக் காரணமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தரப்பினர் கூறுகின்றனர். இதனாற்தான் போலும் தங்களின் தமிழ்த் தேசிய பேரவையின் சார்பில் ஒரு முக்கிய கூட்டத்தை நடத்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஏற்பாடு செய்திருக்கின்றார். சமஷ்டியை அனைவரும் ஒன்றாக வலியுறுத்த வேண்டுமென்பதே இக்கூட்டத்தின் அடிப்படை. தமிழரசுக் கட்சிக்கும் இவரால் அழைப்பு விடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பொது இணக்கப்பாட்டை எட்டுவதற்கு தங்களது ஒத்துழைப்பைக் கோருவதுடன், பெறுமதி மிக்க பங்களிப்பை வழங்கக்கூடிய உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்' என்று விநயமாக இந்த அழைப்பின் வாசகம் அமைந்திருந்தது. பெறுமதி மிக்க பங்களிப்பை தமிழரசாரிடமிருந்து கஜேந்திரகுமார் நிச்சயமாக எதிர்பார்த்திருக்க மாட்டார். அதுபோலவே அவரது அழைப்புக்கான பதிலும் வந்தது.

கூட்டத்தில் பங்கேற்க மாட்டோம் என்று கூறாது, பங்கேற்கும் சாத்தியமில்லை என்று கட்சியின் பதில் தலைவர் சிவஞானம் பதிலளித்துள்ளார். சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒருபோதுமே ஒட்டாது என்பதற்கு இவர்களே நல்ல உதாரணம். இனம் அழிந்தாலென்ன, மண் பறிபோனாலென்ன எங்களுக்குள் யார் தலைவர் என்கின்ற போட்டி இருக்கும் வரை, இவர்கள் பார்வை இனப் பிரச்சனை தீர்வுப் பக்கம் காணப்படவில்லை. இவர்களிடம் இப்போது முனைப்புப் பெற்றிருப்பது சமஷ்டியா, ஏக்கிய ராஜ்யவா என்பதுவே.



அநுர குமர அரசாங்கத்தின் தெரிவு என்ன? எப்போது தெரியவரும்? ஒன்று மட்டும் நிச்சயம். புதிய அரசியலமைப்பு வருமாயின் சமஷ்டி என்ற பெயர் அதில் இடம்பெறுவதற்கான சாத்தியமில்லை. சிங்கள தேசம் ஒருபோதும் இதற்கு அனுமதிக்கப் போவதில்லை. தமிழ்த் தலைவர்கள் தமிழரின் தேசிய பிரச்சனைத் தீர்வுக்கு எப்போது ஒன்றுபடுவார்கள்?

கட்டுரையாளர்:- பனங்காட்டான்

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.


14 பெப்ரவரி 2026 முதல் 20 பெப்ரவரி 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### Dr இரத்தினவடிவேல் மயில்வாகனம்

மலர்வு:- 02.04.1927 உதிர்வு:-22.02.2012

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டு சிவபதம் அடைந்த அமரர் டாக்டர் இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களின் 14வது ஆண்டு நினைவு நாள் 18 பெப்ரவரி 2026 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 17வது ஆண்டு நினைவஞ.சலி



### திருமதி சீனித்தம்பி செல்வம்

அன்புவெளிபுரம் திருகோணமலையைச் சேர்ந்த திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களது 17வது ஆண்டு நினைவுநாள் 18 பெப்ரவரி 2026 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பொன்னையா தம்பையா

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகக் கொண்டிருந்த திரு பொன்னையா தம்பையா அவர்களது 14வது ஆண்டு நினைவு நாள் 10 பெப்ரவரி 2026 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பொன்னையா தம்பையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஸ்ரீதரன் கிருஷ்ணவேணி

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணவேணி ஸ்ரீதரன் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 16 பெப்ரவரி 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கிருஷ்ணவேணி ஸ்ரீதரன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அப்புத்துரை சின்னம்மா

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் மானிப்பாயை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அப்புத்துரை சின்னம்மா அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாள் 14 பெப்ரவரி 2026 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி அப்புத்துரை சின்னம்மா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி தனபாலசிங்கம்

நாவலர்மடம் நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களது 14வது ஆண்டு நினைவு நாள் 27 பெப்ரவரி 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




01 பெப்ரவரி 2026 ஞாயிற்றுக்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலாம்பிகை கந்தையா அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 பெப்ரவரி 2026 ஞாயிற்றுக்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலாம்பிகை கந்தையா அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 பெப்ரவரி 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி பராசக்தி தர்மலிங்கம் அவர்களது 72வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திருமதி பராசக்தி தர்மலிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




02 பெப்ரவரி 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கஜேந்திரா ஜெய்குமாரி இணையர்களின் செல்வப்புதல்வன் ஹரிஸின் 15வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன ஹரிஸ் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




08 பெப்ரவரி 2026 ஞாயிற்றுக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




10 பெப்ரவரி 2026 செவ்வாய்க்கிழமை கனடாவில் வாழம் திரு திருமதி நந்தகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கோகுலன் நந்தகுமாரின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கோகுலன் தனது பெற்றோர்களுடனும் சகோதரத்துடனும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




02 பெப்ரவரி 2026 திங்கட்கிழமை மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி ஶ்ரீபதி ஞானாம்பிகை அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




10 பெப்ரவரி 2026 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பொன்னையா தம்பையா அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




11 பெப்ரவரி 2026 புதன்கிழமை காங்கேசன்துறையைச் சேர்ந்த திரு சிவநேசன் துரைச்சாமி அவர்களது 42வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




14 பெப் 2026 சனிக்கிழமை தையிட்டியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் மானிப்பாயை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அப்புத்துரை சின்னம்மா அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




15 பெப் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஶ்ரீகரன் கயல்விழி தம்பதிகளின் செல்வப்புதல்வன் பகீரதன் ஶ்ரீகரனின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் பகீரதன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




16 பெப் 2026 திங்கட்கிழமை சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி ஶ்ரீதரன் கிருஷ்ணவேணி அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




18 பெப் 2026 புதன்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த Dr இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களுடைய 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





18 பெப் 2026 புதன்கிழமை அன்புவெளிபுரம் திருகோணமலையைச் சேர்ந்த திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களது 17வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




16 பெப் 2026 திங்கட்கிழமை கனடாவில் குடும்ப இணைவு நன்நாளுக்காக கனடாவில் வாழம் திரு திருமதி கோணேஸ்வரன் குடும்பத்தினர் அன்றைய நாளுக்காக 19 பெப் 2026 வியாழக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.

# அரசாங்கத்தின் மீதான நேர்மறை எண்ணம் அதிகரிப்பு! வெரிட்டே ரிசர்ச் அமைப்பின் சமீபத்திய ஆய்வில் தகவல்!




பொருளாதார நம்பிக்கைச் சுட்டெண் +36 ஆக உயர்ந்துள்ளது இது கடந்த நான்கு வருட கால கருத்துக் கணிப்புகளில் பதிவான மிக உயர்ந்த மட்டமாகும்

வெரிட்டே ரிசர்ச் (Verité Research) அமைப்பின் சமீபத்திய கலப் (Gallup) முறையிலான 'தேசத்தின் மனநிலை' (Mood of the Nation) கருத்துக் கணிப்பில் 2026 பிப்ரவரி தொடக்கத்தில் அரசாங்கத்தின் மீதான அங்கீகார விகிதம் 65% ஆக பதிவாகியுள்ளது. ±3 சதவீத புள்ளி பிழை வரம்புடன், இந்த அங்கீகார விகிதம் ஒரு வருடத்திற்கு முன்பு இருந்த 62% லிருந்து புள்ளிவிவர ரீதியாக நிலையானதாக உள்ளது. இதன் கள ஆய்வு பங்காளராக வன்கார்ட் சர்வே (Vanguard Survey (Pvt) Ltd) நிறுவனம் செயல்பட்டது.

அரசாங்கத்தின் மீதான அதிருப்தி விகிதம் குறைவாக உள்ளதுடன், 2025 பிப்ரவரியில் இருந்த முன்னைய கருத்துக்கணிப்பில் இருந்து மாற்றமின்றியும் காணப்படுகிறது.

இந்தக் கருத்துக் கணிப்பின் நான்கு ஆண்டுகால வரலாற்றில் முதல்முறையாக, தற்போதைய பொருளாதார நிலைமைகளை 'நல்லது' அல்லது 'மிகச்சிறந்தது' என்று மதிப்பிட்டவர்களின் எண்ணிக்கை, 'மோசமானது' என்று மதிப்பிட்டவர்களை விட அதிகமாகக் காணப்படுகிறது.

பொருளாதாரக் கண்ணோட்டம் குறித்த கருத்துகளும் முன்னேற்றம் கண்டுள்ளன. பொருளாதாரம் 'முன்னேற்றமடைந்து வருகிறது' என்று கூறுபவர்கள் ஒரு வருடத்திற்கு முன்பு காணப்பட்ட 55% லிருந்து 64% ஆக அதிகரித்துள்ளனர்.

பொருளாதாரம் 'மோசமடைந்து வருகிறது' என்று கூறியவர்களின் விகிதத்தில் பெரிய மாற்றம் இல்லை. கருத்து தெரிவிக்காதவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இது நாட்டின் பொருளாதார திசை குறித்து அதிகமான மக்கள் உறுதியாகவும் நம்பிக்கையுடனும் இருப்பதைக் வெளிக்காட்டுகிறது.

பொருளாதாரம் தொடர்பான அனைத்துக் கருத்துக்களும் ஒன்றிணைக்கப்பட்டு, மைனஸ் 100 முலம் 100 வரையான வீச்சைக் கொண்ட ஒரு பொருளாதார நம்பிக்கைச் சுட்டெண்ணாகத் (Economic Confidence Index) தொகுக்கப்படுகின்றன. இச் சுட்டெண் +36 ஆகப் பதிவாகியுள்ளது, இது ஒரு வருடத்திற்கு முன்னர் காணப்பட்ட +14 உடன் ஒப்பிடும் போது பாரிய முன்னேற்றமாகும்.

அத்துடன், ஒரு பெரும்பான்மையானவர்கள் (59%) நாட்டில் 'காரியங்கள் நடக்கும் விதம்' குறித்து திருப்தி அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். கடந்த நான்கு ஆண்டுகால கருத்துக்கணிப்பில் திருப்தி நிலைகள் 50% க்கும் அதிகமாக உயர்ந்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

தற்போதைய அரசாங்கமானது, கடந்த கால அரசாங்கங்களுடன் ஒப்பிடப்பட்ட பல்வேறு அம்சங்களில், ஊழலைக் குறைப்பதை விடவும் போதைப்பொருள் மற்றும் குற்றங்களைக் குறைப்பதற்கே அதிக நேர்மறையான மதிப்பீடு கிடைத்துள்ளது.

வழக்கமாக நடத்தப்படும் இந்த 'தேசத்தின் மனநிலை' கருத்துக் கணிப்பு, வெரிட்டே ரிசர்ச் அமைப்பின் பரந்துபட்ட அரசியல் விளக்கங்களுக்கு வலுச்சேர்க்கின்ற ஒரு அங்கமாகும்.

இந்த பொறிமுறையானது ஏனைய நிறுவனங்களும் இலங்கை மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக தங்கள் கேள்விகளைச் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கிறது. கருத்துக் கணிப்பு முடிவுகள் குறித்த மேலதிக விவரங்கள் சேவை பெறுவோருக்கு கிடைக்கின்றன.

இச் சமீபத்திய கருத்துக் கணிப்பானது 2026 ஜனவரி 24 முதல் 2026 பிப்ரவரி 03 வரை, தனித்தனிக் குடும்பங்களைச் சேர்ந்த 1,048 இலங்கையைச் சேர்ந்த பெரியவர்களிடம் தேசிய அளவில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட, பல கட்ட சீரற்ற மாதிரி முறையில் நடத்தப்பட்டது. இது 95மூ நம்பிக்கை மட்டத்தில் அதிகபட்சமாக ±3.0 சதவீத புள்ளி (pp) மாதிரி பிழை வரம்பைக் கொண்டிருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அமுலாக்கச் செயல்பாட்டில் ஏற்படக் கூடிய குறைபாடுகளால் இந்தப் பிழை வரம்புகளில் மேலும் மாற்றத்தை ஏற்படுத்தகூடும்.






## ரில்வின் சில்வாவின் இந்தியப் பயணத்தின் போது 13 குறித்து பேச்சு!



மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா இந்தியாவுக்கு தமது முதலாவது அதிகாரபூர்வ பயணமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்திய கலாசார உறவுகளுக்கான நிலையத்தின் அழைப்பின் பேரில் கடந்த 5ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை அவரின் இந்த இந்திய விஜயம் அமைந்திருந்தது.

இதன் போது இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பவன் கபூர் ஆகியோரை ரில்வின் சில்வா உள்ளிட்ட குழுவினர் சந்தித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பின் போது 13ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டம் மற்றும் அதன் அடிப்படையில் இலங்கையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக அரசியல் தரப்புகள் தெரிவிக்கின்றன.

இது இலங்கையின் தற்போதைய அரசியல் சூழலில் மிக முக்கியமான நகர்வாகும் எனக் குறிப்பிடப்படுகின்றது. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நலத்திட்டங்கள் குறித்து இதன் போது ஆலோசிக்கப்பட்டுள்ளது என்று இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அயலவருக்கு முதலிடம்' மற்றும் 'மஹா சாகர்' தொலைநோக்குப் பார்வையின் கீழ் இலங்கைக்கான இந்தியாவின் ஆதரவு இங்கு உறுதிப்படுத்தப்பட்டது என்றும் அந்த அறிக்கையில் குறிப்படப்பட்டுள்ளது.

# கிரிக்கெட் இராஜதந்திரம் சார்க்கிற்கும் பொருந்துமா?

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்

கொழும்பு 15 பெபரவரி 2026

உலகக் கிண்ண இருபது20 கிரிக்கெட் போட்டியில், இந்திய – பாகிஸ்தான் அணிகள், கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் மோதுகின்றன.

இன்றிரவு நடக்கும் இந்த போட்டியில் வெற்றி பெறப் போகும் அணி இந்தியாவாகவோ பாகிஸ்தானாகவோ இருக்கலாம்.

ஆனால் இவற்றை விட இலங்கைக்குத்




தான் முக்கியமான வெற்றி. இந்த போட்டியை நடத்த வைப்பதில் இலங்கையின் அரசியல் தலைமைத்துவம் வெற்றி பெற்றிருக்கிறது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நிலவுகின்ற பிரச்சினை, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டிகளைக் கூட அரிதாக்கி விட்டது.

இந்தியாவும் பாகிஸ்தானம் மோதுகின்ற கிரிக்கெட் போட்டிகள் எப்போதுமே விறுவிறுப்பாகவும் உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்துவதாகவும் இருக்கும். ஆனால் கடந்த பல ஆண்டுகளாக இந்தப போட்டிகள் நடப்பதே அபூர்வமானதாகி விட்டது.

ஐ.சி.சி. ரி20 உலகக் கிண்ண போட்டிகளில், இந்தியாவில் நடக்கும் ஆட்டங்களில் இருந்து பங்களாதேஷ் அணி விலகிக் கொண்டதும், கொழும்பில் இந்தியாவுடனான போட்டியிலிருந்து பாகிஸ்தான் விலகிக் கொண்டதும் சர்ச்சைக்குரிய விடயங்களாக இருந்தன.

பங்களாதேஷ் பங்கு பெறும் போட்டியை, இந்தியாவில் இருந்து இலங்கைக்கு மாற்றுவதற்கு பாகிஸ்தானும் ஆதரவளித்தது. ஆனால், அந்த முயற்சி வெற்றி பெறவில்லை.

இந்த நிலையிலேயே பாகிஸ்தான் அணி இந்தியாவுடனான போட்டியை தவிர்க்கும் என அரசியல் ரீதியான முடிவு எடுக்கப்பட்டது. இது இலங்கைக்கு பேரிழப்பை ஏற்படுத்தவிருந்தது.

ஏனென்றால் இந்தப் போட்டி நடந்தால், இலங்கையின் சுற்றுலாத் துறைக்கு பெரும் ஆதாயத்தைக் கொடுக்கும். இதற்காக இந்தியா பாகிஸ்தானில் இருந்து பெருமளவில் இரசிகர்கள் வந்து சேருவார்கள்.

இது இலங்கையின் சுற்றுலாத் துறையை பெருமளவில் மீட்சி பெற வைக்கும். அதனால் தான், பாகிஸ்தான் அணி போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்தபோது இலங்கை அரசாங்கம் பெரிதும் கவலை அடைந்தது.

கிட்டத்தட்ட இந்த போட்டி நடக்காது என்ற சூழலே காணப்பட்டது. ஆனால், மிக இரகசியமாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்புடன், பேச்சு நடத்தி, பாகிஸ்தான் அணியை இந்தியாவுடனான போட்டியில் பங்கேற்க இணங்க வைத்திருக்கிறார் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க. அவரது இந்த முயற்சி, சிறந்த இராஜதந்திரமாக பாராட்டப்படுகிறது.

இந்திய – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இன்றைய ஆட்டம் நடக்கிறது என்றால், அதற்கு முழுக் காரணம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தான். அவர் தலையீடு செய்ததால் தான், இது சாத்தியமானது.

இந்தப் போட்டி நடைபெறுவதால், கடந்த சில நாட்களாக சென்னைக்கும் கொழும்புக்கும் இடையிலான விமான கட்டணங்கள் நான்கு, ஐந்து மடங்குகளுக்கு மேல் உயர்ந்து விட்டன. அந்தளவுக்கு இது பொருளாதாரப் பெறுமானம் மிக்க ஒன்றாக மாறி இருக்கிறது.

பாகிஸ்தான் மற்றும் இந்திய அணிகள், அடுத்தடுத்த சுற்று ஆட்டங்களுக்கு தெரிவு செய்யப்படுமேயானால் அது இலங்கைக்கு இன்னும் அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும். ஏனென்றால் அந்தப் போட்டிகள் இந்தியாவில் நடக்காது, இலங்கையில் தான் நடத்தப்படும்.

இந்த கிரிக்கெட் இராஜதந்திரத்தில் இலங்கை தனது மென்சக்தியை பயன்படுத்தி இருப்பது குறித்து ஆய்வாளர்கள் பலரும் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள்.

இலங்கை எப்போதுமே இரண்டு நாடுகளுக்கும் இடையில் பக்கசார்பு நிலைப்பாட்டை எடுத்ததில்லை. இரண்டு நாடுகளும் போரில் ஈடுபட்ட போது கூட, இலங்கை அரசாங்கம் அதில் தலையீடு செய்யாமலேயே இருந்து வந்தது. அது இலங்கை தன்னை காப்பாற்றிக் கொள்வதற்காக எடுத்துக் கொண்ட தீர்மானம்.

ஆனால், இரண்டு நாடுகளும் இலங்கையின் இந்த நிலைப்பாட்டை மதிக்கின்றன என்பதை, இன்று கொழும்பில் நடக்கவுள்ள கிரிக்கெட் போட்டி உறுதி செய்கிறது. இந்த இரண்டு நாடுகளுடன் ஒப்பீடு செய்கின்ற போது, இலங்கை ஒன்றும் வலுவான நாடு அல்ல. அவை அணுவாயுத பலத்தைக் கொண்டிருக்கும் நாடுகள். ஆனாலும் இந்த விவகாரத்தை கையாளுவதில், பிரச்சினையை தீர்ப்பதில் இலங்கை வெற்றி கண்டிருக்கிறது.

இதனால் தான், இலங்கையின் மென்சக்தியின் வெற்றியைக் குறித்து ஆய்வாளர்கள் ஆச்சரியத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

சர்வதேச அரங்கில் இலங்கை தனது நிலையை மேலும் வலுப்படுத்தவதற்கு, இதுபோன்ற வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

பூகோள அரசியல் அரங்கில் இலங்கைக்கு உள்ள அமைவிட முக்கியத்துவம், இதுபோன்ற இராஜதந்திர முயற்சிகளுக்கு பலனளிக்கக் கூடியதாகவும் இருக்கும். இலங்கையை மையப்படுத்தி பல நாடுகள் பூகோள அரசியல் ஆட்டத்தை ஆடுகின்றன.

அவ்வாறு இலங்கையை மையப்படுத்தி பூ கோள அரசியல் ஆட்டத்தை ஆடுகின்ற நாடுகளில் இந்தியா, பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளும் உள்ளடங்கியிருக்கின்றன.

இவ்வாறான பூகோள அரசியல் ஆட்டத்திற்குள் சிக்கிக்கொள்ளாமல், தப்பித்திப்பதற்கான ஒரே வழி இதுபோன்ற இராஜதந்திர செயல்பாடுகளை கையாளுவது தான். இரண்டாம் உலகப் போரின் முடிவில் சுவிட்சர்லாந்து எந்தப் பக்கமும் சாயாமல் தனித்து நின்றது.

அதனால் தான், ஜெனிவாவில் ஐ.நாவின் இரண்டாவது தலைமையகம் அமைவதற்குக் காரணம்.

இலங்கை, பலஸ்தீனம் போன்ற பிரச்சினைகளில் முன்னர் நோர்வே மத்தியஸ்த செயற்பாடுகளில் ஈடுபட்டது.

அண்மைக் காலங்களில் கட்டார், சவுதி அரேபியா போன்ற நாடுகள் இத்தகைய பாத்திரத்தை வகித்து வருகின்றன. இவை உக்ரேன் – ரஷ்ய பிரச்சினை, இஸ்ரேல் – ஈரான் பிரச்சினை போன்றவற்றிலும் கூட, மத்தியஸ்தம் வகிக்கின்ற சூழல் காணப்படுகின்றது.

இலங்கை இந்த நாடுகளைப் போன்று பொருளாதாரப் பலம் கொண்டதாக இல்லாவிட்டாலும், அமைவிட முக்கியத்துவ ரீதியாக இத்தகைய இராஜதந்திர செயற்பாடுகளுக்கான களமாக இருக்கக் கூடும். அதற்கான வகிபாகத்தை கொண்டிருக்கக் கூடிய சாத்தியங்களை நிராகரிக்க முடியாது. அவ்வாறு கையாளுவதற்கான சில பிராந்திய பிரச்சினைகளும் தற்போது உள்ளன.

தெற்காசியப் பிராந்தியத்தில் பங்களாதேக்கும் இந்தியாவுக்கும் இடையில் அண்மையில் ஏற்பட்டுள்ள பிணக்குகள், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே காணப்படுகின்ற பிரச்சினைகள் என்பன இதில் முக்கியமானவை.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பிரச்சினைகளின் விளைவாகவே, தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பு எனப்படும், 'சார்க்' அமைப்பு இன்று செயலற்று போயிருக்கிறது.

1985 ஆம் ஆண்டு டாக்காவில் நடந்த தெற்காசிய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு, இந்தியாவின் தற்போதைய அரசாங்கத்தினால் முடக்கப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் இந்த அமைப்பில் அங்கம் வகிப்பது தான் இதற்கு முழுக் காரணம் என்பது இரகசியமான விடயம் அல்ல.

பாகிஸ்தானை ஓரம் கட்டுவதற்காக சர்வதேச அமைப்புகளில் இருந்து விலக்கி வைப்பதற்காக சார்க் அமைப்பையே இந்தியா செயலற்றதாகியது.

அந்த மாநாட்டை நடத்த விடாமல் செய்து, பல ஆண்டுகளாக அது முடங்கிப் போய் இருப்பதற்கு காரணமாக இருக்கிறது.

அதற்குப் பதிலாக, 'பிம்ஸ்டெக்' என்ற அமைப்பை இந்தியா வலுப்படுத்தி, பிராந்தியத்தில் தனது முதல் நிலையை உறுதி செய்து வருகிறது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நீடித்து வருகின்ற இந்த பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு யாரும் தலையிட முடியாத சூழலே இருக்கிறது.

இப்போது, இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் இடையே ஏற்பட்டுள்ள பிணக்குகளை அடுத்து, பங்களாதேஷும் பாகிஸ்தானும் இராஜதந்திர ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் நெருக்கமடைந்திருக்கின்றன.

இவை, முன்னர் ஒரே நாடாக இருந்தவை. 1971 ஆம் ஆண்டு போரின் போது, இந்தியாவினால் பாகிஸ்தான் பிளவுபடுத்தப்பட்டு பாகிஸ்தான் உருவாக்கப்பட்டது. இப்போது, இந்தியா மூலம் சுதந்திரம் பெற்ற பங்களாதேஷ், அதே இந்தியாவுக்கு எதிராக திரும்பி நிற்கிறது.


எந்த நாட்டுக்கு எதிராக சுதந்திரம் கேட்டு போராடியதோ, அதே பாகிஸ்தானுடன் கூட்டு சேர்ந்து நிற்கிறது பங்களாதேஷ்.

இவ்வாறான சிக்கலான பிராந்திய அரசியல் சூழலில் பதற்றங்களை தணிப்பதற்கும், ஒத்துழைப்பை பலப்படுத்துவதற்கும் உகந்த தலைமைத்துவம் பிராந்தியத்தில் இல்லாத நிலை காணப்படுகிறது. அந்த இடைவெளியை நிரப்புவதற்கு இலங்கை முயற்சிக்க முடியும்.

சார்க் அமைப்பை மீள செயற்பட வைப்பதற்கான இராஜதந்திர முயற்சிகளில், (23ம் பக்கம் பார்க்க)

EELANADU 20 Feb 2026 ஈழநாடு

# அரபு நாடுகளில் குவிக்கப்பட்டுள்ள அமெரிக்க இராணுவம்!




முன்னாள் சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்ததிலிருந்து தனிப்பெரும் வல்லரசாக இஸ்ரேல் மற்றும் சியோனிச யூத சக்திகளின் தீய வடிவமைப்புகளைச் செயல்படுத்தி வரும் அமெரிக்கா, பல அரபு நாடுகளின் மீது படையெடுப்புக்களை நடத்தி, அந்த நாடுகளை அழித்துள்ளது.

எட்டு ஆண்டு கால ஈராக்–ஈரான் போரிலிருந்து தொடங்கி குவைத் நெருக்கடி மற்றும் வளைகுடா போர் எண்ணெய் வளம் நிறைந்த மற்றும் அந்தக் காலப் பகுதியில் பெரும்பாலும் வளர்ச்சி கண்டிருந்த ஈராக், லிபியா மற்றும் சிரியா மீதான படையெடுப்புகள் மற்றும் அந்த நாடுகளில் ஏற்படுத்தப்பட்ட அழிவுகள் என இந்த அட்டகாசங்கள் தொடர்ந்தன. இன்னும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இன்று காஸாவில் பலஸ்தீனர்கள் மீதான இனப்படுகொலையில் அமெரிக்கா இஸ்ரேலுக்கு வெளிப்படையாக ஆதரவளித்து வருகின்றது. காஸா இப்போது கிட்டத்தட்ட ஒரு கல்லறையாகவும் தரிசு நிலமாகவும் மாற்றப்பட்டுள்ளது.

அரபு சர்வாதிகாரிகள் தங்கள் சொந்த மக்களையே காட்டிக் கொடுத்துள்ளார்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் இன்றுள்ள இருபத்திரண்டு அரபு நாடுகளில் பதினொரு நாடுகளில் அமெரிக்கா தனது இராணுவத் தளங்களைக் கொண்டுள்ளது என்று இப்போது அறிக்கைகள் வெளிவந்துள்ளன. அமெரிக்க இராணுவ இருப்பு என்பது இஸ்ரேலிய இராணுவ இருப்பையும் சேர்ந்தே குறிக்கின்றது என்பதை இங்கு மறந்து விடக் கூடாது.

அமெரிக்க வெளியுறவு கவுன்ஸிலின் கூற்றுப்படி மத்திய கிழக்கு முழுவதும் குறைந்தது அமெரிக்காவின் 19 தளங்கள் உள்ளன. அவற்றில் எட்டு நிரந்தரமான தளங்களாகக் கருதப்படுகின்றன. பஹ்ரைன், எகிப்து, ஈராக், இஸ்ரேல், ஜோர்டான், குவைத், கத்தார், சவுதி அரேபியா, சிரியா, ஓமான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளில் உள்ள இராணுவ தளங்கள் இதில் அடங்கும். இவற்றுக்கு அப்பால் துருக்கி மற்றும் ஜிபூட்டியில் அமெரிக்கா பெரிய இராணுவத் தளங்களை பராமரித்து வருகின்றது.

பஹ்ரைனில் 9,000 அமெரிக்க துருப்புக்களுக்கு இடமளிக்கும் வகையில் அமெரிக்க கடற்படையின் ஐந்தாவது கடற்படை பிரிவின் தலைமையகம் உள்ளது. வளைகுடா, செங்கடல், அரேபிய கடல், மற்றும் இந்தியப் பெருங்கடலின் சில பகுதிகளை கட்டுப்படுத்தும் தலைமை இடமாக இது அமைந்துள்ளது.

கத்தாரில் உள்ள அல்–உதைட் விமானத் தளம் சுமார் 10,000 துருப்புக்களுக்கான வசதிகளைக் கொண்டுள்ளது. இதுவே பிராந்தியத்தின் மிகப்பெரிய அமெரிக்கத் தளமாகும். டோஹாவின் புறநகரில் உள்ள பாலைவனப் பகுதியில் அமைந்துள்ள இந்த தளம் தான் செண்ட்காம் என்றும் அழைக்கப்படும் அமெரிக்க மத்திய கட்டளையின் தந்திரோபாய தலைமையகம் ஆகும். இந்த செண்ட்காமின் பொறுப்பில் தான் மத்திய கிழக்கு மற்றும் மத்திய மற்றும் தெற்காசியாவின் சில பகுதிகள் விடப்பட்டுள்ளன.

குவைத்தில் ஆரிஃப்ஜான் முகாம் அமைமந்துள்ளது. இது அமெரிக்க இராணுவ மையத்தின் தந்திரோபாய தலைமையகத்தின் அல்லது செண்ட்காமின் இராணுவ அங்கமாக செயல்படும் ஒரு இராணுவப் பிரிவாகும்.

குவைத்தின் ஈராக் எல்லையில் அலி அல்–சேலம் விமானத் தளமும் உள்ளது. மற்றொரு குவைத் தளம் கேம்ப் பியூ ஹ்ரிங் ஆகும். இது ஈராக் மற்றும் சிரியாவுக்குச் செல்லும் பிரிவுகளுக்கான அமைவிடமாக இருந்து வருகின்றது. மொத்தத்தில் சுமார் 13,500 அமெரிக்க துருப்புக்கள் குவைத்தில் நிறுத்தப்பட்டுள்ளன.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் 3,500 அமெரிக்க துருப்புக்களும் வொஷிங்டனும் அமீரகமும் பகிர்ந்து கொள்ளும் அல்–தஃப்ரா விமானத் தளமும் உள்ளன.இது ஐ.எஸ் குழுவுக்கு எதிரான பணிகளுக்காகவும் பிராந்தியத்தில் உளவு பணிகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

ஈராக்கில் அமெரிக்காவின் பொறுப்பில் அன்பார் என்ற இடத்தில் உள்ள ஐன் அல்–அசாத் விமானத் தளமும் இதில் அடங்கும். ஓரளவு தன்னாட்சி அதிகாரம் பெற்ற குர்திஸ்தான் பிராந்தியத்தில் எர்பில் விமானத் தளமும் உள்ளது. இது பயிற்சிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

சவுதி அரேபியாவில் வான் மற்றும் ஏவுகணை பாதுகாப்பு திறன்களோடு சுமார் 2,700 அமெரிக்க துருப்புக்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இங்கு தலைநகர் றியாத்திற்கு அருகிலுள்ள இளவரசர் சுல்தான் விமானத் தளம் ஒரு முக்கிய விமானப்படை மையமாகும். அங்குள்ள சொத்துக்களில் பேட்ரியாட் ஏவுகணை (வான்வழி எதிர்ப்பு ஏவுகணைகள்) மற்றும் அவற்றை இயக்கும் கருவிகள் என்பனவும் அடங்கும். இந்த தளம் மத்திய கிழக்கில் அதன் பணிகளுக்கு ஜோர்டானின் அஸ்ராக்கில் உள்ள முவாஃபாக் சால்டி விமானத் தளத்தை முக்கிய மையமாக பயன்படுத்துகின்றது. இது அமெரிக்காவின் 332 ஆவது விமான படைப் பிரிவை உள்ளடக்கியது. ஜோர்டானில் சுமார் 3,800 அமெரிக்க துருப்புக்களும் ஈராக்கில் 2,500 துருப்புக்களும் சிரியாவில் சுமார் 2,000 பேரும் நிலை கொண்டுள்ளனர். துருக்கியில் மேலதிக தளமாக துருக்கியப் படைகளுடன் இணைந்து இயங்கும் முக்கிய தளம், தெற்கு அதானாவில் உள்ள இன்சிர்லிக் விமானத் தளமாகும். அந்த தளத்தில் அமெரிக்க அணு ஆயுதங்கள் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

சமீபத்தில் இந்தப் பிராந்தியத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ள அமெரிக்க சொத்துக்கள் என்ன?

தற்போது மத்திய கிழக்கில் சுமார் 40,000 அமெரிக்க துருப்புக்கள் இருப்பதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அவர்களில் கால் பகுதியினர் அல்–உதைட்டில் உள்ளனர். இங்கு போர் விமானங்கள், இராணுவ தாங்கிகள், வான்வழி எரிபொருள் நிரப்பும் வசதிகள், மற்றும் உளவுத்துறை சொத்துக்கள் என ஏராளமான வளங்கள் குவிக்கப்பட்டுள்ளன. பணியாளர்களைப் பொறுத்தவரை அடுத்த மிகப் பெரிய தளம் பஹ்ரைனில் உள்ள கடற்படைத் தளம் என்று கருதப்படுகின்றது.

தற்போது மத்திய கிழக்கிற்கு கடற்படை வலுவூட்டல்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. தென் சீனக் கடல் பகுதியில் இருந்து வெளியேறி தற்போது செண்ட்காம் பகுதியில் சேவையாற்றும் வகையில் அரபிக் கடல் பிரதேசத்துக்குள் நுழைந்துள்ள இராட்சத யூஎஸ்.எஸ். ஆபிரகாம் லிங்கன் மத்திய கிழக்கு செயற்பாடுகளின் மையப்பகுதியாக இருக்கும்.

யூ .எஸ்.எஸ் ஆபிரகாம் லிங்கன் அணுசக்தியால் இயங்கும் விமானம் தாங்கி கப்பல் ஆகும். அதன் தாக்குதல் அணியில் டோமாஹாக் கப்பல் ஏவுகணைகள், ஆர்லே பர்க்– ரக வழி நடத்தலின் கீழ் செயற்படும் ஏவுகணைகள் நாசகாரிகள் என்பன அடங்கும். இவை ஈரானிய எல்லைக்குள் புகுந்து ஆழமாக தாக்கக் கூடிய திறன் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்..

மேலும் இந்த கப்பலில் பல்வேறு வகையான தாக்குதல் விமானங்கள், இலத்திரனியல் யுத்த சாதனங்கள், மற்றும் (ரேடார்களை செயலிழக்க செய்யும்) ரேடார்–ஜாமிங் விமானங்கள், ஹெலிகொப்டர்கள், மிகவும் பலம் வாய்ந்த ஸ்டெல்த் ரக போர் விமானங்கள், மற்றும் அவற்றின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய பல படைப்பிரிவுகள் என்பனவும் உள்ளன. யூ.எஸ்.எஸ். ஆபிரகாம் லிங்கன் கப்பலில் 5,680 பணியாளர்கள் உள்ளனர். செண்ட்காம் பகுதியில் உள்ள யூ எஸ்.எஸ் மெக்ஃபால், யூ எஸ்.எஸ் மிட்சர் மற்றும் மத்திய தரைக் கடலில் உள்ள யூ .எஸ். எஸ்.ரூஸ்வெல்ட் உள்ளிட்ட பிராந்தியத்தில் ஏற்கனவே நிலைகொண்டிருந்த கடற்படை கப்பல்களும் தற்போது இந்த அணியில் இணைந்துள்ளன. ஈரானை இலகுவாக தாக்கக்கூடிய தூரத்திற்குள் அமெரிக்கப் படைகள் மற்றும் தாக்குதல் விமானங்கள் ஆயுதங்கள் என்பன நிலை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடற்படை நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக அமெரிக்க இராணுவம் அதன் தரை வழி செயற்பாடுகளையும் பாதுகாப்பையும் வலுப்படுத்தவும் தயாராகி வருகின்றது. எதிர்வரும் நாட்களில் 'தாட்' ரக வான்வழி பாதுகாப்பு முறையும் இணைத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக' இஸ்ரேலின் சேனல் 13 செய்தித் தளம் தெரிவித்துள்ளது.

ஜோர்டானில் உள்ள முவாஃபாக் சால்டி விமானத் தளத்தில் எவ்–15 ரக போர் விமானங்களின் ஒரு படைப்பிரிவைக் கட்டியெழுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக திறந்த அடிப்படையில் பரவலாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய விமான கண்காணிப்பு தகவல்கள் சுட்டிக் காட்டுகின்றன. மத்திய கிழக்கை நோக்கி செல்லக்கூடிய இன்னும் பல வான்வழி நடவடிக்கைகள் குறித்த சமிக்ஞைகளும் வெளியாகி இருப்பதாக மேலும் தெரிய வந்துள்ளது.

இது மிகவும் சித்தரிக்கப்பட்ட ஏற்பாடுகளாகவும் தெரிகின்றது. கட்டார் ஊடாக ஈரான் அமெரிக்காவுக்கு மறைமுக எச்சரிக்கையை விடுத்துள்ளது. இதனால் டோஹாவும் மற்றும் வொஷிங்டனும் முன்கூட்டியே தங்களை நன்கு தயார் செய்து கொள்ள முடிந்தது. தனது எல்லைக்குள் ஈரான் மீண்டும் மீண்டும் பதிலடி தாக்குதல் நடத்துவது குறித்து கட்டார் மிகவும் எச்சரிக்கையாக இருக்கின்றது.

ஈரான் மீது அமெரிக்கத் தாக்குதல் நடந்தால் செங்கடலில் கப்பல்கள் மீதான தாக்குதல்கள் மீண்டும் தொடங்கப்படும் என்று அதிகாரப்பூர்வமாக 'அன்சார் அல்லா' என்று அழைக்கப்படும் யேமனின் ஹவுத்திகள் கூறியுள்ளனர். அதே நேரத்தில் ஈராக்கில் ஈரான் ஆதரவு துணைப்

(23ம் பக்கம் பார்க்க)

# நிறுத்தி வைக்கப்பட்ட சந்திப்பு?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



கொழும்பில் உள்ள சுவிற்சலாந்து தூதரகம் வரும் 19ஆம் தமிழ் கட்சிகளுக்கு இடையில் ஒரு சந்திப்பை ஒழுங்குப்படுத்தியிருந்தது. இனப் பிரச்சினைக்கான தீர்வில் ஒருமித்த நிலைப்பாட்டை எட்டுவது இந்த அழைப்பின் நோக்கம் என்று கருதப்படுகிறது. எனினும் அந்தச் சந்திப்பு இடம் பெறாது என்று தெரிய வருகிறது. அதற்கு காரணம், சுமந்திரன் அதை விரும்பவில்லை என்ற பொருள்பட சிங்கள ஊடகமான TTV.Lk தகவல் வெளியிட்டுள்ளது. 19ஆம் தேதி நடக்கவிருந்த சந்திப்பு தொடர்பான செய்திகள் ஊடகங்களுக்கு கசிந்தமை தொடர்பில் சுவிற்சலாந்து தூதரகம் மகிழ்ச்சியாக இல்லை என்று தெரிகிறது. கட்சிகளுடைய வேண்டுகோளின் அடிப்படையில் தான் தூதரகம் மேற்படி சந்திப்புக்கு ஏற்பாடு செய்தது என்றும் தூதரக வடாரங்கள் தெரிவித்தன.

அதேசமயம் மேற்சொன்ன சந்திப்பு நடப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு அதாவது இன்று 15ஆம் திகதி குடிமக்கள் சமூகங்களையும் கட்சிகளையும் ஒரு சந்திப்புக்கு வருமாறு தமிழ்த் தேசியப் பேரவை அழைப்பு விடுத்திருந்தது. எகிய ராஜ்ய என்று அழைக்கப்படும் இடைக்கால வரைபை அரசாங்கம் இனப் பிரச்சினைக்கான ஒரு தீர்ப்பாக முன் வைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதினால், அதனை எதிர்த்து தமிழ்த் தரப்பு ஒரே குரலில் சமஷ்டித் தீர்வை அதாவது கூட்டாட்சித் தீர்வை வலியுறுத்த வேண்டும் என்றும். அது தொடர்பான ஒரு பொது நிலைப்பாட்டை எட்டுவதற்காகவே அச்சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டதாகவும் அந்த அழைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 15ஆம் திகதி அதாவது சந்திப்பு இடம் பெறுவதும் சுவிற்சலாந்து தூதரகத்தின் சந்திப்பை தமிழரசுக் கட்சி ஆர்வத்தோடு அணுகாமைக்கு ஒரு காரணம் என்று தெரிகிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் சுவிற்சலாந்து அண்மை ஆண்டுகளாக அதிகம் ஆர்வம் காட்டி வருகிறது. இலங்கைக்கும் அந்த நாட்டுக்கும் இடையிலான ராஜிய தொடர்புகளின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இவ்வாறான நல்லிணக்க முயற்சிகளில் தாம் ஈடுபடுவதாக தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே நாலாம் கட்ட ஈழப் போருக்கு முன்னரான நோர்வேயின் சமாதான முயற்சிகள் தோல்வியடைந்த பின்னணியில் இப்பொழுது சுவிற்சலாந்து, தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் புதிய முயற்சிகளை ஆரம்பித்திருப்பதாக அரசியல் வட்டாரங்களில் நம்பப்படுகிறது.

சுவிற்சலாந் இதற்கு முன்னரும் இமாலயப் பிரகடனத்தின் பின்னணியில் நின்றது. மகா சங்கத்துக்கும் சில புலம்பெயர்ந்த அமைப்புகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளின் விளைவாக அந்த பிரகடனம் உருவாக்கப்பட்டது. அது அடுத்தடுத்த கட்டத்துக்கு வளராத ஒரு முயற்சி.

அதன் பின் சுவிற்சலாந்து கடந்த ஆண்டு அரசாங்கமும் உட்பட தமிழ் கட்சிகளை தனது நாட்டுக்கு அழைத்து இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு தொடர்பில் உரையாட வைத்தது. அந்த உரையாடல்களின் அடுத்தடுத்த கட்டமாக கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகம் தமிழ் கட்சிகளை அழைத்து உரையாடியது. இந்த முயற்சிகளின் ஆகப்பிந்திய நகர்வாக இம்மாதம் 19ஆம் திகதி நடக்கவிருந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

சுவிற்சலாந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு, இமாலயப் பிரகடனம் போன்ற முயற்சிகளில் மட்டும் ஆர்வங் காட்டவில்லை. அதற்கும்பால், வடக்கிலிருந்து அகற்றப்பட்ட முஸ்லிம்கள் மத்தியில் செயற்படும் செயற்பாட்டாளர்களுக்கும் தமிழ் முஸ்லிம் உறவு தொடர்பான உரையாடல்களுக்கும் நிதி அனுசரணை புரிந்து வருகிறது. மேலும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான கற்கை நிலையத்திற்கும் சில செயற்பாடுகளுக்கு நிதி அனுசரனை புரிகிறது. இவ்வாறு கட்சிகள் செயற்பாட்டாளர்கள் உட்பட பல்வேறு தரப்புகளுக்கும் சுவிட்சர்லாந்து நிதி உதவிகளைச் செய்கிறது.

நல்லிணக்கம் சமாதானம் மனித உரிமைகள், நிலைமாறு கால நீதி அல்லது பொறுப்பு கூறல் போன்ற வார்த்தைகள் கவர்ச்சியானவை. ஆனால் நவீன அரசியலில் அவை தெளிவான அரசியல் இராஜதந்திர, பொருளாதார இலக்குகளைக் கொண்டவை.

இவ்வாறான நகர்வுகளின் ஒரு பகுதியாகவே இம்மாதம் 19ஆம் திகதி நடக்கவிருந்த சந்திப்பும் ஒழுங்கு செய்யப்பட்டது. அந்தச் சந்திப்பின் நோக்கம் இனப்பிரச்சினைக்கான பொதுவான ஒரு தீர்வை நோக்கி வருமாறு தமிழ் கட்சிகளை ஊக்குவிப்பது என்று விளங்கிக் கொள்ளப்பட்டது.



இந்த இடத்தில் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்க வேண்டும். கடந்த 16 ஆண்டுகளாக தமிழ்த் தரப்பு தமக்கு என்ன வேண்டும் என்பதை ஏன் ஒரே குரலில் கூற முடியவில்லை?

தீர்வு விடயத்தில் தமிழ்த் தரப்பு ஒரு பொது உடன்பாட்டுக்கு வரவில்லை என்ற குற்றச்சாட்டு தூதரக மட்டங்களில் உண்டு. பல ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளை சிவில் சமூகங்கள் சந்தித்த போது இது சுட்டிக் காட்டப்பட்டது. அப்பொழுது சிவில் சமூக உறுப்பினர்கள் சிலர் ஒரு முக்கியமான விடயத்தை எடுத்துக் காட்டினர்.

2015ல் நிலைமாறு கால நீதி செய்முறைகளின் கீழ் புதிய யாப்பை உருவாக்கும் முயற்சிகள் தொடங்கப்பட்டன. அங்கிருந்து தொடங்கி கோத்தபாயாவின் நிபுணர் குழு வரையிலுமான சுமார் 6 ஆண்டு ஆண்டு கால பகுதிக்குள் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வெவ்வேறு தரப்புகள் தீர்வு முன்மொழிவுகளை மேசையில் வைத்தன. அப்பொழுது இயங்கிக் கொண்டிருந்த தமிழ் மக்கள் பேரவை ஒரு தீர்வு முன்மொழிவை வெளியிட்டது. அது ஒரு சமஷ்டி முன்மொழிவு. அதன் பின் வடமாகாண சபை ஒரு முன்மொழிவை வெளியிட்டது. அதுவும் சமஸ்டி. தவிர வடமாகாண முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரனின் கட்சி ஒரு முன்மொழிவை வெளியிட்டது. அது சமஸ்டியை விட உயர்வான, கொன்பெடரேஷன் என்று அழைக்கப்படுகின்ற ஒரு தீர்வு. இவை தவிர புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் தீர்வு முன்மொழிவுகளை முன் வைத்தன. இப்படிப் பார்த்தால் இலங்கைத் தீவின் நவீன வரலாற்றில் இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அதிகளவு முன்மொழிவுகள் மேசையில் வைக்கப்பட்ட ஒரு காலகட்டமாக அந்த ஆறு ஆண்டு காலப் பகுதியைக் கூறலாம். இவ்வாறு முன்வைக்கப்பட்ட எல்லா முன்மொழிவுகளிலும் ஒரு பொதுப் பண்பு இருந்தது. அது என்னவென்றால் அவை அனைத்தும் சமஷ்டிப் பண்பைக் கொண்டிருந்தவை என்பது தான். இது சிவில் சமூகங்களால் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

அப்பொழுது ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி ஒருவர் கேட்டார், நீங்கள் குறிப்பிடும் அத்தனை தீர்வு முன்மொழிவுகளையும் தமிழ்த் தரப்பு ஒன்றாக ஒரு மேசையில் அமர்ந்திருந்து ஒரே ஆவணமாகக் கொடுத்ததா? என்று.

இல்லை.கொடுக்கவில்லை. ஏன் அப்படிக் கொடுக்க முடியவில்லை என்றால், மேற்சொன்ன அனைத்து தீர்வு முயற்சிகளிலும் பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சி உத்தியோகபூர்வமாக பங்கெடுக்கவில்லை. தமிழ் மக்கள் பேரவையில் தமிழரசு கட்சி இருக்கவில்லை. வடமாகாண சபையின் முன்மொழிவிலும் அது தமிழரசுக்கட்சியின் முன்னொளிவாக வைக்கப்படவில்லை. மாகாண சபையின் முன்மொழிவுதான். எனவே மேற்கண்ட அனைத்து தீர்வு முன்மொழிவுகளிலும் தமிழரசுக் கட்சி உத்தியோகபூர்வமாக பங்கெடுக்கவில்லை.

ஆனால் அப்போதைய யாப்புருவாக்க முயற்சிகளில் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தோடு பங்காளியாகச் செயல்பட்டது. அப்பொழுது தமிழ் மக்கள் பேரவையில் காணப்பட்ட சில கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கொடியின் கீழ் யாப்புருவாக்க முயற்சிகளில் ஈடுபட்டன. அந்த முயற்சிகளின் விளைவாக உருவாக்கப்பட்டது தான் எகிய ராஜ்ய என்று அழைக்கப்படுகின்ற இடைக்கால வரைபு ஆகும். அந்த வரைபானது மைத்திரிபால சிறிசேனவின் வார்த்தைகளில் சொன்னால் சிங்கள மக்களையும் பயமுறுத்தாத தமிழ் மக்களையும் பயமுறுத்தாத வார்த்தைப் பிரயோகங்களைக் கொண்டதாக உருவாக்கப்பட்டது. அதைத் தான் இப்பொழுது கஜேந்திரக்குமார் கேள்விக்கு உள்ளாக்குகிறார்.

வெளிப்படைத் தன்மையற்ற அந்த இடைக்கால வரைபானது ஒற்றையாட்சிப் பண்பு மிக்கது என்று கஜன் குற்றச்சாட்டுகிறார். அதை சுமந்திரன் மறுக்கிறார்.

அந்த இடைக்கால வரைபை உருவாக்கியதில் ஜேவிபி,தமிழரசுக் கட்சி, புளட் டெலோ ஆகியவற்றுக்கும் பங்குண்டு. ஆனால் அண்மை மாதங்களாக தமிழரசுக் கட்சியானது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பேசி வருகிறது. அதன் விளைவாக இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கி ஒரு பொது ஆவணத்தைத் தயாரிக்கப் போவதாகவும் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

எனினும் தொகுத்துப் பார்த்தால் தெரிவது என்னவென்றால், தமிழ்த் தரப்பு ஒரு பொதுவான நிலைப்பாட்டுக்கு வர முடியாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் தமிழரசுக் கட்சிதான். எனவே இப்பொழுது தமிழ்த் தரப்பு ஏன் ஒருமித்த குரலில் தீர்வை முன் வைக்க முடியவில்லை என்பதற்கு விளக்கம் கிடைக்கிறது. எல்லாருமே சமஸ்டியைத் தான் கேட்கிறார்கள். ஆனால் அரசாங்கத்தோடு இணைந்து அதாவது சிங்கள மக்களையும் பயமுறுத்தாமல் ஒரு தீர்வைக் கொண்டு வருவது என்றால் அது வெளிப்படையான சமஷ்டியாக இருக்கும் வாய்ப்புகள் குறைவு என்று தமிழரசுக் கட்சி கருதுவதாகத் தெரிகிறது.

இதை இன்னும் பிழிந்து சொன்னால் சிங்களப் பிரதிநிதிகளை பெரும்பான்மையாகக் கொண்ட நாடாளுமன்றத்துக்கு ஊடாக கிடைக்கக் கூடிய எந்த ஒரு தீர்வும் வெளிப்படைத்தன்மை மிக்கதாக இருப்பதற்கு வாய்ப்புகள் குறைவு என்பதுதான். இதை அதன் பிரயோக வார்த்தைகளில் சொன்னால், மூன்றாவது தரப்பு ஒன்றின் அழுத்தம் இல்லாமல், தமிழ்த் தரப்பு போராடாமல், உள்நாட்டுக்குள்ளேயே கண்டு பிடிக்கக்கூடிய எந்த ஒரு தீர்வும் வெளிப்படையான சமஷ்டியாக இருக்க முடியாது.

இந்த இடத்தில் தான் மூன்றாவது தரப்புகளின் பிரசன்னமும் கண்காணிப்பும் அழுத்தமும் தேவைப்படுகிறது. இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு தமிழ்த் தரப்பு போராடவில்லையென்றால், மூன்றாவது தரப்புகள் அழுத்தத்தை பிரயோகிக்கவில்லை என்றால் இரண்டு தரப்பையும் சமாதானப்படுத்தும் ஒரு தீர்வை கொண்டு வர முடியாது. இந்திய இலங்கை உடன்படிக்கை அதைத் தான் உணர்த்துகின்றது. ஆனால் 13ஆவது திருத்தம் சமஸ்ரியல்ல.

எனவே தமிழ் சிங்கள முஸ்லிம், மலையக மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிப்படைத்தன்மை மிக்க எந்த ஒரு தீர்வும் மூன்றாவது தரப்புகளின் பிரசன்னம், அழுத்தம், கண்காணிப்பு இல்லாமல் கிடைக்காது என்பது தான் கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலான அனுபவம் ஆகும். இப்பொழுது சுவிற்சலாந்து அப்படி ஒரு மூன்றாவது தரப்பாகச் செயல்படுமா? அதை இந்தியா ஆர்வத்தோடு பார்க்குமா?

# சமஷ்டி அரசியல் அடுப்புக்குள் சட்டி!

கட்டுரையாளர்:-
- அழகு குணசீலன் -

போர்க்கால சமாதான முயற்சிகளின் போது சமஷ்டி யோசனையை ஏற்க தயார் என்று எழுத்தில் தாருங்கள் என்று நோர்வேயின் சர்வதேச மத்தியஸ்தத்திற்கு தலைமை வகித்த எரிக் சொல்கைம் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளிடம் கோரினார். அப்போதே சமஷ்டி அடுப்புக்குள் வீழ்ந்த சட்டி கதை தான். இப்போது சர்வதேச அளவில் சுவிஸ் அரசாங்கம் இனப் பிரச்சினைக்கான ஒரு தீர்வுக்கு ஒரு மித்த கருத்துருவாக்கம் ஒன்றை ஏற்படுத்துவதில் கடந்த ஆண்டு இறுதியில் இருந்து களத்தில் இறங்கியிருக்கிறது.

போர் ஓய்ந்து ஒன்றரை தசாப்தங்களை கடந்த நிலையில் தமிழ்தரப்பு கூறுகின்ற மாகாணசபை அடிப்படையையும், ஆரம்பப் புள்ளியையும் தமிழ்த் தேசிய அரசியல் இழந்து கொண்டிருக்கும் ஆபத்தான சூழலில், சுவிஸ் வெளியுறவு அமைச்சினால் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அந்த முயற்சியில் ஒரு பகுதியாக சமஷ்டி பற்றி கற்றுக் கொள்ள, கடந்த ஆண்டு இறுதியில் சுவிஸ் வந்த பன்னிரெண்டு பேர் கொண்ட அரசியல் சட்டவாக்க கொள்கை வகுப்பாளர்களில் மூவர் தமிழ்த்தேசிய தரப்பு எம்.பி.க்கள். கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சத்தியலிங்கம், அர்ச்சனா இராமநாதன்.

இந்த நிலையில் சுவிஸ் அரசாங்கம் தொடர்ந்தும் தனது முயற்சியை கைவிடாது கொழும்பில் தொடர விரும்பியுள்ளது. கொழும்பு, மாலைதீவுக்கான சுவிஸ் தூதுவர் யாழ்ப்பாணம் சென்றும் பேசி கொழும்பில் ஒரு கலந்துரையாடலுக்கு தமிழ்த்தேசிய தரப்புக்கு அழைப்பு விடுத்து, சந்திப்புக்கான திகதி பெப்ரவரி 19, 2026 என்றும் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. யார், யார் பங்கு வற்றுவது என்ற பட்டியலை ஒரு தமிழ்த் தேசிய கட்சி முக்கியஸ்தர் தயாரித்து சுவிஸ் தூதரகத்திற்கு அனுப்பியதாக தெரிய



வருகிறது. இதன் மூலம் அந்த சந்திப்பை தமிழ்த்தேசிய வைக்கோல் பட்டறை நாய் அரசியல் மீண்டும் சமஷ்டி சட்டியை அடுப்புக்குள் வீழ்த்திய நிலைக்கு தள்ளியுள்ளது.

யாழ்ப்பாண பத்திரிகை ஒன்று, கலந்துரையாடலில் கலந்து கொள்பவர்களின் பெயர்களை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தேர்வு செய்தார் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த பட்டியலில் தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர் ஒருவரின் பெயர் இல்லை என்றும் கூறப்படுகிறது. மேலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணி கொழும்பு சந்திப்புக்கு முதல் தங்கள் சார்பில் இன்னொரு சந்திப்பை 15 பெப்ரவரியில் தமிழ்த்தேசிய தரப்புக்களுக்கு இடையே நடாத்த திட்டமிட்டுள்ளது. இதில் தமிழரசுக்கட்சி கலந்து கொள்ளாது என்று பதிலளித்திருக்கிறார் தமிழரசு பதில் சிவஞானம். இந்த பின்னணியில் விவகாரம் பூதாகாரம் பெற்றதினால் சுவிஸ் தூதரகம் கலந்துரையாடலை மாற்றுத் திகதி இன்றி பின்போட்டுள்ளது.

சுவிஸ் அரசாங்கத்தின் முயற்சிக்கான சூழலை புரிந்து கொள்ளல்.

எடுத்ததற்கெல்லாம் ஐ.நா.வையும், சர்வதேசத்தையும் கூப்பிடும் இவர்கள் இந்த முயற்சி வெறுமனே சுவிஸ் அரசாங்கத்தின் முயற்சியாக இருக்க முடியாது என்பதைக்கைகூட புரிந்து கொள்ளும் பூகோள அரசியல் அறிவைக் கொண்டிருக்கிறார்களா? என்ற கேள்வி எழுகிறது. உலகில் நடுநிலையான கொள்கையை அரசியல் அமைப்பில் கொண்டுள்ள சுவிஸ் இவ்வாறான விடயங்களை ஒரு பின்னணி இல்லாமல் செய்வதில்லை. இவ்வாறான கடந்த கால இராஜதந்திர அணுகுமுறைகளில் சுவிஸ் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சாதிக்கவில்லை தான், என்றாலும் இறுதிவரை சம்பந்தப்பட்ட இரு தரப்புக்கும் இடையே சர்வதேச மட்டத்தில் அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றிய அரசியலுக்கு மத்தியில் ஒரு பொறுப்பான பாத்திரத்தை வகித்து வந்திருக்கிறது.

ஈரான் அமெரிக்க இராஜதந்திர உறவுகள் ஈரானிய புரட்சிக்கு பின்னர் இருந்து ஈரானின் சுவிஸ் தூதரகம் ஊடாகவே பேணப்படுகிறது. மத்திய கிழக்கு பலஸ்தீன விவகாரங்களில் சுவிஸ் காத்திரமான பாத்திரத்தை வகிக்கிறது. சூடான், நேபாளம் சமாதான முயற்சிகளில் சுவிஸின் பங்கு கணிசமானது. கோசோவோ தனிநாடு பிரகடனத்தின் போது அதை அங்கீகரித்த முதலாவது உலக நாடு சுவிஸ். அப்போது வெளியுறவு அமைச்சராக இருந்த மிச்சலின் கால்மி ரே கோசவுக்கு சென்ற விமானத்தில் திரும்பும் போது போரில் பாதிக்கப்பட்ட கோசவோ அகதிளால் விமானத்தை நிரப்பினார். கோசோவோவில் சுவிஸ் சமாதான படையினர் நிலை கொண்டுள்ளனர்.

ஐ.நா.வில் பக்கம் சாரா நடுநிலைத் தன்மை காரணமாக உலக நாடுகளின் ஆதரவை பெற்ற ஒரு நாடு சுவிஸைத் தவிர வேறில்லை. இதனால் சுவிஸ் அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக பேச முன் வந்திருப்பதை தமிழ்தேசிய அரசியல் பத்தோடு பதினொன்றாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இதன் அர்த்தம் சுவிஸ் அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றிய நலன் சார்ந்த தீர்மானங்களோடு ஒரு போதும் ஒத்து ஓடவில்லை என்பதல்ல. அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றிய நிகழ்ச்சி நிரலில் பங்காளியாகவில்லை என்பதும் அல்ல. ஐரோப்பாவில் விடுதலைப்புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமாக இன்னும் தடை செய்யாத சுவிஸ் அரசாங்கத்திற்கு இந்த சமாதான முயற்சியில் ஈடுபடுவதற்கான முழுத் தகுதியும் இருக்கிறது.

1. புயல் அனர்த்தங்களுக்கு பின்னரான பாதிப்புக்களை மீள் கட்டுமானம் செய்ய இலங்கை அரசாங்கம் சர்வதேச உதவிகளில் தங்கியிருக்கிறது.

2.அதிகாரப்பகிர்விற்கான மாகாண சபைத் தேர்தலை நடாத்துமாறு ஒரு போதும் இல்லாதவாறு தென்னிலங்கை அரசியல் களநிலை மாறியிருக்கிறது. அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் மாகாணசபை சபைத் தேர்தலை கோருகின்றன.

3. இலங்கையின் சிறுபான்மை தேசிய இனங்கள் சார்பிலும் கட்சிகளும், பொது அமைப்புக்களும் இந்த கோரிக்கையை வலுப்படுத்தி இருப்பதுடன், தொடர்ச்சியான கலந்துரையாடல்களையும் நடாத்தி வருகின்றனர்.

4. எல்லாவற்றிற்கும் மேலாக ஐரோப்பிய ஒன்றிய ஜீ.பி.எஸ். தூதுக்குழு இலங்கையில் நிற்கின்ற காலப்பகுதியில் இந்த சந்திப்பை சுவிஸ் தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது.

5. ரில்வின் சில்வா குழுவினரின் இந்திய விஜய காலத்தில் இந்த சந்திப்பு திட்டமிடப்பட்டது.

6. ஐரோப்பிய உல்லாசப்பயணிகளுக்காகவும், முதலீட்டு பாய்ச்சலுக்காகவும் எந்த பிசாசு உடனும் உறவை பேண வேண்டிய நிலையில் இலங்கை உள்ளது.

7. பிராந்திய பூகோள அரசியலும் இந்தியா-சீனா- பசுபிக் நாடுகள் மிக மோசமான மோதலில் இல்லை.

8. மார்ச் மாதத்தில் மனித உரிமைகளுக்கான கூட்டத்தொடர் ஆரம்பமாகிறது. இதில் இலங்கை புயல் அனர்த்தத்தை அனுதாபமாக மாற்றும் இராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. ஆனால் மீள்கட்டுமானமும் அரசியல் தீர்வுக்கான முயற்சிகளும் சமகாலத்தில் முன்னெடுக்க கூடியவை என்ற சர்வதேச நிலைப்பாடு சுவிஸ் வெளியுறவு அமைச்சு மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

தீர்வுக்கும் மாகாணசபை தேர்தலுக்கும் இலங்கை அரசுக்கு அழுத்தத்தை கொடுக்கக்கூடிய இந்த சூழலையே சுவிஸ் அரசாங்கம் தேர்வு செய்து செயற்படுகிறது. இதை குழப்பாமல் வாய்ப்பை பயன்படுத்த வேண்டிய பொறுப்பு தமிழ்த்தேசிய தரப்பினருக்கு நிலத்திலும், புலத்திலும் உண்டு.

தீர்வுக்கு குறுக்கே உள்ள இடைவெளி.

ஜெனிவா சந்திப்பு உரையாடல்களும், தமிழ் டயஸ்போராவின் கருத்துக்களும், என்.பி.பி - ஜே.வி.பி அரசாங்கத்தின் நிலைப்பாடும் ஜதார்தத்தில் இருந்து வெகுதூரத்தில் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

என்.பி.பி. செயலாளர் நிஹால் அபேசிங்கவும், என்.பி.பி. பாராளுமன்ற உறுப்பினர் சந்திம ஹெட்டியாராய்ச்சியும் ஜெனிவாவில் வெளியிட்ட கருத்துக்கள் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வுக்கு அப்பால் 'இலங்கையராதல்' கருத்தியலை முதன்மைப்படுத்துகிறது. அர்த்தமுள்ள முள்ள அதிகாரப்பகிர்வு இன்றி இலங்கையராதல் சாத்தியமில்லை என்பதை மறுதலிக்கிறது. சர்வஜன வாக்கெடுப்பு மூலமான மக்களின் ஒருமித்த கருத்தை வலியுறுத்தும் ஹெட்டியாராச்சி இலங்கையில் நாம் ஊக்குவிக்க வேண்டியது பன்மொழிச்சமூகத்தில் சகவாழ்வு, மக்கள் ஒவ்வொருவரும் மாற்று மொழிகளை கற்றல் என்பதாகும் என்று கூறுகிறார்.

ஜெனிவாவில் கருத்து வெளியிட்ட தமிழரசுக்கட்சியின் எம்.பி.சத்தியலிங்கம்'' சுவிஸ் சமஷ்டி முறையில் நகராட்சிமன்றங்களுக்கு கூட பொலிஸ் அதிகாரங்கள் உண்டு. இலங்கையில் மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் இல்லை. வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மத்திய அரசாங்கம் மீளப்பெற முடியும். கூட்டாட்சி என்பது பிரிவினை அல்ல, என்பதை சுவிஸில் கண்டோம் என்று தெரிவித்துள்ளார்.

இது கஜேந்திரகுமார் ஜெனிவாவில் கூறியது. சுவிஸ் அதிகாரப் பகிர்வை நாம் மனதில் கொள்கிறோம். ஆனால் கியூபெக் ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட்ட கனேடிய யோசனையை நாங்கள் பாராட்டுகிறோம் இங்கு அவர் எதைச்

(22ம் பக்கம் பார்க்க)

# தன்னைத் தான் தோற்கடிப்பது?

நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் இருந்து சிறீதரன் நீக்கப்பட்டு சாணக்கியன் நியமிக்கப்பட்டிருக்கிறார். அதை ஒரு வெற்றியாக சாணக்கியனின் ஆதரவாளர்கள், சுமந்திரன் அணியைச் சேர்ந்தவர்கள் ஆங்காங்கே கொண்டாடினார்கள். உலகமே வியக்கும் வெற்றிகளைக் கொண்டாடிய தமிழ் மக்கள் இப்பொழுது இப்படிப்பட்ட அற்ப வெற்றிகளைக் கொண்டாடும் மக்களாக சிறுத்துப் போய் விட்டார்கள்? தமிழரசுக் கட்சி என்பது 75 வயதான ஒரு கட்சி. தனது உட்கட்சிப் பகையை பிரதிபலிக்கும் ஒரு வெற்றியைக் கொண்டாடக்கூடாது என்று தனது தொண்டர்களுக்குச் சொல்லும் மாண்பை அந்தக் கட்சி இழந்து விட்டதா? ஏற்கனவே மாவையின் இறுதி நாள் நிகழ்வில் சுடலை வரை மோதல் வந்தது. அண்மையில் மாவையின் முதலாம் ஆண்டு நினைவு நாளிலும் அந்த மோதல் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியது.

நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவிக்கு சாணக்கியன் நியமிக்கப்பட்டதை கிழக்கில் உள்ள மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் வரவேற்கவில்லை என்று தெரிகிறது. மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கத்தக்கதாக இளம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். சிறீதரனை அகற்றும் பொழுது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளில் முக்கியமானது, அவர் அரசியலமைப்பு பேரவையில் ஒரு படை அதிகாரிக்கு ஆதரவாக வாக்களித்தார் என்பது தான். ஆனால் சாணக்கியன் யார்? யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ராஜபக்சக்களோடு நின்றவர். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அவர்களோடு காணப்பட்டவர். அவர்களுடைய கட்சியின் அமைப்பாளராகச் செயல்பட்டவர்.

அவருடைய ஆதரவாளர்கள் உட்கட்சி மோதலில் கிடைத்த வெற்றியை வெடி கொளுத்தி இனிப்புக் கொடுத்து, பனர் கட்டி கொண்டாடியிருக்கிறார்கள். இந்த கொண்டாட்டங்கள் நமக்கு உணர்த்துவது எதை என்றால், உட்கட்சிப் பகை எந்த அளவுக்கு கூர்மையானதாக இருக்கிறதுஎந்த அளவுக்கு நாகரீகமற்றதாக மாறியிருக்கிறது என்பதைத் தான். அது தவறு என்று சாணக்கியனுக்கோ அல்லது தொண்டர்களுக்கோ சொல்லக்கூடிய மூப்பும் முதிர்ச்சியும் உள்ள ஆட்கள் கட்சிக்குள் இல்லை என்று தெரிகிறது.

75 வயதான கட்சிக்குள் முதன் முதலாக தலைவர் தெரிவிற்காக நடந்த ஒரு தேர்தல். அதில் தெரிவு செய்யப்பட்டவர், கடந்த இரண்டு ஆண்டுகளாக தலைமைப் பொறுப்பை ஏற்க விடாமல் தடுக்கப்பட்டு வருகிறார். படிப்படியாக கட்சிக்குள்ளேயே முடக்கப்பட்டு வருகிறார். 75 வயதான ஒரு கட்சியின் உட்கட்சி ஜனநாயகத்தை விளங்கிக் கொள்ள இதைவிட வேறு உதாரணம் வேண்டுமா?

இதன் பொருள் சிறீதரன் கிளிநொச்சியில் ஜனநாயகச் செழிப்பான ஒரு சூழலைப் பேணி வருகிறார் என்பதல்ல. அங்கே அவர் தன்னுடைய அரசியல் எதிரிகளை அணுகும் விதமும், அவருடைய ஆதரவாளர்கள் அரசியல் எதிரிகளை விமர்சிக்கும் விதமும் பண்பானவைகளோ அல்லது அரசியல் நாகரீகத்தைப் பேணுகின்றவையோ அல்ல. தன்னுடைய எதிரிகளை மேடைகளில் பகிரங்கமாக பெயர் சொல்லி விமர்சிக்கிறார். அவருடைய அணியைச் சேர்ந்தவர்கள் சமுக வலைத் தளங்களில், முகத்தைக் காட்டியும், முகத்தைக் காட்டாமலும் வந்து, தமது அரசியல் எதிரிகளின் குடும்பத்தை இழுத்து, சகோதரர்களை இழுத்து விமர்சிக்கிறார்கள். தமிழரசுக் கட்சியின் உட்கட்சி ஜனநாயகத்தில் குற்றம் காண்பது என்பது அதன் ஒரு பகுதியாக கிளிநொச்சியில் காணப்படும் அரசியல் விமர்சனச் சூழலையும் சுய விமர்சனத்திற்கு உட்படுத்துவது தான். எந்தத் தேசியவாதத் தராசில் வைத்து சிறீதரன் தனது எதிரிகளை நிறுத்தாரோ, அதே தேசியவாதத் தராசில் வைத்து



சுமந்திரன் அணி அவரை நிறுக்கிறது. அதன் மூலம் அவருடைய வாக்காளர்கள் மத்தியில் அவரை மதிப்பிறக்கம் செய்வதே அவர்களுடைய நோக்கம். அதை கஜேந்திரக்குமார் அணி செய்தால் அதற்கு ஒரு பொருள் இருக்கும். ஆனால் சுமந்திரன் செய்தால் அதற்குப் பொருள் இருக்காது. ஏனென்றால் சுமந்திரன் ஏற்கனவே தமிழ்த் தேசிய நீக்கத்துக்கு தலைமை தாங்குகிறார் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ளார். அவர் எவ்வளவு கெட்டிடித்தனமானவராக இருந்த போதிலும் எத்தனை சதி சூழ்ச்சிகளைச் செய்த போதிலும் கட்சியை முழுமையாக தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாதிருப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக முடக்கப்பட்டு வரும் சிறீதரனும் தனது தலைமைத்துவத்தை நிரூபிக்க தவறிவிட்டார்.அவரை நம்பி வாக்களித்த கட்சிக்காரர்களுக்கும் அவர் தலைமை தாங்கவில்லை. மக்களுக்கும் நம்பிக்கையூட்டும் விதத்தில் அவர் நடந்து கொள்ளவில்லை. அண்மையில் யாழ்ப்பாணம் வைஎம்சிஏ மண்டபத்தில் நடந்த பெப்ரவரி நான்கு நிகழ்வின் போது, தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் சிறீதரனை குறித்து உள்ளூர் பழமொழி ஒன்றை எடுத்துக் காட்டினார். பனங்கிழங்கு முத்தினால் நராகி விடும் என்பதே அந்தப் பழமொழி. சிறீதரனின் தலைமைத்துவத்தின் நிலைமையும் அப்படித் தானா? தனது கடைசிக் கட்டத்தில் மாவை சேனாதிராஜாவும் அப்படித்தான் காணப்பட்டார்.

நாடாளுமன்ற தேர்தலில் தோற்றவர் கட்சிக்குள் பலமாக இருக்க முடியாது என்ற வாதம் சரியாக இருந்தால், சுமந்திரன் எப்படி கட்சிக்குள் தீர்மானிக்கும் சக்தியாக மேலெழ முடிந்தது? அண்மையில் மாவையின் முதலாம் ஆண்டு நினைவு அனுஷ்டிக்கப்பட்டது. அங்கேயும் உட்கட்சிப் பூசல்கள் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தின. மாவை துணிச்சலாகவும் மிடுக்காகவும் முடிவுகளை எடுக்கத் தவறியதன் விளைவாக, தானும் தோற்று கட்சியையும் தோற்கடித்து விட்டார். அவர் இறந்து ஓராண்டின் பின்னரும் கட்சி ஒரு சீருக்கு வரவில்லை என்பதைத் தான் அண்மையில் அவருடைய முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நமக்கு உணர்த்தின.

மாவையோடு ஒப்பிடுகையில் சிறிதனிடம் தலைமைப் பண்பு அதிகம். மாவை அளவுக்கு அவர் நசியமாட்டார். தனது மாவட்டத்தில் கட்சிக் கட்டமைப்பை பலமாகக் கட்டி எழுப்பி வைத்துள்ளார். அவருடைய வாக்கு வங்கி போரால் பாதிக்கப்பட்டவர்களை அதிகம் பிரதிபலிப்பது. அதைவிட மேலகமாக, தீவுமைய, கிளிநொச்சி மைய வாக்குகளும் அங்கே உண்டு. கட்சியை விட்டு நீங்கினாலும் கிளிநொச்சியில் சிறீதரன் ஒரு பலமான சவாலாக இருப்பார். ஆனால் இங்கே பிரச்சனை அதுவல்ல. தமிழ்த் தேசிய அரசியலின் பிரதான இலக்கு தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டி, பலமான பேரம் பேசும் சக்தியாக கொழும்பிலும் உலக சமூகத்தின் முன்னும் முன்னிறுத்துவது தான். அதை சிறீதரன் செய்வார் என்று நம்பத்தக்கதாக கடந்த இரண்டு ஆண்டுகளும் அமையவில்லை.

அண்மையில் ஒரு காணொளி ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில் அவர் பொறுமைக்கும் சகிப்புத் தன்மைக்கும் முன்னுதாரணமாக கட்சிக்குள் தொடர்ந்தும் இருக்கப் போவதாக பொருள் கொள்ளத்தக்க விதத்தில் பதில் கூறியிருந்தார். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கட்சிக்குள் ஒட்டிக் கொண்டிருப்பதனால் அவர் தன்னுடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை மட்டுந்தான் தக்கவைத்துக் கொண்டார்.கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் தனது தலைமைத்துவத்தை எந்தளவுக்கு ஸ்தாபித்திருக்கிறார்?

சுமந்திரனைப் பொறுத்தவரை இப்பொழுதும் கட்சியை முழுமையாக அவருடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. சிறீதரனை கட்சிக்குள் இருந்து அகற்றினால் மட்டும் தான் அவருக்கு முழு வெற்றி. ஆனால் அதை அவரால் இன்றுவரை செய்ய முடியவில்லை. சிறீதரன் மீது நிர்ப்பந்தங்களைப் பிரயோகித்து, அவமானப்படுத்தி அவராக கட்சியை விட்டு விலகும் அளவுக்கு நிர்ப்பந்திப்பது என்று சுமந்திரன் சிந்திக்க கூடும்.

ஏனென்றால் இதே விதமான உத்தியைத் தான் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்த போது பங்காளிக் கட்சிகள் மீதும் பிரயோகித்தார். பங்காளிக் கட்சிகளுக்கு நெருக்கடியைக் கொடுத்து அவர்களாக விலகப் பண்ணினார். அப்படித் தான் விக்னேஸ்வரனின் விடையத்திலும். ஆனால் அவருடைய உத்திகளின் விளைவுகள் என்ன? முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதைக்கப்பட்டது. இப்பொழுது தமிழரசுக் கட்சியும் சிதைக்கப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டு கால கயிறு இழுத்தல் போட்டியில் யாரும் முழு வெற்றி பெறவில்லை. இது 75 வயதான கட்சியின் உள்விவகாரங்களை முழுமையாக தனது கைக்குள் கொண்டு வரத்தக்க தலைவர் யாரும் இப்பொழுது கட்சிக்குள் இல்லை என்பதைத் தான் காட்டுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாகவும் சுமந்திரனால் கட்சியை முழுமையாக தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. 2024 இல் கட்சிக்குள் நடந்த தேர்தலில் தோற்கடிக்கப் பட்ட தையும் அதே ஆண்டின் இறுதியில் தமிழ் மக்களால் தோற்கடிக்கப் பட்டதையும் அவரால் ஜீரணிக்க முடியவில்லை.

கொழும்பில் அவர் சவால்கள் மிகக் குறைந்த ஒரு சட்டவாளராகக் காணப்படுகிறார். ஆங்கிலம் பேசும் உயர் குழாத்தின் மத்தியிலும், அரசியல் சமூகம், ராஜதந்திர சமூகம், ராணுவ சமூகம் மற்றும் சிவில் சமூகங்களின் மத்தியிலும் மதிக்கப்படும் தமிழ் அரசியல்வாதியாக அவர் காணப்படுகிறார்.

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று கொழும்பில் ஒரு தீர்மானகரமான சக்தியாக அவர் வலம் வந்தார். 2024 அவரைப் பொறுத்த வரை ஒரு கெட்ட ஆண்டு. தோல்விகரமான ஆண்டு. அந்த ஆண்டில் கிடைத்த தோல்விகளால் கொழும்பில் அவருடைய மதிப்பு குறைந்து போய் விடக்கூடாது என்று அவர் அந்தரப்படுகிறார். ஆனால் அவருடைய தந்திரமான, புத்திசாலித்தனமான நடவடிக்கைகளின் மூலம் கட்சியை அவருடைய முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இன்றுவரை முடியவில்லை.

சிறீதரன் கட்சியை விட்டு நீங்கினால் கட்சிக்குள் காணப்படும் சுமந்திரன் எதிர் அணி ஒரு புதிய அணியாக மேலெழக்கூடும். தமிழரசுக் கட்சியானது வெல்லும் கட்சி என்ற நம்பிக்கை உடைக்கப்படுமாக இருந்தால் அக்கட்சிக்குள் இப்பொழுது ஒட்டிக் கொண்டிருக்கும் பலரும் கழண்டு போய் விடுவார்கள்.

அந்த நம்பிக்கை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் குறிப்பிடத்தக்க அளவுக்கு உடைக்கப்பட்டது.தேசிய மக்கள் சக்திக்கும் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்ப் பகுதிகளில் ஒரே எண்ணிக்கையான ஆசனங்கள் தான்.

இப்பொழுதும் தமிழரசுக் கட்சிக்குள் காணப்படும் தீராத உட் பகையை தேசிய மக்கள் சக்தி நம்பிக்கையோடு பார்த்துக் கொண்டிருக்கிறது. மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு இடைப்பட்ட காலத்தில் தனக்கு புதிய வாய்ப்புகள் திறக்கப்படுமா என்று எதிர்பார்ப்போடு.

# குடும்பிமலையும் - கார்ல்கஸடவ் லோஞ்சர்களும்

குடும்பிமலை மீண்டும் ஊடகங்களில் இடம்பிடித்திருக்கிறது. போர் நடந்த காலத்தில், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள, குடும்பிமலை விடுதலைப் புலிகளின் முக்கியமான தளங்களில் ஒன்றாக இருந்தது.

அதனை கைப்பற்றுவதற்கு, இலங்கை படையினர் பல முறை முயற்சிகளை மேற்கொண்டு தோல்வியடைந்தனர். 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்டப் போருக்கு பின்னர், குடும்பிமலை பிரதேசம் முழுவதும், அரச படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்திருந்த. அதன் மீதான ஊடகங்களின் கவனம் குறைந்திருந்தது.

ஆயினும் போர் முடிந்து, கிட்டத்தட்ட 16 ஆண்டுகளுக்குப் பின்னர் அண்மையில் கைப்பற்றப்பட்ட மூன்று ரொக்கட் லோஞ்சர்கள் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. அவை அதி நவீன ரொக்கட் லோஞ்சர்கள் என்றும், பேரழிவை ஏற்படுத்தக் கூடியவை என்றும் ஊடகங்களில் பரபரப்பு பற்ற வைக்கப்பட்டிருக்கிறது.

ஆபத்தான இந்த ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பது தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட ரொக்கட் லோஞ்சர்கள் 84 மிமீ கார்ல்-கஸ்டவ் பின்னுதைப்பற்ற துப்பாக்கி (Carl-Gustaf 84mm recoilless rifle) வகையை சேர்ந்தது. இவை சுவீடனில் தயாரிக்கப்பட்டவை.

ஈழப் போர்களில் இந்த கார்ல்-கஸ்டவ் ரொக்கட் லோஞ்சர்கள் பயன்படுத்தப்பட்டன. இராணுவத்தினர் இதனை ஒருபோதும் பயன்படுத்தவில்லை, விடுதலைப் புலிகளே பயன்படுத்தினார்கள். அவர்களுக்கு முன்னர் இதனை இலங்கையில் அறிமுகப்படுத்தியது இந்திய இராணுவத்தினர் தான்.

1987ஆம் ஆண்டு இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து வடக்கு கிழக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்ட இந்திய அமைதிப்படையினர் அதி நவீன ஆயுத தளபாடங்களுடனேயே வந்திறங்கினார்கள்.

அமைதிப்படையாக வந்த போதும், அவர்களிடம் ரி- 72 டாங்குகள் மாத்திரமன்றி, கார்ல்-கஸ்ட்வ் ரொக்கட் லோஞ்சர்கள் போன்ற அதி நவீன போராயுதங்களையும் இந்தியப்படையினர் கொண்டிருந்தனர்.

1980களின் தொடக்கத்தில் விடுதலைப் புலிகளுக்கு இந்தியாவே ஆர்.பி.ஜி. ரொக்கட் லோஞ்சரை கொடுத்தது. அதன் பின்னரே இலங்கை இராணுவத்திற்கு ஆர்.பி.ஜிகள் வாங்கப்பட்டன. அந்தக் காலகட்டத்தில் இந்திய இராணுவத்தினர் கார்ல்-கஸ்ட்வ் ரொக்கட் லோஞ்சர்களை பயன்படுத்தியிருந்தாலும், அவற்றை விடுதலை புலிகளுக்கு கொடுத்திருக்கவில்லை. ஆனால், புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கையின் போது இந்திய அமைதிப் படையினர் அதனை தாராளமாகப் பயன்படுத்தியிருந்தார்கள்.

டாங்கிகள் மற்றும் காலாட்படை சண்டை வாகனங்கள் பாதுகாப்பாக முன்நகர்வதற்கும், புலிகளின் ஆர்பிஜி மற்றும் இயந்திர துப்பாக்கி நிலைகளை தாக்குவதற்கும், இந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன.

ஒப்பரேசன் பவான் நடவடிக்கையில், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இந்திய இராணுவத்தின் பராகொமாண்டோக்களை தரையிறக்கிய தாக்குதலின் போது, இது பயன்படுத்தப்பட்டது. நகர்ப்புற போரின் போது, கட்டடங்கள் மற்றும் எதிர் தாக்குதல் நடத்தப்படும், பதுங்குகுழிகள், நிலைகளை தாக்கி அழிப்பதற்கும், கார்ல் – கஸ்ட்வ் ரொக்கட் லோஞ்சர்கள் தாராளமாக பயன்படுத்தப்பட்டன.

1976 ஆம் ஆண்டில் இருந்து இந்திய இராணுவம் கார்ல்-கஸ்ட்வ் ரொக்கட் லோஞ்சர்களை பயன்படுத்தி வருகிறது. இந்திய இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றிய கார்ல்-கஸ்ட்வ் ரொக்கட் லோஞ்சர்களையே, விடுதலைப் புலிகள் ஆரம்பத்தில் பயன்படுத்தியிருந்தார்கள்.

பின்னர் அவர்கள் சர்வதேச சந்தையில் அவற்றை கொள்வனவு செய்திருக்கலாம். ஆனாலும், தற்போது, குடும்பிமலையில் கைப்பற்றப்பட்ட மூன்று கார்ல்-கஸ்ட்வ் ரொக்கட் லோஞ்சர்களும், அதிநவீன வகையைச் சேர்ந்தவை அல்ல.



இரண்டாம் உலகப் போருக்கு பின்னர், சுவீடன் கார்ல்-கஸ்ட்வ் எம்-1 ரொக்கட் லோஞ்சர்களை தயாரிக்கத் தொடங்கியது. 1964 ஆம் ஆண்டில் இதில், எம்-2 வகை ரொக்கட் லோஞ் சர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றை இந்திய இராணுவம் 1976ஆம் ஆண்டில் இருந்து பயன்படுத்தியது. அதற்குப் பின்னர், 1986 ஆம் ஆண்டு எம்-3 வகை ஆயுதங்களை சுவீடன் தயாரிக்கத் தொடங்கிய போதும், இந்திய இராணுவம் அவற்றை பயன்படுத்த ஆரம்பித்தது 2005 ஆம் ஆண்டில் தான்.

2014ஆம் ஆண்டுக்குப் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட, எம்-4 வகை ரொக்கட் லோஞ்சர்கள் தான் அதி நவீனமானது. 1500 மீற்றர் தூரத்துக்கு சுடக் கூடிய, சூட்டுக் கட்டுப்பாட்டுச் சாதனம் பொருத்தப்பட்ட ரகம் இது.

இதனையே அமெரிக்க சிறப்புப் படைகள், பயன்படுத்துகின்றன. இந்தியா இவற்றை தமது நாட்டின் தயாரிப்பதற்கான அனுமதியையும் பெற்றிருக்கிறது. இவற்றுடன் ஒப்பிட்டால், குடும்பிமலையில் கைப்பற்றப்பட்ட மூன்று கார்ல்-கஸ்டவ் ரொக்கட் லோஞ்சர்களும், மிகப் பழையவை.

1964 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட எம்-2 வகையைச் சேர்ந்தவை. அதற்காக அவற்றின் திறனை குறைத்து மதிப்பிட முடியாது. இவை குடும்பிமலையில் இருந்த — சுந்தர் பேஸ் எனப்படும் விடுதலைப் புலிகளின் முகாமில் புதைத்து வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

வெளிநாட்டு புலனாய்வு தகவல் ஒன்றின் அடிப்படையில், இவற்றை விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர். இந்த விவகாரத்திற்குப் பின்னால் பல மர்மங்கள் காணப்படுகின்றன. விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்டவையாக கருதப்படும் இவை, கடந்த 16 ஆண்டுகளாக வெளிவரவில்லை. அவை புதைத்து வைக்கப்பட்டிருந்த இடத்தில் இருந்து அண்மையில் தோண்டி எடுக்கப்பட்டு, வேறொரு இடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே மீட்கப்பட்டிருக்கிறது.

16 ஆண்டுகளுக்கு மேலாக நிலத்திற்குள் புதைக்கப்பட்டிருந்த போதும், தற்போதும் பயன்படுத்தக் கூடிய நிலையில் இருப்பது ஆச்சரியமானது.

அந்தளவுக்கு மிகவும் பாதுகாப்பான முறையில் புதைக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் இது வெளியே வந்திருக்கிறது. அது எப்படி? இதனை புதைத்து வைத்திருந்தவர்கள் அதனை எடுத்திருக்கலாம். அல்லது தற்செயலாக அதனை அடையாளம் கண்டவர்கள், அதனை எடுத்து வேறொரு இடத்தில் வைத்திருந்திருக்கலாம். புதைத்து வைத்தவர்கள் அதனை எடுத்திருந்தால், ஏன் எடுத்தார்கள்? வெளியே எடுத்த அதை ஏன் இன்னொரு இடத்தில் மறைத்து வைத்திருந்தார்கள்?

தற்செயலாக தோண்டியெடுக்கப்பட்டதாக இருந்திருந்தால், அதை பயத்தில் மறைத்து வைத்து விட்டு போயிருக்கவும் வாய்ப்புகள் உள்ளன.

அதேவேளை கடந்த காலங்களில், மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காகவும், பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

தற்போது கூட அவ்வாறான நிலை இல்லை என கூற முடியாது. இதனை வைத்து விடுதலைப்புலிகள் மீண்டு வரப் போகிறார்களோ என்று கற்பனை செய்ய வைக்கும் முயற்சிகளும் நடக்கலாம்.

இந்த ரொக்கட் லோஞ்சர்கள் கைப்பற்றப்பட்டதை அடுத்து முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன எழுதியுள்ள பத்தி ஒன்று, சிங்கள, ஆங்கில ஊடகங்களில் வெளியாகியிருக்கிறது. அதில் அவர், இவை கடற்படையினருக்கு எதிரான போரில், எந்தளவுக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்.

1990களில் விடுதலைப் புலிகளின் கடற் புலிகளுடன், கடற்படையினர் சண்டையிட்ட போது, கடற்புலிகள் பின்னுதைப்பற்ற துப்பாக்கிகளை பயன்படுத்தி தாக்குதல் நடத்துவதாக புலனாய்வு தகவல்கள் கிடைத்தன. ஆனால் அது என்ன ஆயுதம் என்று தெரியாமல் இருந்தது. 1997 ஆம் ஆண்டு பிப்ரவரி 9ஆம் திகதி இரணைதீவு கடலில் கடற்புலிகளின் படகு ஒன்றை தாக்கி அழித்த சண்டையின் போது விடுதலைப் புலிகளால் செலுத்தப்பட்ட ஒரு ரொக்கட் குண்டு, கடற்படையின் அதிவேக தாக்குதல் படகு ஒன்றின், அடித்தளத்தை ஊடுருவிச் சென்று, கட்டளை அதிகாரியின் கபினுக்குள் நுழைந்து, அந்த அறையை சேதப்படுத்திய நிலையில், வெடிக்காமல் விழுந்து கிடந்தது.

அதனை எடுத்து, நிபுணர்கள் பரிசோதித்த பின்னரே அது கார்ல்- கஸ்டவ் 84 மிமீ பின்னுதைப்பற்ற துப்பாக்கி என கண்டறியப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன.

டோறாவின் இயந்திர அறைக்குள் விழுந்த குண்டு வெடித்திருந்தால், பேரழிவு நிகழ்ந்திருக்கும். அது வெடிக்காமல் போனதற்கான காரணத்தையும், அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன தனது பத்தியில் கூறியிருக்கிறார். அதனை செலுத்தியவர் குண்டின் முனையில் உள்ள, பாதுகாப்பு ஊசியை அகற்றாமல் விட்டிருந்தார். அதனால் தான் அது வெடிக்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அது வெடித்திருந்தால், ஒரு மில்லியன் மெழுகுவர்த்திகளில் இருந்து வெளிப்படும் சக்தியை வெளியிட்டிருக்கும். ஆனால், ஒரு சிறு தவறு அந்த கடற்சண்டையின் போக்கையே மாற்றியது. கடற்புலிகளுடனான சண்டையில், கடற்படைக்கு இதேபோன்றதொரு அதிர்ஸ்டம் இன்னொரு சண்டையிலும் வாய்த்தது.

1996 ஆம் ஆண்டு சுண்டிக்குளம், பூனைத்தொடுவாய் பகுதியில் இருந்த கடற்புலிகளின் ராடர் தளத்தை தாக்கியழிக்க கடற்படையின் விசேட படகுப் படையணி கொமாண்டோக்கள் ஒரு தாக்குதலை நடத்தினர்.

அந்த தாக்குதலை முறியடிக்க கடற்புலிகள் நடத்திய பதில் தாக்குதலில், ஒரு ஆர்பிஜி குண்டு, கடற்படை படகு ஒன்றைத் துளைத்து, சேதப்படுத்திய போதும் வெடிக்கவில்லை. காரணம் ஆர்பிஜியின் பாதுகாப்பு ஊசி அகற்றப்படவில்லை.

(23ம் பக்கம் பார்க்க)

# தங்களைத் தாங்களே திரட்ட முடியாத கட்சிகள் எப்படி தமிழ் மக்களைத் திரட்ட முடியும்?

ஐயா சிறீதரன் அவர்களைப் பற்றி நாலு வசனம் நல்லதாக எழுதினால் கட்சித் தீர்மானத்தை மீறியதாக எடுத்து கொள்வீர்களா? உங்களால் ஏன் மக்களின் மனதை வெல்ல முடியவில்லை என்பதை அமைதியாக இருக்க கூடிய நேரங்களில் யோசித்து பார்த்ததுண்டா? உண்மையில் நீங்களும் சிறீதரனும் தலைமை பதவிக்கு





சண்டை பிடிக்கவில்லை என்றால் இன்று கட்சியின் நிலை எப்படி இருக்கும் என்று நினைத்து பாருங்கள்?

ஒரு இனத்தின் விடுதலைக்காகவும் இருப்பிற்காகவும் பாடுபட வேண்டிய கட்சி ஒன்று தலைமைப் பதவிக்காக நீதிமன்றத்தில் நின்றால் மக்கள் உங்களை எப்படி நம்புவார்கள்? உங்களின் நாய்ச் சண்டைகளால் தெரு நாய்கள் எல்லாம் வவுனியாவில் வந்து ஊளையிட்டுச் செல்கின்றன. அதைப் பற்றிக் கவனிக்க உங்களுக்கு நேரமில்லை?

உங்களின் ஆசிர்வாதம் இல்லாமல் கட்சிக்கெதிரான வழக்கு தக்கல் செய்யப்படவில்லை. நீங்கள் இருவரும் நினைத்தால் அந்த வழக்கை முடிவுறுத்தவும் முடியும்.

தலைவர் தெரிவு வரும் போது நான் நீங்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்றே நினைத்தேன். கட்சி உறுப்பினர்கள் சிலருடனும் உங்களுக்குச் சார்பாகவே கதைத்தேன்.

நீங்கள் பெறுமையாக இருந்திருந்தால் இன்று அடுத்த தலைவர் தெரிவு நடந்திருக்கும். சில வேளை நீங்கள் முன் கதவால் தலைவராக வந்திருக்க கூடும். நாமும் மகிழ்ந்திருப்போம். ஓர் ஆளுமையான தலைவர் என்று.

தலைவர் தெரிவிற்குப் பின்னரான உங்களின் செயற்பாடு மிக அற்பத்தனமானது. உங்கள் மீதான அத்தனை கற்பிதங்களையும் போலியாக்கியுள்ளது. யோசித்துப் பாருங்கள் கட்சியின் தொண்டர்களால் தெரிவு செய்யப்படாத தலைவரும் செயலாளரும் தொண்டர்களின் மன எண்ணத்தை எவ்வாறு பிரதிபலிப்பீர்கள் ? நீங்கள் இருவரும் மக்களைப் பற்றி இன்று நினைக்கவில்லை. உங்கள் தலைமைப் பதவியையும் அதிகாரத்தைப் பற்றியுமே கனவு கான்கின்றீர்கள்.

சிறீதரன் அவர்களை நீங்கள் எப்படியாவது நீக்குவீர்கள். அவ்வாறு நடந்தால் அது கட்சிக்குப் பாதிப்பு. ஆனால் அது உங்ளுக்கு இரட்டிப்பு சந்தர்ப்பத்தை தரும். இலகுவாக அடுத்த தடவையாவது பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படலாம் என்ற கணக்கு சரியாக அமையும்.

இறுதியாகக் கூறுகின்றேன். தொண்டர்களுக்குத் தலைவரா? தலைவர்களுக்குத் தொண்டரா? என்றால் அதற்கான விடையை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

இது முகநூலில் காணப்படும் ஒரு பதிவு. இதை எழுதியவர் வன்னிப் பெருநிலத்தில் உள்ள ஒரு முன்னணிப் பாடசாலையில் ஆசிரியராக இருப்பவர். தமிழரசுக் கட்சியை எங்கேயும் விட்டுக் கொடாதவர். எனது கட்டுரைகளில் தமிழரசுக் கட்சிக்கு எதிரான விமர்சனங்கள் இருந்தால் அது தொடர்பாக முகநூலில் பதில் வினையாற்றுவார். ஆனால் அவர் தான் சில நாட்களுக்கு முன் மேற்கண்டவாறு முகநூலில் எழுதியுள்ளார். அவர் ஏன் அப்படி எழுத வேண்டி வந்தது? கட்சியின் பதில் செயலாளராக உள்ள சுமந்திரன் அண்மையில் விடுத்த ஒரு அறிவிப்புத் தான் காரணம்.கட்சி உறுப்பினர்கள் கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராக கதைத்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் அறிவித்திருக்கிறார்.

இதை அவர் தெரிந்து செய்கிறாரா? அல்லது தெரியாமல் செய்கின்றாரா? ஏனென்றால் இது போன்ற நடவடிக்கைகளின் விளைவுகள் எங்கே கொண்டு போய்விடும்? இக்கட்டுரையில் கூறப்பட்ட அந்த ஆசிரியர் மிகத் துடிப்பான ஓர் அரசியல் செயற்பாட்டாளர். அவரே மனம் வெறுத்து அவ்வாறு முகநூலில் எழுதும் ஒரு நிலைமை வந்திருப்பது என்பது அவரைப் போன்ற பலர் எதிர்காலத்தில் எப்படிப்பட்ட முடிவை எடுக்கக்கூடும் என்பதனை ஊகிக்கக் கூடியதாக இருக்கிறது.அதாவது கட்சி மேலும் சிதையும் நிலைமை தான் தெரிகிறது.

கிளிநொச்சியில் நடந்த கூட்டமும் அதைத்தான் காட்டுகிறது. தங்களுக்குள் தாங்களே மோதி கட்சியை அழித்துக் கொண்டிருக்கிறோம் என்பதனை உணர முடியாத தலைவர்களா இவர்கள்?

தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் உள் முரண்பாடு பற்றி திரும்பத் திரும்ப எழுதுவது சலிப்பூட்டுவது. ஆனால் அப்படி எழுதுவது தவிர்க்க முடியாததும் கூட. ஏனென்றால் உள்ளதில் பெரிய கட்சி. அந்தக் கட்சியும் சிதைந்தால் அதற்கு மாற்றாக மேல் எழுவதற்கு முன்னணியால் முடியுமா? தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடந்த 16 ஆண்டுகளாக தேர்தல் அரசியலில் பெரு வெற்றி பெற முடியவில்லை. அவர்கள் தான் ஒப்பீட்டளவில் தெளிவாக கொள்கைகளை முன் வைக்கிறார்கள். ஆனால் அவர்களால் கடந்த 16 ஆண்டுகளாக தமது கொள்கைகளை மக்கள் மயப்படுத்த முடியவில்லை.

கடந்த நாடாளுமன்றத்தில் கிடைத்த தோல்வியும் கட்சியின் தலைவர் கஜேந்திரக்குமாருக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவும் அவர்களை புதிய பாதையில் சிந்திக்க வைத்திருக்கிறது என்று தெரிகிறது. அவர்கள் ஒரு மாற்றத்தை நோக்கிச் சிந்திப்பதாகவும் தெரிகிறது. ஆனால் மாற்றத்தை நோக்கிச் சிந்திப்பது என்பது என்ன? நடந்த தவறுகளுக்குப் பிராயச்சித்தம் தேடுவது மட்டுமல்ல. அதை விட ஆழமான பொருளில் கட்சியை கட்டமைப்பு ரீதியாக மீளக் கட்டியெழுப்புவது.

அண்மையில் ஒரு கிறிஸ்தவ மதகுரு இந்தியாவில் இருந்து வந்திருந்தார். இந்தியாவில் மேற் படிப்புக்காகச் சென்றவர். அவர் அங்கே தமிழகக் கிராமங்களில் கட்சிகளுக்கு உள்ள வட்டச் செயலர் என்ற பதவி நிலையைக் குறித்து உரையாடினார். வட்டச் செயலர் என்ற பதவி தமிழக மக்களைப் பொறுத்தவரை தமிழ்ச் சினிமாவில் வடிவேலுவின் நகைச் சுவையோடு சேர்ந்து பிரபல்யமான ஒரு பதவி நிலை. ஆனால் அது ஒரு நகைச்சுவைப் பாத்திரம் அல்ல. கிராம மட்டத்தில். அடி மட்டத்தில் கட்சியைப் பலப்படுத்தும் ஒரு பதவி நிலை. அது ஒரு பொறுப்பு. தமிழகத்தில் உள்ள பிரதான கட்சிகளுக்கு அவ்வாறு ஆழமான அடிபட்டக் கட்டமைப்புகள் உண்டு. வட்டச் செயலர்கள் கிராம மட்டத்தில் கட்சியைக் கட்டியெழுப்புகிறார்கள். கீழ் மட்டத்தில் மக்களோடு உயிர்த் தொடர்பைப் பேணுகிறார்கள். வளர்க்கிறார்கள். தமது நிர்வாகப் பகுதிக்குள் வாழும் மக்களின் சுக துக்கங்களில் பங்கெடுக்கிறார்கள். அவர்கள் அடிமட்ட மக்களை அரசியல் மயப்படுத்துகிறார்களோ இல்லையோ அவர்களை கட்சி மயப் படுத்துகிறார்கள்.

நமது தமிழ்த் தேசியக் கட்சிகளில் எத்தனை அப்படிப்பட்ட கிராம மட்டக் கட்டமைப்புகளை. பதவி நிலைகளைக் கொண்டிருக்கின்றன?

இதற்கு தமிழ்நாட்டு உதாரணம் கூடத் தேவையில்லை. 83 ஜீலைக்கு பின் தமிழ் இயக்கங்கள் தமிழ் மக்கள் மத்தியில் எத்தகைய கட்டமைப்புகளை உருவாக்கி வைத்திருந்தன? எப்படிப்பட்ட கட்டமைப்புகளுக்கு ஊடாகத் தங்களைப் பலப்படுத்திக் கொண்டன? என்பவற்றில் இருந்தாவது குறைந்த பட்சம் கற்றுக் கொண்டிருக்கலாம்.

தமிழ் இயக்கங்களுக்கு கிராம மட்டத்தில் கிராமப் பொறுப்பாளர்கள் இருந்தார்கள். அவர்களுக்குப் பொறுப்பாக ஏரியாக்காரர்கள் இருந்தார்கள். அவர்களுக்குப் பொறுப்பாக மாவட்டப் பொறுப்பாளர்கள் இருந்தார்கள். அவர்களுக்குப் பொறுப்பாக அரசியல் துறைப் பொறுப்பாளர் இருந்தார். அரசியல் துறைக்கு மட்டுமல்ல படைத்துறை. நிதித்துறை. புலனாய்வுத்துறை முதலான எல்லாக் கட்டமைப்புகளுக்கும் அவ்வாறு கீழே இருந்து மேல் நோக்கிய சீரான கட்டமைப்புகள் இருந்தன.

இந்தக் கட்டமைப்புகள் அடிக்கடி சந்தித்துக் கொள்ளும்.மேலிருந்து கீழ் நோக்கி வழிநடத்தப்படும். இயக்கங்களின் கட்டமைப்புகள் பெருமளவுக்குப் படைப் பரிமாணத்தை கொண்டவை என்பதனால் அங்கே உத்தரவுக்குக் கீழ்ப்படியும் ஓரம்சம் இருக்கும். அதை முழுமையாக ஒரு ஜனநாயகக் கட்சிக்குள் நடைமுறைப் படுத்த முடியாது. இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகள் ஒரு பொருத்தமான நடைமுறையைக் கண்டு பிடிக்க வேண்டும். ஆனால் கிராம மட்டக் கட்டமைப்புகளை பலப்படுத்தாமல் கொள்கைகளை மக்கள் மயப்படுத்த முடியாது மட்டுமல்ல தேர்தல் அரங்குகளில் வெற்றிகளை உறுதிப்படுத்தவும் முடியாது.

ஜனநாயக அரசியலில் வெற்றி பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை தான் எது பெரும்பான்மை என்பதைத் தீர்மானிக்கும். பெரும்பான்மையின் கருத்துத் தான் அந்த மக்கள் கூட்டத்தின் கருத்தாக எடுத்துக்கொள்ளப் படும்.

எனவே கட்சி மைய அரசியலுக்கூடாகச் சிந்திக்கும் பொழுது தேர்தலில் வெற்றி பெறுவது அவசியம்.

அதேசமயம் தேர்தல் மைய அரசியலுக்கு வெளியேயும் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்ட வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசிய அரசியலுக்கு உண்டு.

# காங்கிரஸ் கட்சி கூட்டணியை உடைத்தால் தி.மு.க.என்ன செய்யும்?

- முரளிதரன் காசி விஸ்வநாதன் -

விரைவில் நடைபெற உள்ள 2026ஆம் ஆண்டு தமிழக சட்டசபை தேர்தலுக்குப் பிறகு 'ஆட்சியில் பங்கு, அதிகாரத்தில் பங்கு' என்ற முழக்கத்தை காங்கிரஸின் ஒரு பகுதியினர் தீவிரமாக முன்வைத்துள்ளனர்.



தி.மு.க - காங்கிரஸ் கூட்டணி எதை நோக்கிச் செல்கிறது? என்ற கேள்வி உள்ள நிலையில் அந்த உறவு மிகக் குழப்பமான சூழலை நோக்கிச் செல்வதாகச் சொல்கிறார் மூத்த பத்திரிகையாளர் குபேந்திரன்.

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் ஞாயிற்றுக்கிழமையன்று (பிப்ரவரி 15) நடந்த காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் கூட்டம் ஒன்றில் 'கூட்டணியில் கூடுதல் இடங்கள், அதிகாரத்தில் பங்கு' என பல கோஷங்களை முன் வைத்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

கூட்டணி ஆட்சி கிடையாது என்பதை தமிழக முதல்வரும் தி.மு.க. தலைவருமான மு.க. ஸ்டாலின் தெரிவித்து விட்ட நிலையிலும் காங்கிரஸ் கட்சியின் மாவட்ட கமிட்டி ஒன்று இத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பது தான் கவனிக்க வைத்திருக்கிறது.

சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு கூடுதல் இடங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும், உள்ளாட்சித் தேர்தலின் போது 30 சதவீத பங்கு வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் மதுரை தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

அந்தக் கூட்டத்தில் பேசிய விருதுநகர் எம்.பி மாணிக்கம் தாகூர், 'எங்களுக்கு மரியாதை கொடுக்கவில்லையென்றால் அதே வார்த்தையில் பேசுவோம்,' என்று குறிப்பிட்டார். மேலும், மதுரை வடக்குத் தொகுதியில் போட்டியிடுவது காங்கிரஸ் கட்சியின் லட்சியம் என்றும் குறிப்பிட்டார்.

சட்டமன்றத் தேர்தல் தொடர்பாக தி.மு.க இன்னும் பேச்சு வார்த்தைகளைத் துவங்காத நிலையில், அக்கட்சிக்கும் காங்கிரசிற்கும் இடையிலான உறவுகள் தொடர்ந்து பின்னடைவைச் சந்தித்து வருவதையே மதுரையில் ஞாயிற்றுக்கிழமை நடந்த நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

காங்கிரஸ் தரப்பில் பேசப்படுகின்ற வார்த்தைகளுக்கு தி.மு.க. இன்னமும் எதிர்வினை ஆற்றாமல் இருப்பது ஒரு வகையில் ஆச்சரியம் தான்.' என்கிறார் மூத்த பத்திரிகையாளர் குபேந்திரன்.

மாணிக்கம் தாகூர் பேச்சுக்கு திமுக எந்த ஒரு பெரிய எதிர்வினையும் ஆற்றவில்லை. 'எங்களுக்கு மரியாதை வேண்டும், உங்களுக்காக பழி சுமந்தோம்' என்றெல்லாம் பேசுகிறார். இப்படி காங்கிரஸ் வரிந்து கட்டிக் கொண்டு பேசுகிற போது, ராகுல் காந்தி, கார்கே, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை போன்றவர்கள் பேசினால்தான் பதில் சொல்வோம் என்கிறது தி.மு.க. 2026இல் யார் ஆட்சியைப் பிடிப்பார்கள் என்பது எப்படி கணிக்க முடியாமல் இருக்கிறதோ, அப்படித் தான் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியும் இருக்கிறது' என்று அவர் கூறுகிறார்.

கடந்த சில வாரங்களாகவே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாணிக்கம் தாகூர் உள்ளிட்ட பலர், 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு, கூட்டணி ஆட்சி என்ற கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றனர். கூட்டணி ஆட்சிக்கான வாய்ப்பில்லை என மு.க. ஸ்டாலின் தெரிவித்த போது, அதற்குப் பதிலளிக்கும் வகையில் மாணிக்கம் தாகூரும் பிரவீன் சக்கரவர்த்தியும் எக்ஸ் தளத்தில் கருத்துகளை வெளியிட்டனர்.

இந்த நிலையில், அடுத்த சில மாதங்களுக்கான ''மகளிர் உரிமைத் தொகையை'' மொத்தமாக தமிழக அரசு பயனாளர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தியிருந்த நிலையில், செய்தியாளர்களைச் சந்தித்த தி.மு.கவின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, 'ஐந்தாயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகை அளிக்கப்பட்டதால் இனி காங்கிரஸ் கட்சியினர் ஆட்சியில் பங்கு பற்றி பேச மாட்டார்கள்' எனக் குறிப்பிட்டார்.

ஆனால் இந்தக் கருத்தை மறைமுகமாக விமர்சிப்பதைப் போல, 'கடந்த 3 ஆண்டுகளில் தேர்தலுக்கு முன்னதாக இது போன்ற திட்டங்களை அறிவித்த 9 பெரிய மாநில அரசுகளில் நான்கு மட்டுமே வெற்றி பெற்றன' என்று பதிவிட்டார் பிரவீன் சக்கரவர்த்தி.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் கார்கேவை சந்திக்க பெங்களூர் செல்வதற்கு முன்பாக செய்தியாளர்களிடம் பேசிய செல்வப்பெருந்தகை, 'மதுரை காங்கிரஸ் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து எனக்குத் தெரியாது. கூட்டணி குறித்து பொதுவெளியில் பேசக் கூடாது என காங்கிரஸ் தலைமை கூறியுள்ளது. அகில இந்தியத் தலைவர்களை விட பெரியவர்கள் யாராவது உண்டா? அறைக்குள் பேச வேண்டியதை பொது வெளியில் பேசினால் எப்படி அனுமதிக்க முடியும்?' என்று மட்டும் தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையே பிப்ரவரி 17 சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால், ''திமுக கூட்டணியில் தான் காங்கிரஸ் கட்சி உள்ளது. கட்சியினர் சிலர் கூறும் கருத்துக்கள் காங்கிரஸ் கட்சியின் கருத்தல்ல, அது தனிப்பட்ட நபர்களின் கருத்து.'' எனக் கூறினார்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவர் விஜயின் த.வெ.கவுடன் காங்கிரஸ் கூட்டணி அமைக்க வேண்டுமென விரும்புவதாகச் சொல்கிறார் குபேந்திரன்.

கேரளாவில் ஆட்சியைப் பிடிப்பதற்கு விஜய் உதவுவார் என காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவர் நம்புகிறார். கேரளாவில் தமிழ்நாட்டை ஒட்டி இருக்கும் மாவட்டங்களில் விஜய் ரசிகர்கள் இருக்கிறார்கள். த.வெ.க-வுடன் கூட்டணி வைத்தால் அவர்கள் காங்கிரசுக்கு ஆதரவளிப்பார்கள், அங்கு ஆட்சி பிடிக்கலாம். பாண்டிச்சேரியிலும் ஆட்சியைப் பிடிக்கலாம் தமிழ்நாட்டில் கணிசமான இடங்களில் வெற்றி பெறலாம் என நினைக்கிறார்கள். ஆனால், பெரும்பாலான காங்கிரஸ் எம்.பி, எம்.எல்.ஏக்கள் தி.மு.கவுடன் இருக்க வேண்டும் என சொல்லியிருக்கிறார்கள்.' என்கிறார் அவர்.

சமீபத்தில் டெல்லியில் ராகுல் காந்தியைச் சந்தித்துப் பேசினார் கனிமொழி. அந்தப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு சலசலப்புகள் அடங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அப்படி நடக்கவில்லை. இது குறித்துப் பேசிய குபேந்திரன், 'டெல்லியில் நடந்த ராகுல் காந்தி - கனிமொழி சந்திப்பு சுமுகமாக நடக்கவில்லை என்று தான் சொல்கிறார்கள். காங்கிரஸ் தலைமைக்கு தி.மு.கவுடன் தொடர்வதில் கசப்புணர்வு இருப்பதாக நம்புகிறேன். இல்லாவிட்டால் இந்த மோதல் இவ்வளவு பெரிதாக ஆகியிருக்காது. இத்தனைக்கு 2019இல் காங்கிரஸ் தலைவர்களே ராகுலை பிரதமராக முன்னிறுத்தாத போது அதைச் சொன்னவர் மு.க. ஸ்டாலின் தான். அப்படியிருக்கும்போது, இப்படி ஒரு சூழல் ஏன் ஏற்பட்டிருக்கிறது என்பது புரியவில்லை.' என்கிறார்.



தி.மு.க. கூட்டணி ஆட்சிக்கு ஒப்புக் கொள்ளாது. காங்கிரஸ் வெளியேறி விட்டால் காங்கிரசிற்கு அளித்து வந்த இடங்களில் பத்தில் தி.மு.க. போட்டியிடலாம். மீதமுள்ள இடங்களை பெற பல கட்சிகள் காத்திருக்கின்றன' என்கிறார் குபேந்திரன்.

தே.மு.தி.க, வரலாம். கருணாஸ், தமீமுன் அன்சாரி, தனியரசு போன்றவர்கள் காத்திருக்கிறார்கள். மக்கள் நீதி மய்யத்திற்கும் இடங்களைக் கொடுப்பார்கள். ஆனால், காங்கிரஸ் அந்தக் கூட்டணியிலிருந்து வெளியேறுவது அந்தக் கூட்டணிக்குக் கிடைத்து வந்த சிறுபான்மையினர் வாக்குகளைப் பாதிக்கும். மேலும் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் சில இடங்களில் தோற்கலாம். ஏனென்றால் கடந்த சட்டமன்றத் தேர்தலில் பல தொகுதிகளில் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தி.மு.க. வெற்றி பெற்றது. அந்த இடங்கள் எல்லாம் நெருக்கடியாக மாறும்' என்று குறிப்பிடுகிறார் குபேந்திரன்.

ஆனால், காங்கிரஸ் த.வெ.கவுடன் கூட்டணி அமைப்பது அக்கட்சிக்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்காதா? என்ற கேள்விக்கு இருக்காது என்கிறார் குபேந்திரன். காங்கிரசுக்கு தற்போதைய சூழலில், 70 - 80 இடங்களை த.வெ.க. அளித்தாலும் இதில் குறிப்பிடத் தகுந்த தொகுதிகளில் வெல்லும் வாய்ப்புக் குறைவு. காங்கிரசைப் பொறுத்தவரை தென் மாவட்டங்களில் கன்னியாகுமரி, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, மதுரை ஆகிய மாவட்டங்களில் செல்வாக்கு இருக்கிறது. விஜயுடன் சேரும்போது, வாக்கு சதவீதம் உயரலாம். இரு திராவிடக் கட்சிகளுக்கும் கிடைக்கக் கூடிய வெற்றிகளை சில இடங்களில் தடுக்கலாம். அதைத் தவிர பெரிதாக எதுவும் செய்ய முடியாது' என்கிறார் குபேந்திரன்.

த.வெ.கவைப் பொறுத்தவரை காங்கிரஸ் அக்கட்சியுடன் கூட்டணி சேர்வது, சிறப்பான விஷயமாகத்தான் இருக்கும். தேர்தல் பணிகளை கீழ் மட்டத்தில் எப்படிச் செய்யலாம் என்பதை காங்கிரசிடமிருந்து கற்கலாம் என்கிறார் குபேந்திரன்.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி இடையிலான தேர்தல் கூட்டணி நீண்ட காலமாக நீடித்து வருகிறது. 2004ஆம் ஆண்டில் துவங்கி 2011ஆம் ஆண்டு தேர்தல் வரை காங்கிரசும் தி.மு.கவும் ஒன்றாகவே இணைந்து போட்டியிட்டன. 2014ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக, காங்கிரஸ் கூட்டணியில் இருந்து தி.மு.க. வெளியேறியது. அத்தேர்தலில் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டது.

அதன் பிறகு, 2016ஆம் ஆண்டு தேர்தலில் இருந்து இரு கட்சிகளும் இணை ந்தே தேர்தல்களைச் சந்தித்து வரு கின்றன.

நன்றி:- பிபிசி

# இன்னொரு விக்கினேஸ்வரன் ஆகிறாரா ஸ்ரீதரன்?

தமிழ்த் தேசிய அரசியலின் சாபக்கேடுகளில் பிரதானமானது, தனி நபர்களைச் சுற்றி அரசியலைக் கட்டமைப்பது. அதன் நீட்சி தான், 'தியாகி – துரோகி' அடையாள அரசியலாக நிலைபெற்றுவிட்டது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் நிறுவனத் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆரம்பித்து வைத்த இந்த அரசியல் செல்நெறியை அவரின் பேரன் காலத்து அரசியல் களமும் தூக்கிச் சுமக்கின்றது. அருணாச்சலம் மகாதேவாவை தமிழின துரோகியாக சித்தரித்துக் கொண்டு தமிழ் மக்களிடம் நம்பிக்கை நாயகனாக எழுச்சி பெற்ற ஜீ.ஜீ.பொன்னம்பலம், சில காலத்துக்குள்ளேயே தந்தை செல்வா உள்ளிட்ட அவரின் முன்னாள் சகபாடிகளினால் துரோகியாக அறிவிக்கப்பட்டார்.






தமிழரசுக் கட்சியின் வருகையோடு தமிழ்த் தேசிய அரசியல் வீச்சம் பெற்றது. அப்போதும், தமிழ் அரசியல் பரப்பு தனி நபர்களை முன்னிறுத்திய அரசியலுக்குள்ளேயே நிலைத்தது. ஜீ.ஜீ.பொன்னம்பலம், தந்தை செல்வா, அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், (தலைவர் பிரபாகரன் – ஆயுதப் போராட்ட காலம்), இரா.சம்பந்தன் என்று தான் தமிழ் அரசியல் நீண்டது. அதன் அடுத்த கட்டத்திற்கான நபருக்கான ஓட்டம் கடந்த பதினைந்து ஆண்டுகளாக நிகழ்கின்றது. ஆனால் இந்த இடத்தில் எம்.ஏ.சுமந்திரனைக் கொண்டு வந்து முன்னிறுத்திய பொறுப்பினை சம்பந்தன் எவ்வளவுக்கு எவ்வளவு கொண்டிருக்கிறாரோ, அதேயளவுக்கான பொறுப்பினை கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கொண்டிருக்கிறார்.

தமிழ்த் தேசிய அரசியலுக்கு சுமந்திரனை அழைத்து வந்தவர் என்ற ரீதியில சம்பந்தன் அதற்கான பொறுப்பினை, அதில் பெருமை – சிறுமை எது இருந்தாலும் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால், கஜேந்திரகுமாருக்கு ஏன், சுமந்திரன் சார்ந்து பொறுப்பு ஏற்படுகின்றது என்ற கேள்வி இயல்பானது. ஏனெனில், அவர் தான், தன்னுடைய பாட்டனார் அறிமுகப்படுத்திய 'தியாகி துரோகி அரசியல் அரிச்சுவடியை 'சம்பந்தன் – சுமந்திரன்' தலைமைக்கு எதிராக மூர்க்கமாக முன்னெடுத்தார். அவர், சம்பந்தன் காலத்துக்குப் பிறகு, (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) தமிழரசுக் கட்சியின் தலைமையை சுமந்திரனே பொறுப்பெடுப்பார் என்ற ரீதியில் களத்தினை தயார்ப்படுத்திக் கொடுத்தார். தலைமைப்பதவி அல்லது ஆட்டுவிக்கும் நிர்வாகியாக களத்தில் நிலை பெற வேண்டும் என்று சுமந்திரன் நினைப்பதற்கு முன்னாலேயே, அவரைச் சுற்றியே ஊடக இராஜதந்திர சமூக அரசியல் வெளியை உருவாக்கி வைத்தவர்கள், கஜேந்திரகுமாரும் அவரது பரிவாரமும். இந்த விடயத்தை 2014 களிலேயே, இந்தப் பத்தியாளர் சுட்டிக் காட்டியிருக்கிறார். சம்பந்தன் காலத்துக்குப் பின்னராகவேனும் தமிழ்த் தேசிய அரசியல் 'கூட்டுத்தலைமை – கூட்டுப்பொறுப்பு' என்ற நிலைக்கு செல்ல வேண்டும். அதனை நோக்கி அரசியல் செல்நெறி இருக்க வேண்டும் என்று இந்தப் பத்தியாளர் எழுதி வந்திருக்கிறார். ஆனால், அதன் தார்ப்பரியங்களை உள்வாங்காது, தியாகி – துரோகி அரசியலுக்குள் மீண்டும் மீண்டும் தமிழ்த் தேசிய அரசியலை தள்ளி, இன்றைக்கு ஜே.வி.பி.காரர்கள் வந்து தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வகுப்பெடுக்கும் நிலைக்குள் அரசியலை கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள்.

இன்றைக்கு தமிழரசுக் கட்சி கிட்டத்தட்ட சுமந்திரனின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. அவருக்கு சவால் விடுக்கக் கூடிய தரப்பினர் என்று நம்பப்பட்ட அனைவரும் கட்சிக்குள் வலுவிழந்துவிட்டார்கள். அல்லது, வெளிச் சென்று செல்லாக் காசாகி விட்டார்கள். இப்போது சுமந்திரன் செய்து கொண்டிருக்கும் அரசியல் என்பது கடந்த பொதுத் தேர்தலில் கட்சி கண்ட தோல்வியிலிருந்து மீள்வது. அதற்கு வாக்கு அரசியலின் போக்கில் எவ்வளவு நெகிழ்வுப் போக்கோடும் விடயங்களை அணுக முடியும் என்று நினைப்பதில் இருந்து நிகழ்கிறது. அதற்காகத் தான், கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் முட்டிக்கொண்டிருந்தவர்களோடு எல்லாமும் இணக்கமான அணுகுமுறையைப் பேணுகிறார்.

வாக்கு – அதிகார அரசியலில் நிரந்தர நண்பனும் எதிரியும் இல்லை என்பது யதார்த்தமான வாதம். ஆனால், தன் முனைப்புள்ள (ஈகோ) சுமந்திரன் போன்றவர்களே, அந்த அணுகுமுறைக்குள் வருவதற்கு தோல்விகள் படிப்பினையாக அமைகின்றன. கடந்த பொதுத் தேர்தலில் அவரும், கட்சியும் கண்ட பின்னடைவு அவரை, தன் முனைப்பு மனநிலையின் சில கட்டங்களில் இருந்து இறங்கி வர வைத்திருக்கின்றது. அதுதான், அவரை இன்றைக்கு கூட்டமைப்பின் முன்னாள் பங்காளிக் கட்சிகள் அனைத்துடனும் நெருக்கமான உறவைப் பேண வைத்திருக்கின்றது. அதற்கு, சுமந்திரனும் – சுரேஷ் பிரேமச்சந்திரனும் அண்மைய காலத்தில் காட்டும் இணக்கமான போக்கினை உதாரணமாக கொள்ளலாம். சுமந்திரனின் அரசியல் வருகையோடு, கூட்டமைப்புக்குள்ளும் தமிழ்த் தேசிய அரசியலுக்குள்ளும் முதன்முதலில் கீழிறக்கப்பட்டவர் என்றால், அது சுரேஷ் தான். கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியை சுமந்திரனிடம் இழந்தார். 2015 பொதுத் தேர்தலிலும் தோற்றுப் போனார். அன்றிலிருந்து சுரேக்கு சுமந்திரன் என்றால் வேப்பங்காய் கசப்பு. ஆனால், அண்மைய மாதங்களில் சுமந்திரனின் குரலாக சுரேஷ் ஒலித்துக் கொண்டிருக்கிறார். அவர் நடத்தும் ஊடக சந்திப்புக்கள் பலவும், சுமந்திரன் நடத்த வேண்டி ஊடக சந்திப்புக்கள் என்று எண்ணும் அளவுக்கு இருக்கின்றன. இந்த இணக்கம், தோல்விகள் கொடுத்த படிப்பினைகளினால், இருவருக்கும் வந்திருக்கின்றது. ஏனெனில், தங்களுக்குள் அடிபட்டு பொது எதிரியான தென் இலங்கைச் சக்திகளை உள்ளுக்குள் அனுமதித்த அவஸ்தை அதனைக் கொடுத்தது.

யார் விரும்பினாலும் இல்லையென்றாலும் சுமந்திரன் விரும்பினால் அன்றி, தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து அவரின் வகிபாகத்தை அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் யாரினாலும் ஆட்டங்காணச் செய்ய முடியாது. அந்தக் கட்டத்திற்கு கட்சிக்குள் தீர்மானிக்கும் சக்தியாகவும் முக்கியஸ்தராகவும் அவர் நிலை பெற்று விட்டார். இப்போதும் அவரைச் சுற்றித்தான் தமிழ்த் தேசிய அரசியலில் தீர்மானங்கள் எழுகின்றன. அல்லது வீழ்கின்றன. ஆனால், தியாகி – துரோகி கோஷமும் சற்றுச் சுரமிழந்திருக்கின்றன என்பதுவும் உண்மை தான்.

ஏனெனில், கடந்த காலங்களில் யார் யாரையெல்லாம் நோக்கி, துரோக அடையாள அரசியல் செய்யப்பட்டதோ, அவர்களையெல்லாம் கூட்டிணைத்துக் கொண்டு பயணிக்கும் நிலைக்கு கஜேந்திரகுமாரே நகர்ந்திருந்தார். அவருக்கு என்றைக்குமே ஏற்றுக் கொள்ள முடியாத ஒருவராக சுமந்திரனின் அரசியலே இருக்கின்றது. அது, தனது அரசியல் நிலை பெறுகைக்கு தேவையான ஒன்று என அவர் நினைக்கிறார். அதாவது, மகாதேவாவுக்கு எதிராக பாட்டனார் கையாண்ட அரசியல் உத்தி.

இப்போதும், தமிழரசுக் கட்சிக்குள் சலசலப்புக்கள் உண்டு. சுமந்திரன் எதிர் சிறீதரன் என்கிற நிலையை பல தரப்பினரும் பேண நினைக்கின்றார்கள். ஆனால், அது ஒப்பீட்டளவில் அவ்வளவு பெரிய விடயமாக இல்லை. ஏனெனில், கட்சியைவ ிட்டு வெளிச் சென்றால், பத்தோடு பதினொன்றாகி விடுவேன் என்கிற பயம் சிறீதரனுக்கு உண்டு. அதுபோல, சிறீதரனை கட்சியை விட்டு அனுப்பினால், கிளிநொச்சிக்குள் கிடைக்கும் வாக்குகளில் ஒரு பகுதியை இழக்க வேண்டி வரும் என்கிற எண்ணம் சுமந்திரனுக்கும் உண்டு. சிறீதரன் கட்சிக்குள் இருக்க வேண்டுமா, இல்லையா என்ற முடிவை எடுக்கும் அதிகாரத்தோடு சுமந்திரன் இருக்கிறார். இது தான் யதார்த்தம்.


அரசியல் குழு, மத்திய குழு தொடங்கி தீர்மானங்களை எடுக்கும் அனைத்துக் கட்டங்களிலும் சுமந்திரனே ஆதிக்கம் செலுத்துகிறார். ஆனாலும், சுமந்திரன் தன்னுடைய அரசியல் குருநாதரான சம்பந்தனின் வழியில் நின்று விடயங்களைக் கையாள நினைக்கிறார். அதாவது, சம்பந்தனின் அனுசரணையோடு தான் எடுத்த அதிரடியான நடவடிக்கையொன்றினால், சி.வி.விக்னேஸ்வரன் என்கிற அரசியல் முதிர்ச்சியற்ற ஒருவரை திடீரென நாயக பிம்பம் சூழ்ந்தது. அதற்கு, வடக்கு மாகாண சபைக்குள் சுமந்திரன் அணி, முன்னெடுத்த முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை என்கிற அம்பு காரணமானது. ஆனால், விக்னேஸ்வரனைச் சுற்றி திடீரென எழுந்த ஆதரவு அலையைக் கண்டதும், சுமந்திரனைக் கொண்டு தான் எய்ந்த அம்பின் நுனியை சம்பந்தனே உடைத்தார்.

அத்தோடு, விக்னேஸ்வரனைச் சுற்றி மேலும் ஆதரவு அலை எழுந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார், கட்சிக்குள் இருந்து நீக்காமல் காலங்கடத்தி விக்னேஸ்வரனை, தனிநபர் கட்சியொன்றின் தலைவராக மாத்திரம் மாற்றினார். அவரைச் சுற்றி ஜனவசிய வட்டங்களை வரைந்தவர்களே, விக்னேஸ்வரனை தூற்றும் காலம் ஏற்பட்டது. அவர், பின்னரான காலத்தில், சாராய அனுமதிப்பத்திரம் வாங்கிக் கொடுக்கும் முகவராக செயற்பட்டதையெல்லாம் காலம் காட்டியது. இன்றைக்கு (22ம் பக்கம் பார்க்க)


**காணி விற்பனை**

சாவகச்சேரி நுணாவிலில் கண்டி வீதி ஓரமாக 4 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இருந்து மேற்குப் புறமாக ஒன்றரை மைல் அளவு தூரத்தில் கண்டி வீதியும் இராசையர் வீதியும் சந்திப்பில் அமைந்துள்ளது. விலை விபரம் பேசித் தீர்க்கப்படும். தொடர்புகளுக்கு 416 5057876


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். எதிர்ப்புகள் அகலும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். பயணங்கள் சாதகமான பலன் தரலாம். குடும்பத்தில் வீண் பிரச்னை ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கை துணையின் செயல்கள் உங்களுக்கு அதிருப்தியை ஏற்படும். பிள்ளைகள் நீங்கள் சொல்வதை கேட்டு நடப்பது ஆறுதலை தரும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளுக்கான தடைகள் அகலும்




ரிஷபராசி அன்பர்களே! மனதில் துணிச்சல் அதிகரிக்கும். எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எங்கும் எல்லோரிடத்திலும் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். அடுத்தவர்களுக்காக உதவிகள் செய்வதில் உற்சாகம் உண்டாகும். வழக்கு விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். குடும்பத்தில் சந்தோஷமும் மன நிம்மதியும் இருக்கும். உறவினர்கள், நண்பர்களின் ஆதரவும் கிடைக்கும். நிதானமாக பேசுவது நல்லது.





மிதுனராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிக்க இருந்த தாமதம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. கணவன் மனைவிக்கிடையே மன மகிழ்ச்சி ஏற்பட அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்துவது நன்மையை தரும். வழக்கு விவகாரங்களில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது.





கடகராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி காண்பீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களால் அதிகப்படி வருமானம் இருக்கும். கணவன், மனைவிக்கிடையே சுமூகமான உறவு காணப்படும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக பாடுபடுவீர்கள். தாய், தந்தையரின் உடல் நிலையில் கவனம் தேவை.





சிம்மராசி அன்பர்களே! தைரியம் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பூமி வீடு மனையால் லாபம் ஏற்படும். சுபகாரியங்கள் நல்லபடியாக நடக்கும். அடுத்தவர்கள் மூலமாக நடக்க வேண்டிய காரியங்கள் நல்லபடியாக நடக்கும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வீர்கள்




கன்னிராசி அன்பர்களே! வீண் செலவுகள் குறையும். பணவரத்து அதிகரிக்கும். எதையும் எதிர்த்து நிற்பதை தவிர்த்து அனுசரித்து செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். அடுத்தவர்களின் நலனுக்காக உழைக்க வேண்டி இருக்கும். சொத்துக்களை வாங்கும் போதும், விற்கும்போதும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபப்படாமல் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது.




துலாம்ராசி அன்பர்களே! மன திடம் அதிகரிக்கும். சுபச்செலவுகள் வந்து சேரும். அடுத்தவர்களுக்காக உதவி செய்வது மற்றும் அவர்களுக்காக பரிந்து பேசும் போது கவனம் தேவை. குடும்பாதிபதி சுக்கிரன் ராசியில் இருக்கிறார். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே சிறு பூசல்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளிடம் நிதானமாக பேசுவது நல்லது. தொழில் ஸ்தானத்தை புதன் பார்ப்பதால் சிறு பிரச்னைகள் தோன்றி மறையும்.





விருச்சிகராசி அன்பர்களே! சுபச் செலவுகள் அதிகமாகும். வீண் பேச்சை குறைப்பது நன்மை தரும். அடுத்தவருக்கு ஜாமீன் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தினரது செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டும்படியாக இருக்கலாம். நிதானத்தை கடைபிடிப்பது வீண் பிரச்னை ஏற்படாமல் தடுக்கும். வாழ்க்கை துணை ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நன்மை தரும். எதைப் பற்றியும் விவாதிப்பதை தவிர்ப்பது நல்லது.








தனுசுராசி அன்பர்களே! கடும் முயற்சிக்கு பிறகு எந்த ஒரு காரியத்திலும் லாபம் உண்டாகும். வெளியூர் அல்லது வெளி நாட்டு பயணம் மூலம் நன்மை உண்டாகும். தொலை தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக வந்து சேரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் அவ்வப்போது ஏதாவது சிறு மனஸ்தாபங்கள் ஏற்பட்டு மறையும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் உண்டாகும்.




மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியத்தை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். சிலருக்கு உங்கள் செல்வாக்கை கண்டு பொறாமை உண்டாகலாம். எதிர்ப்புகள் விலகும். காரிய தடைகள் நீங்கும். வீடு மனை சம்பந்தப்பட்ட விஷயங்களில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். தடைபட்டிருந்த வீடுப் பணிகள் நிறைவடையும்.




கும்பராசி அன்பர்களே! காரியங்களில் இருந்த சுணக்க நிலை மாறும். முயற்சிகளில் நல்ல பலன் காண்பீர்கள். சகோதரர்கள் வழியில் இருந்த பிரச்னைகள் நீங்கும். குடும்பத்தினரின் செயல்கள் நன்மை அளிக்கக்கூடிய வகையில் இருக்கும். எந்த விஷயத்தையும் கணவன், மனைவிக்கிடையே திட்டமிட்டு செய்வது நன்மை தரும். குழந்தைகள் உங்கள் சொற்படி கேட்டு நடப்பது மனஅமைதியை தரும்.




மீனராசி அன்பர்களே! நீங்கள் செய்யும் காரியங்கள் வெற்றியை தரும். சாதூர்யமாக பேசி எதிலும் வெற்றி காண்பீர்கள். அனுபவப்பூர்வமான அறிவுத்திறன் அதிகரிக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் மனம் மகிழும்படியான நிகழ்ச்சி நடக்கும். வீடு, வாகனம் வாங்கும் எண்ணம் அதிகரிக்கும். கணவன் மனைவிக்கிடையே ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வதன் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# சமஷ்டி அரசியல் அடுப்புக்குள் சட்டி

(16ம் பக்கத் தொடர்ச்சி) சொல்கிறார் என்பது இனியும் இரகசியமா.....? இலங்கைச் சூழலில் அது சாத்தியமா....? ஒரு காலனித்துவ ஆட்சி முடிவுக்கு வரும் போது அந்த நாடு காலனித்துவம் தொடங்கிய நிலைக்கு மீள வழங்கப்பட வேண்டும். அரசியல் தீர்வு என்பது 13A கூட்டாட்சி, ஒற்றையாட்சி ஆகிய கட்டமைப்புக்களுக்குள் சுருக்கப்படக் கூடாது இப்படிக் கோருகிறது தமிழ் டயஸ்போரா.

இந்த கருத்துக்கள் ஆளுக்கொரு கருத்துக்களுடன் இருக்கும் தமிழ்த்தேசிய தரப்புக்கள் ஒரு சாத்தியமான தீர்வை மாகாணசபை முறைமையை அடிப்படையாகக் கொண்டு அடைவதற்கு எவ்வளவுக்கு குறுக்கே நிற்கின்றன என்பதை காட்டுகிறது. இந்த கருத்து இடைவெளியை குறைக்கவே சுவிஸ் அரசின் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அதற்கும் தமிழ் மேலாண்மை அரசியல் கனவுகள் தடையாகவுள்ளன.

இந்த நிலையில் அரசாங்கம் புதிய அரசியல் அமைப்பு பற்றி பேசுகிறது. ஒரு பகுதியினர் பாராளுமன்ற பெரும்பான்மையை நம்புகின்றனர். வடக்கு கிழக்கு இணைப்பு கோரிக்கை சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறது. சுவிஸ் சமூக ஜனநாயகக் கட்சி தமிழர்களின் வாக்குகளை பெறுவதற்காக இனப்படுகொலை, போர்க்குற்றங்களுக்காக சர்வதேச விசாரணையை கோருகிறது. நிலத்திலும், புலத்திலும் தங்களைத் தாங்களே தமிழ்மக்களின் பிரதிநிதிகள் என்ற கற்பனையில் ஈழத்தமிழர்களின் இருப்பை அழித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த தமிழர் அரசியல் உளவியல் சாதகமாக அமையப் போவது யாருக்கு?

# இன்னொரு விக்கினேஸ்வரன் ஆகிறாரா ஶ்ரீதரன்?

(21ம் பக்கத் தொடர்ச்சி) விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய அரசியலில் ஒன்றுமேயில்லை. இது, சம்பந்தனின் அணுகுமுறையினால், நிகழ்த்தப்பட்டது. தன்னுடைய அரசியல் குருவின் பாதையில் பயணிக்கும் கட்டத்திற்கு சுமந்திரன் இன்றைக்கு வந்திருக்கிறார். அதற்கு அவரின் வயதும், கடந்த கால அனுபவங்களும் காரணமாக இருக்கலாம்.

சிறீதரன், ஒரு போதும் தமிழரசுக் கட்சியை விட்டுச் செல்ல மாட்டார். அது எப்படியென்றால், எதிர்கால தேர்தல்களில், யாழ் தேர்தல் மாவட்டத்தில் வீட்டுச் சின்னத்தின் கீழ் சிறீதரனும், சமத்துவக் கட்சியின் முருகேசு சந்திரகுமாரும் போட்டியிடும் சூழல் ஏற்பட்டாலும், அவர் வெளியேற மாட்டார். சிறீதரனைக் காட்டிலும் வீட்டுச் சின்னம் பெரியது என்ற யதார்த்தம் அவருக்குத் தெரியும். அதனால், அவர் தானாக கட்சியை விட்டு ஒருபோதும் செல்ல மாட்டார். அப்படி வெளியேறிய பலரும், தமிழ் அரசியலில் காணாமற்போன காட்சிகளையும் அவர் தெளிவாக உள்வாங்கியிருக்கிறார்.

அதனால், சிறீதரன் தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறி விடுவார் என்று யாரும் நம்ப வேண்டியதில்லை. அதுபோல, அவரை தமிழரசுக் கட்சி, குறிப்பாக சுமந்திரன் கட்சியை விட்டு வெளியேற்றும் முடிவை எடுக்கவும் மாட்டார். 'ஊறப் போட்டு அடிப்பது...' என்ற அணுகுமுறையை சுமந்திரன் இப்போது கையில் எடுத்திருக்கிறார். சிறீதரனின் அரசியல் என்பது இப்போது, சுமந்திரனுக்கு எதிரான நபராக தன்னை முன்னிறுத்திக் கொள்வதின் மூலம் அனுதாப அரசியலுக்கான வழியை தேர்தெடுப்பதாகும். அதற்கான உள்கட்ட வேலைகளைச் செய்வதில் சிறீதரன் அளவுக்கு யாரும் இல்லை என்பதுவும் உண்மை. ஆனால், அவரின் பிரச்சினை என்னவென்றால், அவரைச் சுற்றியுள்ள கொடுங்கரங்களின் அழுத்தமாகும். அரசியலமைப்புப் பேரவைக்குள் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக எட்டுத் தடவைகள் வாக்களித்திருக்கிறார். அதுவும், இராணுவ அதிகாரிகளுக்காகவும் வாக்களித்திருக்கிறார் என்றால், அவரின் மீது ஏதோவொரு நிர்ப்பந்தம் இருப்பதை உணர முடிகின்றது.

தமிழ்த் தேசிய அரசியலின் பெயரினால் பாராளுமன்றம் சென்ற சிறீதரன், இராணுவ மயமாக்கலுக்கு ஆதரவாக ஆளுங்கட்சியின், அதாவது தென் இலங்கை எதேச்சதிகார சக்திகளின் வேலைத்திட்டங்களுக்கு இணங்குவது என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது. இந்த அபாய வெளிக்குள் அவர் சிக்கிக் கொண்டதால், இன்றைக்கு அவர் பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியை இழந்திருக்கிறார். அவருக்கு பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியைக் காட்டிலும், அரசியலமைப்புப் பேரவை உறுப்பினர் பதவி முக்கியமாக இருக்கின்றது என்றால், அது தொடர்பில் சிந்திக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

சிறீதரன் வாக்கு அரசியலில் பெரும் கில்லாடி. ஆனால், அவர் இப்போது சிக்கிக் கொண்டிருக்கும் சகதி, அவரை மீள விடாது. நாளும் பொழுதும் அவர் ஊறப் போட்டு அடிக்கப்படுவார். அந்த வாய்ப்புக்களுக்காக காத்திருப்பவர்கள் ஏராளம் உண்டு. இன்றைக்கு அவரைப் பிணையெடுக்க பெரிதாக யாரும் இல்லை. சுமந்திரனைச் சுற்றி தமிழ்த் தேசிய அரசியலை கட்டமைத்தவர்களில், ஒரு சிலர் மாத்திரமே சிறீதரனுக்கு ஆதரவாக நிற்கிறார்கள். அதுவும், இராணுவத்துக்கு ஆதரவாக வாக்களித்த விடயங்களை அவர்களும் பொது வெளியில் எதிர்க்கிறார்கள். சில அரசியல் பத்தியாளர்கள் சிறீதரனுக்காக நிற்கிறார்கள். அவர்கள், கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் 'பொது வேட்பாளர்' என்கிற காவடியை எடுத்துச் சுமந்த சிலர். அவர்களும் அப்போது, சிறீதரன், பொது வேட்பாளர் ஆதரவு நிலைப்பாட்டுக்காக நின்றார் என்ற ஒற்றைக் காரணத்துக்காகத் தான்.

கிளிநொச்சியில் பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் இருந்து சிறீதரன் நீக்கப்பட்டதற்கு எதிராக கூட்டமொன்று கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தின் ஏற்பாட்டாளர்கள் யார், அதன் ஒருங்கிணைப்பு எப்படி மேற்கொள்ளப்பட்டது என்பது, அனைவருக்கும் தெரியும். ஆனால் அந்தக் கூட்டத்தினால், எந்தச் சலசலப்பும் ஏற்படாது. ஏனெனில், அந்தக் கூட்டத்தின், ஏற்பாடுகளை மேற்கொண்டவர்களே கூட்டத்தில் பங்கெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. அவ்வளவு தூரம் தமிழரசுக் கட்சி கட்டுப்பாடுகளை வைத்துக் கொண்டிருக்கின்றது. இப்போது மாவை சேனாதிராஜா காலத்து தமிழரசுக் கட்சி இல்லை. தீர்மானங்களை தேவை ஏற்படும் பட்சத்தில் தெளிவாக – துரிதமாக எடுக்கிறார்கள். கடந்த காலங்களில் கட்சியின் நிலைப்பாடுகளுக்கு எதிராக நின்றவர்கள், மன்னிப்புக் கடிதங்கள் என்கிற முள்முனையில் நிற்கிறார்கள். அப்படியான நிலையில், தமிழரசுக் கட்சிக்குள் சிறீதரனை முன்வைத்து எழுந்திருப்பது சின்னஞ் சிறு சலசலப்பு. அதனால், எந்த மாற்றங்களும் நிகழ்ந்து விடாது. அந்த எதிர்பார்ப்பு, யாருக்கும் இருக்க வேண்டியதில்லை.

கட்டுரையாளர்:- புருசோத்தமன் தங்கமயில்

# அரபு நாடுகளில் குவிக்கப்பட்டுள்ள...

(14ம் பக்கத் தொடர்ச்சி) படைகளும் அமெரிக்கர்களுக்கு எதிராக பதிலடி கொடுப்பதாக அச்சுறுத்தியுள்ளன. அது ஈராக் அல்லது ஜோர்டானில் உள்ள தளங்களை யுத்தத்துக்குள் பலவந்தமாக இழுத்து வரக்கூடும்.

பிரபலமான பிரிட்டிஷ் பத்தி எழுத்தாளர் டேவிட் ஹெர்ஸ்ட் ஈரானின் இருப்புக்கான யுத்தமானது அரபு உலகின் போராட்டமாகவும் அமையும் என்று குறிப்பிட்டுள்ளார். எனவே இந்தப் பிராந்தியத்தில் உள்ள ஒவ்வொருவரும், இஸ்லாமிய குடியரசுடன் அவர்களின் கடந்தகால வரலாறு எதுவாக இருந்தாலும், ஈரானைப் பாதுகாக்கவும் அதன் இறையாண்மையை உறுதிப்படுத்தவும் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர். ஆதிக்கம் மற்றும் ஆக்கிரமிப்புக்கு எதிராக அரபு நாடுகள் நடத்தும் அதே போராட்டத்தை ஈரான் மிகப் பெரிய அளவில் எதிர்கொள்கின்றது. சுற்றி உள்ள அரபு நாடுகளும் இஸ்ரேல் இந்தப் பிராந்தியத்தின் இராணுவ மேலாதிக்கமாக தன்னை விஸ்தரித்துக் கொள்வதற்கான பாதையில் விரைவாக பயணிக்கின்றது என்றும் இந்த இலக்கை அடைவதற்கான ஒரு இலகுவான வழி அண்டை நாடுகளை துண்டு துண்டாக பிளவுபடுத்துவதே என்பதையும் நன்கு அறிந்துள்ளனர். இது அவர்களிடையே ஒரு வகை அச்சத்தையும் ஏற்படுத்தி உள்ளது

காஸாவின் தாக்கம் இந்தப் பிராந்தியம் முழுவதும் உணரப்படுகின்றது. காஸாவே ஹமாஸ், ஹிஸ்புல்லா மற்றும் ஈரானுக்கு ஒரு இராணுவ தோல்வியாக அமைந்தது. காஸாவின் விளைவு வேறு எதுவும் இல்லை. காஸாவை நசுக்கி மத்திய கிழக்கை மறுவடிவமைப்பதாக நெதன்யாஹூ பலமுறை பல இடங்களில உறுதியளித்துள்ளார். இதற்காக அவர் அடிக்கடி 'மத்திய கிழக்கின் முகத்தை மாற்றுகின்றார்' என்றும் இந்த மோதல் ஒரு 'மறுபிறப்புக்கான போர்' என்றும் டேவிட் ஹெர்ஸ்ட் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், ஈரான் மீது மேற்கொள்ளப்படும் எந்தவொரு அமெரிக்க இராணுவத் தாக்குதலும் ஒரு விரிவான பிராந்திய மோதலைத் தூண்டும் என்று ஈரானின் ஆன்மிக தலைவர் ஆயதுல்லா அலி கமேனி எச்சரித்துள்ளார். அவர்கள் ஒரு யுத்தத்தை தொடங்கினால் இந்த முறை அது ஒரு பிராந்தியப் போராக இருக்கும் என்பதை அமெரிக்கர்கள் அறிந்து கொள்ள வேண்டும்' என்பதே ஈரானின் இறுதி எச்சரிக்கையாகும்.

# ஈரான் மீது தாக்குதல் நடத்த தயாராகி விட்ட அமெரிக்கா?

(4ம் பக்கத் தொடர்ச்சி) இன்னும் உறுதிபடத் தெரிவிக்கவில்லை. அமெரிக்க தலைமை தளபதி தனிப்பட்ட முறையில் இராணுவ நடவடிக்கைக்கு ஆதரவாகவும் எதிராகவும் வாதிட்டார். சிறந்ததொரு அதிரடி நடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஆலோசகர்கள், மும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்த வார இறுதிக்குள் ட்ரம்ப் ஒரு தெளிவான முடிவெடுப்பாரா எனத் தெரியவில்லை. அதை இதைப் பற்றி சிந்திக்க நிறைய நேரத்தை செலவிடுகிறார் என்று வெள்ளை மாளிகை கூறியுள்ளது.

# குடும்பிமலையும் - கார்ல்கஸடவ் லோஞ்சர்களும்

(18ம் பக்கத் தொடர்ச்சி) அதனால் அந்தப் படகும், அதிலிருந்த கடற்படையினரும் உயிர்தப்பினர். அந்தப் படகின் கட்டளை அதிகாரியாக இருந்தவரே பிற்காலத்தில் கடற்படைத் தளபதியாக பொறுப்பேற்ற அட்மிரல் பியால் டி சில்வா.

அப்போது, போர்முனையில் விடப்பட்ட சில தவறுகள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தாமல் போயிருந்தது. தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்ற கார்ல் கஸ்டவ் ஆயுதங்களை வைத்து பல்வேறு ஊகங்களும் வெளியிடப்படுகின்றன. இதன் தொடர் இலக்கத்தை வைத்து இது எப்பொழுது தயாரிக்கப்பட்டது, எவ்வாறு யார் மூலம் கை மாறியிருக்கிறது என்பதை தெரிந்து கொள்ள முடியும், அது முக்கியமானது என அட்மிரல் ரவீந்திர குணரத்ன தனது பத்தியில் குறிப்பிட்டிருக்கிறார். குற்றப்புலனாய்வுப் பிரிவும் அதனையே தேடுவதாக தெரிகிறது. இந்த தேடுதலின் மூலமாக கிடைக்கக் கூடிய முடிவுகள் அதிர்ச்சிகரமான தகவல்களை கூட தரலாம்.

அதேவேளை இந்த ஆயுதங்கள் பற்றிய தகவல்களை ஒன்றும் உள்நாட்டு புலனாய்வு அமைப்புகள் கண்டுபிடிக்கவில்லை. வெளிநாட்டு புலனாய்வு தகவல் மூலத்தில் இருந்தே தெரியவந்திருக்கிறது என்பது ஆச்சரியம். அப்படியானால், இலங்கையின் புலனாய்வு அமைப்புகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன என்ற கேள்வி மீண்டும் எழுந்திருக்கிறது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான தகவல்களை கொடுத்தது இந்திய புலனாய்வு அமைப்பு. அறுகம்குடாவில் இஸ்ரேலியர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படலாம் என புலனாய்வு தகவலை கொடுத்தது அமெரிக்க புலனாய்வு அமைப்பு. இப்பொழுது இந்த கார்ல் கஸ்டவ் ரொக்கட் லோஞ்சர்களைப் பற்றிய தகவல்களை கொடுத்திருப்பதும், ஒரு வெளிநாட்டு புலனாய்வு மூலம் தான். அவர்களுக்கு இந்த தகவல் எப்படிக் கிடைத்தது? அந்தளவுக்கு வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகள் இங்கு வினைத்திறனுடன் இயங்குகின்றன என்பதை இது உணர்த்தியுள்ளது.

# கிரிக்கெட் இராஜதந்திரம்

(13ம் பக்கத் தொடர்ச்சி)இலங்கையினால் தனது மென்சக்தியை பயன்படுத்திக் கொள்ள முடியும். இலங்கையும் சில பிராந்திய, பூகோள அரசியல் சிக்கலுக்குள் மாட்டியிருக்கிறது.சீனாவின் பிடியிலிருந்து முற்று முழுதாக விலக முடியாத சூ ழல் அதற்கு இருக்கிறது. இந்தியாவுக்கு மாற்றாக, தெற்காசியாவில் ஒரு கூட்டமைப்பை உருவாக்குவதற்கு சீனா முற்படுகிறது. அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி, தெற்காசியாவை நோக்கிய பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்துவதையும், சமமான உலகளாவிய நிர்வாகத்தை மேம்படுத்துவதையும் வலியுறுத்தியிருந்தார். அவரது இந்தக் கருத்தின் முழுமைய அர்த்தம் என்னவென்று வெளிப்படுத்தப்படவில்லை. இவ்வாறான நிலையில், இதனைத் தாண்டி இந்திய- பாகிஸ்தான் பிரச்சினைக்கு தீர்வு காணும் இராஜதந்திர முயற்சிகளில் ஈடுபடுவது இலங்கைக்கு சிக்கலானதாகவே இருக்கலாம். இந்த சிக்கலை தாண்டி, அத்தகையதொரு நகர்வை இலங்கை முன்னெடுக்கத் தொடங்கினால், சர்வதேச அரங்கில், இலங்கை தனது மதிப்பை உயர்த்திக் கொள்ளும் வாய்ப்பு உள்ளதை மறுக்க முடியாது.


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation


Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை


Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com




# பொது வாழ்வில் கண்ணியம் மறைந்து விட்டது ட்ரம்ப் பகிர்ந்த காணொலிக்கு ஒபாமா பதிலடி!

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் அவரது மனைவி மிச்செல் ஒபாமாவை இனவெறியைத் தூண்டும் வகையில் சித்தரித்த காணொளிவை தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது சமூக ஊடகத்தில் பகிர்ந்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ட்ரம்ப்பின் 'ட்ரூத் சோஷியல்' தளத்தில் பகிரப்பட்ட அந்த காணொயில், 2020 தேர்தல் முறைகேடுகள் குறித்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் இடம்பெற்றிருந்தன. அதன் இறுதியில், ஒபாமா மற்றும் மிச்செல் ஒபாமாவின் முகங்களை குரங்குகளின் உடலுடன் இணைத்து மிகவும் இழிவாகச் சித்தரிக்கும் ஒரு பகுதி இடம்பெற்றிருந்தது. பின்னணியில் 'The Lion Sleeps Tonight' என்ற பாடல் ஒலிக்கப்பட்டது.

இந்த காணொளிக்கு ஜனநாயகக் கட்சியினர் மட்டுமன்றி, ட்ரம்ப்பின் குடியரசுக் கட்சியினரே கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். குடியரசுக் கட்சியின் ஒரே கறுப்பின செனட்டரான டிம் ஸ்காட், 'இந்த வெள்ளை மாளிகையில் இருந்து நான் பார்த்த மிக மோசமான இனவெறிச் செயல் இது' என சாடினார்.

முதலில் இதனை சாதாரண 'மீம்' (Meme) ஒன்று என நியாயப்படுத்திய வெள்ளை மாளிகை, பின்னர் எழுந்த எதிர்ப்பால் அந்தப் பதிவை நீக்கியது. இது ஒரு ஊழியரால் தவறுதலாகப் பகிரப்பட்டது என்று விளக்கம் அளித்தது.

பிரையன் டெய்லர் கோஹன் என்பவரின் பொட்காஸ்ட் நிகழ்ச்சியில் பங்கேற்ற பராக் ஒபாமா, ட்ரம்ப்பின் பெயரை நேரடியாகக் குறிப்பிடாமல் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்:

பொது வாழ்வில் இருக்க வேண்டிய வெட்கம் மற்றும் கண்ணியம் தற்போது தொலைந்து போய் விட்டது. சமூக ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் ஒருவிதமான 'கோமாளிக்கூத்து' நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், அமெரிக்க மக்கள் இன்னும் நேர்மை மற்றும் இரக்கத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளனர்.'

இது குறித்து செய்தியாளர்கள் கேட்ட போது, 'நான் அந்த வீடியோவின் ஆரம்பப் பகுதியை மட்டுமே பார்த்தேன். இறுதியில் இருந்த அந்தப் படத்தை நான் பார்க்கவில்லை. நான் எந்தத் தவறும் செய்யவில்லை, அதனால் மன்னிப்பு கேட்கத் தேவையில்லை,' என ட்ரம்ப் பதிலளித்தார்.




இந்த விவாதங்களுக்கு மத்தியில், சிக்காகோவில் அமைக்கப்பட்டு வரும் தனது ஜனாதிபதி நூலகம் (Obama Presidential Library) தொடர்பில் ஒபாமா உற்சாகமாக உரையாற்றினார். இது வரும் ஜீன் 2026இல் பொது மக்கள் பார்வைக்காகத் திறக்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வேற்று கிரகவாசிகள் என சொல்லப்படும் ஏலியன்கள் உலகில் இருக்கிறதா இல்லையா என்கிற கேள்வி பல வருடங்களாகவே இருக்கிறது.

அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் ஏலியன்கள் தொடர்பான ஆராய்ச்சிகளை தொடர்ந்து செய்து வருகிறது. பூமி எனும் கிரகத்தில் மக்கள் வசிப்பது போல பிரபஞ்சத்தில் மற்ற கிரகங்களில் ஏலியன் வசிக்கலாம் என குறிப்பிட்ட சதவீதம் பேர் நம்புகிறார்கள்.

ஒரு பக்கம் அடையாளம் கண்டு பிடிக்க முடியாத வாகனங்கள் (UFO) மூலம் ஏலியன்கள் அவ்வப்போது பூமிக்கு வருவதாகவும், சிலர் அதை பார்த்ததாகவும் செய்திகள் வெளியாவதுண்டு. ஆனால் அவையெல்லாம் நிரூபிக்கப்படவில்லை. இந்நிலையில், ஏலியன்கள் இருப்பது உண்மை தான் என அமெரிக்க முன் னாள் அதிபர் ஒபமா கூறியிருப்பது உலக அளவில் விவாதத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஒரு youtube சேனல் நேர்காணலில் பேசிய அவர் 'ஏலியன்கள் இருப்பது உண்மை என நான் நம்புகிறேன். அதே நேரம் நான் நேரில் பார்த்ததில்லை.. வானத்தில் அடையாளம் தெரியாத பொருட்கள் வருவது பற்றி பதிவுகள் இருக்கிறது.

அதேநேரம் Area51 போன்ற ரகசிய இடங்களில் அமெரிக்கா ஏலியன்களை வைத்துள்ளதாக பரவும் கதைகள் முழுக்க கற்பனை மட்டுமே.. ஒரு வேளை அமெரிக்க அதிபருக்கே தெரியாமல் ஒரு சதி திட்டம் மூலம் ஏலியன்களை மறைத்து வைத்திருக்கிறார்களோ என்னவோ எனக்கு தெரியாது' என்று நகைச்சுவையாக பேசினார்.

# இந்தியாவுடன் எந்த ஒப்பந்தமும் இல்லை



கனிம வள ஆய்வு ஒப்பந்தம் குறித்து இந்தியாவினால் எந்தவொரு முன்மொழிவும் எமது அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படவில்லை. அது குறித்து எவ்வித பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்படவில்லை. கனிம வளங்கள் குறித்து தேசிய கனிம வள கொள்கைக்கமையவே எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் 17 பெப் 2026 செவ்வாய்கிழமை இடம் பெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அது 2024ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட முன்மொழிவாகும். எமது அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பேற்ற பின்னர் அவ்வாறு எந்தவொரு ஒப்பந்த முன்மொழிவும் முன்வைக்கப் படவுமில்லை. அது தொடர்பில் எவ்வித பேச்சுவார்த்தைகளும் இடம் பெறவுமில்லை.

இது போன்று பல்வேறு பழைய ஒப்பந்த முன்மொழிவுகள் காணப்படுகின்றன. அவை அனைத்தும் எமது அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப் படவில்லை.

குறிப்பாக பால் உற்பத்தி தொடர்பில் இந்திய நிறுவனமொன்றுடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. ஆனால் எமது அரசாங்கம் அதனை நடைமுறைப்படுத்தவில்லை.

நாம் தேசிய கனிம வள கொள்கையொன்றை வகுத்திருக்கின்றோம். அமைச்சரவை அதற்கு அங்கீகாரமளித்துள்ளது. நாம் அதனை பின்பற்றி அதற்கமையவே கனிம வளங்கள் குறித்த தீர்மானங்களை எடுப்போம் என்றார்.